



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:143 | 08-12-2025 | திங்கள்கிழமை | Free E- Paper

● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி





## இன்றைய பஞ்சாங்கம்

08.12.2025 கார்த்திகை 22
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.18

திதி:
இன்று இரவு 9.51 வரை சதுர்த்தி பின்பு பஞ்சமி.

நட்சத்திரம்:
இன்று காலை 9.39 வரை புனர்பூசம் பின்பு பூசம்

யோகம் :
இன்று அதிகாலை 1.08 வரை சுப்பிரம் பின்பு இரவு 10.37 வரை பிராம்யம் பின்பு ஐந்திரம்.

கரணம் :
இன்று காலை 10.37 வரை பவம் பின்பு இரவு 9.51 வரை பாலவம் பின்பு கௌலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.17 வரை சித்த யோகம் பின்பு காலை 9.39 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 9.39 வரை கேட்டை பின்பு மூலம்.

நல்ல நேரம்
காலை 6.15 – 7.15.
மாலை 1.45 – 2.45
இராகு காலம்
காலை 7.30 – 9.00.

எமகண்டம்
காலை 10.30 – 12.00.

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று சங்கடஹர சதுர்த்தி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# மதுரையை தொழில் நகரமாக்குவதே ஆசை

## முதலீட்டாளர்கள் மாநாட்டில் மு.க. ஸ்டாலின் பேச்சு




**மதுரை, டிச.8:** மதுரையில் நேற்று 'தமிழ்நாடு வளர்கிறது' முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது. முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் ரூ. 37 ஆயிரம் கோடி முதலீடுகளுடன் 56,766 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. பின்னர் இந்த நிகழ்ச்சியில் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:

"தமிழர் நாகரீகம் எந்த அளவுக்கு தொன்மையானது என்பதையே மதுரை எடுத்துக்கூறுகிறது. இந்தியாவின் வரலாற்றை தமிழ்நாட்டிலிருந்து தொடங்கி எழுத வேண்டும் என்று அடிக்கடி கூறி வருகிறேன். தென் தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப மையமாக மதுரை திகழ்கிறது. மாநிலம் சிறப்பாக இருந்தால்தான் முதலீடுகள் கிடைக்கும். 'தூங்கா நகரம்' என்று கூறுவதை விட 'விழிப்புடன் இருக்கும் நகரம்' என்பதே மதுரைக்கு பொருத்தமானது. முதலீடுகள் சாதாரணமாக கிடைத்துவிடாது. ஒரு மாநிலம் சிறப்பாக இருந்தால்தான் நிறுவனங்கள் முதலீடு செய்யும். சட்டம், ஒழுங்கு, தொழிலுக்கு உகந்த சூழல் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தே நிறுவனங்கள் முதலீடு செய்கின்றன. முதலீட்டாளர்களின் முகவரியாக தமிழ்நாடு உள்ளது.

ஒப்பந்தங்கள் செயல்பாட்டுக்கு வர வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளோம். மதுரை கோயில் நகரமாக இருந்தால் மட்டும் போதுமா? தொழில் நகரமாக மாற்ற வேண்டும். பல்வேறு நிறுவனங்கள் தங்கள் தொழில்களை மதுரையில் நிறுவியுள்ளன. மதுரையை தொழில் நகரமாக்குவதே என் ஆசை.மேலூரில் 278.26 ஏக்கரில் பிரமாண்ட சிப்காட் தொழில்நுட்ப பூங்காவிற்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். நாட்டிலேயே அதிக பெண்கள் பணிபுரியும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

ஒன்றிய அரசுடன் இணைந்து விருதுநகரில் பிஎம் மித்ரா ஜவுளிப் பூங்கா அமைகிறது. கப்பல் கட்டும் தொழிலுக்காக ஹூண்டாய் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

தோல் இல்லா காலணி தொழிற்சாலை அமைக்கவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துடன் ₹11,760 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்க உள்ளோம். அதன் மூலம் ஒரு லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும். தமிழ்நாட்டின் வளர்ச்சி பயணத்தில் முதலீட்டாளர்களின் ஒவ்வொருவரின் பங்கும் அவசியம். மாநிலம் முழுவதும் சீரான வளர்ச்சி.மாவட்டம் தோறும் பரவலான வளர்ச்சி என நிரூபித்து காட்டியுள்ளோம். முதலீடுகள் சாதாரணமாக கிடைத்துவிடாது. முதல் அமைச்சர் கேட்டார் என்பதற்காக முதலீடு செய்துவிட மாட்டார்கள்.

மதுரைக்கு பூங்கா நகரம் என்ற பெயரும் உள்ளது. அரசு மீது நிறுவனங்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கைக்கு நன்றி" இவ்வாறு அவர் பேசினார்.

# வந்தே மாதரம் பாடல் விவாதம்: மக்களவையில் பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்



**புதுடெல்லி, டிச.8:** இந்தியா ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு இருந்த காலத்தில் நாட்டு மக்களிடையே தேசப்பற்றை தூண்டும் விதத்தில் வங்காளத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பங்கிம் சந்திர சட்டர்ஜி, வந்தே மாதரம் பாடலை இயற்றினார். 1870-களில் இயற்றப்பட்ட இந்த பாடலுக்கு ஜாது நாத் பட்டாச்சார்யா இசை அமைத்தார். இது 1905-ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் நாடு சுதந்திரம் அடைந்து குடியரசு நாடாக ஆனதற்கு 2 நாட்களுக்கு முன்பு அதாவது 1950-ம் ஆண்டு ஜனவரி 24-ந் தேதி தேசிய பாடலாக இது அங்கீகரிக்கப்பட்டது.

இந்த பாடலின் 150-வது ஆண்டு விழா கடந்த மாதம் 7-ந் தேதி கொண்டாடப்பட்டது. டெல்லி இந்திராகாந்தி விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி, வந்தே மாதரம் பற்றிய சிறப்பு நாணயம் மற்றும் தபால் தலையை வெளியிட்டு பேசினார். அவரது உரையில் காங்கிரஸ் மீது குற்றச்சாட்டு இருந்தது.

இந்தநிலையில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு விழா குறித்த விவாதம் நடைபெற இருக்கிறது. "தேசியப் பாடலான வந்தே மாதரத்தின் 150-வது ஆண்டு விழா குறித்த விவாதம்" என்ற தலைப்பில் பட்டியலிடப்பட்டு இருக்கும் இந்த விவாதத்தை பிரதமர் மோடி நாளை மக்களவையில் தொடங்கி வைக்கிறார்.

பிரதமரை தொடர்ந்து பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் இந்த விவாதத்தில் உரையாற்றுகிறார். அதன்பிறகு பிற கட்சிகளின் தலைவர்கள் பேசுகிறார்கள். மக்களவையில் எதிர்க்கட்சி துணைத்தலைவர் கவுரவ் கோகாய் மற்றும் பிரியங்கா காந்தி ஆகியோருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது.

# அடுத்த இலக்கு சுங்க வரி சீர்திருத்தம்: நிதியமைச்சர் தகவல்

**புதுடெல்லி, டிச.8:** டெல்லியில் நேற்று நடைபெற்ற இந்துஸ்தான் டைம்ஸ் லீடர்ஷிப் கூட்டத்தில் பங்கேற்ற நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது:

வருமான வரிகளில் தற்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. மிக குறைவாகவே வரி வசூலிக்க நாங்கள் விரும்புகிறோம். இதேபோல் சுங்க வரியிலும் சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.கடந்த 2 ஆண்டுகளாக நாங்கள் சுங்க வரிகளை தொடர்ந்து குறைத்து வருகிறோம். இதில் சீர்திருத்தத்தை கொண்டு வருவது தான் எங்களின் அடுத்த மிகப் பெரிய வேலை. இவ்வாறு நிர்மலா சீதாராமன் கூறினார்.

# டிச.10ம் தேதிக்குள் விமான சேவைகள் சரியாகும்..!- இண்டிகோ நிறுவனம்




**புதுடெல்லி, டிச.8:** உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் அனைத்து இண்டிகோ விமான சேவைகளை ரத்துசெய்தது. சில இடங்களுக்கு செல்ல வேண்டிய விமானங்கள் பல மணி நேரம் தாமதமாக புறப்பட்டன. இதனால் பயணிகள் கடுமையாக பாதிப்பு அடைந்தனர்.

இதைதொடர்ந்து, இண்டிகோ நிறுவனம் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், ரத்து செய்யப்பட்ட இண்டிகோ விமானங்களில் டிக்கெட் முன்பதிவு செய்திருந்த பயணிகளுக்கு விமான கட்டணம் தானாகவே திருப்பிச் செலுத்தப்படும் என அந்நிறுவனம் அறிவித்தது.

டிசம்பர் 5 முதல் 15ம் தேதி வரை பயணிகள் டிக்கெட் ரத்து செய்தல் அல்லது வேறு தேதிகளுக்கு மாற்றுதல் உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகளுக்கும் எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படாது. பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு வருந்துகிறோம் என பதிவிட்டது.

இந்நிலையில், இண்டிகோ விமான சேவைகள் வரும் டிச.10ம் தேதிக்குள் வழக்கம்போல இயங்கும் வகையில் சரிசெய்யப்படும் என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

சேவைகள் முழுமையாக சரியாக 2026 பிப்.10 வரை ஆகும் என முன்னர் தெரிவித்திருந்த நிலையில், விரைவில் சரியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று மட்டும் சுமார் 650 இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலத்தை திறந்துவைத்தார் முதல்வர் ஸ்டாலின்!

**மதுரை**, டிச.8: மதுரை, மேலமடை சந்திப்பு பகுதியில் ரூ.150 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 4 வழித்தடச் சாலை சந்திப்பு மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'மதுரை தொண்டி சாலை (SH 33) மதுரை மாவட்டத்தில் உள்ள முக்கியமான மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையானது மதுரை மாநகரிலிருந்து சிவகங்கை செல்வதற்கும் மதுரை வட்டச்சாலையை அணுகுவதற்கும் பயன்படுவதால் மேலமடை சந்திப்பில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.



மதுரை மாநகருக்குள் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க பல்வேறு இடங்களில் சாலை மேம்பாலம் மற்றும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் 21.1.2022 அன்று மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்தார்.

அதன்படி மதுரை தொண்டி சாலையில் உள்ள மேலமடை சந்திப்பில் சாலை மேம்பாலம் ஒன்று அமைப்பதற்கும், மிகவும் நெரிசல் மிகுந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆவின் மற்றும் மேலமடை சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து சிக்னலை அப்புறப்படுத்தி அப்பகுதியினை அகலப்படுத்தி வட்ட வடிவ சந்திப்பு அமைப்பதற்கும் 150.28 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகளுக்கு 30.10.2023 அன்று முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

அதன் தொடர்ச்சியாக, மதுரை மாவட்டம், மேலமடை சந்திப்பில் 950 மீட்டர் நீளத்திற்கு நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் கட்டப்பட்டு, மேலமடை சந்திப்பு, ஆவின் சந்திப்பு மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக சந்திப்பு ஆகிய 3 சந்திப்புகளிலும் ரவுண்டானாவுடன் கூடிய சாலை சந்திப்பு மேம்பாடு செய்யப்பட்டு, பாலத்தின் இருபுறமும் தலா 7.50 மீட்டர் அகலமுள்ள 2 வழித்தடச் சேவைச் சாலைகள், மாவட்ட ஆட்சியர் அலுவலக சந்திப்பு முதல் மேம்பாலம் வரை தலா 7.5 மீட்டர் அகலமுள்ள நான்கு வழித்தடச் சாலைகள், மூன்று சாலை சந்திப்புகள் மேம்பாடு, சந்திப்புகளில் சிக்னல் இல்லா பயணம், தடையில்லா இடதுபுறம் திரும்புதல் (Free Left), பேருந்து நிறுத்தத்திற்கு தனி இடவசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இச்சாலை சந்திப்பு மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது.

இம்மேம்பாலத்திற்கு "வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம்" என்று பெயர் சூட்டப்படும் என்று நேற்று முதல்வர் அறிவித்தார். அதன்படி, வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதல்வர் இன்று திறந்து வைத்தார். இதன் மூலம், சிவகங்கை சாலையில் கோரிப்பாளையம் முதல் சுற்றுச்சாலை வரை போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, பயண நேரமும் 15 நிமிடத்திலிருந்து 5 நிமிடமாக குறையும்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர். எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வக்பு சொத்துக்களை பதிவு செய்வதற்கான காலக்கெடு நிறைவு:மத்திய அரசு

புதுடெல்லி, டிச.8: சிறுபான்மையினர் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்தியாவில் வக்பு சொத்து விவரங்களைப் பதிவு செய்து நிர்வகிப்பதற்காக உமீத் என்ற தளம் 2025 ஜூன் 6 அன்று தொடங்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் தெளிவான வழிகாட்டுதல்களின்படி 6 மாத கால அவகாசம் நிறைவடைந்துள்ளது. நேற்றுடன் (டிசம்பர் 6, 2025) பதிவு செய்வதற்கான கெடு நிறைவடைந்தது.

காலக்கெடு நிறைவடையும் இறுதி நாட்களில் பதிவுகள் கணிசமாக அதிகரித்தது. இது தொடர்பாக நடத்தப்பட்ட மறுஆய்வுக் கூட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள், உயர் மட்ட தலையீடுகள் காரணமாக இதன் செயல்பாடு புதிய வேகத்துடன் இருந்தது.

இதனால் கடைசி மணி நேரங்களில் பதிவேற்றம் அதிகரித்தது.

இந்த தளத்தில் 5,17,040 வக்ஃப் சொத்துக்கள் பதிவேற்றப்பட்டன. 2,16,905 சொத்துக்கள், அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டன. 2,13,941 சொத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

சரிபார்ப்பின் போது 10,869 சொத்துக்கள் நிராகரிக்கப்பட்டன.

இந்த மிகப்பெரிய தேசிய அளவிலான முயற்சிக்காக, சிறுபான்மையினர் விவகார அமைச்சகம் மாநில மற்றும் யூனியன் பிரதேச வக்பு வாரியங்களுடனும் சிறுபான்மையினர் நலத் துறைகளுடனும் தொடர்ச்சியான பயிலரங்குகளையும் பயிற்சி அமர்வுகளையும் நடத்தியது. நாடு தழுவிய அளவில் 7 மண்டலக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பதிவேற்றங்களின் போது எழும் சிக்கல்களைத் தொழில்நுட்ப ரீதியாக விரைவாகத் தீர்க்க, அமைச்சக அலுவலகத்தில் ஒரு பிரத்யேக உதவி மையம் அமைக்கப்பட்டது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.







## திருக்குறள் குறள்-463

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்



பின் விளையும்
ஊதியத்தைக் கருதி
இப்போது கையில்
உள்ள முதலை இழந்து
விடக் காரணமாச்
செயலை அறிவுடையோர்
மேற்கொள்ள மாட்டார்.

## சிந்திக்க ஒரு நொடி



திறக்க முடியாத
கதவுகளையும்
திறக்கும் ஒரு
திறவுகோல் நம்மிடம்
உள்ளது.....

அதன் பெயர் தான்
துணிவு....

உஷாமுத்துராமன்

## சபரிமலையில் ஐயப்ப பக்தர்களுக்கு வழங்க தமிழ்நாட்டு திருக்கோயில்கள் & உபயதாரர்கள் சார்பில் 5 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகள்



சென்னை - பாரிமுனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சபரிமலையில் ஐயப்ப பக்தர்களுக்கு வழங்கிடும் வகையில் தமிழ்நாட்டு திருக்கோயில்கள் & உபயதாரர்கள் சார்பில் முதற்கட்டமாக 5 லட்சம் பிஸ்கட் பாக்கெட்டுகளை அமைச்சர் சேகர்பாபு, அறநிலையத்துறை ஆணையர் ஸ்ரீதர் அனுப்பி வைத்தனர்.

## விளையாட்டுப் போட்டிகள்



குன்னூரில் மூத்தகுடிமக்களை மகிழ்விக்கும் வகையில் சஹானா இசை உறவுகள் அமைப்பு சார்பில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடந்தன.

## மக்கள் நீதி மய்யம் சார்பில் 150 பேர் ரத்ததானம்



விருதுநகரில் மக்கள் நீதி மய்யம் சார்பில் நேற்று நடந்த ரத்த தான முகாமில் 150 பேர் ரத்ததானம் செய்தனர்.

## கஞ்சித்தொட்டி திறக்கும் போராட்டம்



சங்கரன்கோவிலில் விசைத்தறி தொழிலாளர்கள் கூலி உயர்வு ஒப்பந்தத்தை அமல்படுத்தக் கோரி கஞ்சித்தொட்டி திறக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## அதிமுகவினர் திமுகவில் சேர்ந்தனர்



கரூரில் மாவட்ட செயலாளர் செந்தில்பாலாஜி முன்னிலையில் அதிமுகவினர் திமுகவில் சேர்ந்தனர்.

## திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



விக்கிரவாண்டியில் திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திற்கு பிறகு நிர்வாகிகளுடன் துணை முதல்வர் உதயநிதி குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

## வலங்கைமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மேலாண்மைக் குழு கூட்டம்



**திருவாரூர்,டிச.08:**

வலங்கைமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மேலாண்மைக் குழு கூட்டம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மேலாண்மைக் குழு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மேலாண்மைக் குழு தலைவர் எஸ்.சுமத்ரா தலைமை வகித்தார், கூட்டத்தில் பள்ளியின் தலைமை ஆசிரியர் மு.நாவளவன், பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகதலைவர் க.செல்வம், பொருளாளர் சிங்குதெரு எஸ்.ஆர். ராஜேஷ், மேலாண்மைக் குழு துணை தலைவர், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

01.இடைநின்ற மாணவர் களைப் பள்ளிக்கு அழைத்து வருவோம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

02.ஆதார் முக்கியத்துவம் மற்றும் புதுப்பித்தல் சார்ந்த தகவல்களை அறிந்து அனைத்து மாணவர்களும் பயோ மெட்ரிக் புதுப்பிக்கப்பட்ட ஆதார் பெறுவதை உறுதி செய்ய தீர்மானிக்கப்பட்டது.

03.மாணவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல் பயிற்று மொழி பாடப்பிரிவுகளின் எண்ணிக்கை அடிப்படையில் 4 வகுப்பறை கட்டித்தர அரசிடம் கோரிக்கை வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

04. மாணவர் வருகை தாமதத்தை குறைக்க பள்ளிக்கு காலை வழிபாட்டுக் கூட்டத்திற்கு வரும் மாணவர்களை கண்டறிந்து குறிப்பிட்ட நேரத்திற்கு பள்ளிக்கு வர ஆலோசனை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் ஏராளமான பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## 41 மணி நேர தொடர் பஜனை



ராஜபாளையம் சொக்கர் கோயிலில் ஐயப்பன் சன்னதி முன் பக்தர்கள் 41 மணி நேர தொடர் பஜனையில் பங்கேற்றனர்.

## கவர்னர் ரவி கொடி நாள் நிதி



சென்னை கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடேவிடம், கொடி நாள் நிதியாக கவர்னர் ரவி ரூ.5 லட்சம் நன்கொடை வழங்கினார்.

## இந்து முன்னணி, பாஜகவினர் ஆர்ப்பாட்டம்



மதுரையில் தமிழக அரசை கண்டித்து இந்து முன்னணி, பாஜகவினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## இந்து முன்னணி சார்பில் ஆர்ப்பாட்டம்



திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றக்கோரி இந்து முன்னணி சார்பில் ராமேஸ்வரத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

## வெள்ளாண்டிவலசு ஓம் சக்தி காளியம்மன் கோயில் குடமுழுக்கு விழா



எடப்பாடி அருகே வெள்ளாண்டிவலசு ஓம் சக்தி காளியம்மன் கோயில் குடமுழுக்கு விழா நேற்று நடந்தது.

## மாட்டு வண்டி, குதிரை வண்டி பந்தயம்



புதுக்கோட்டையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி மாட்டு வண்டி, குதிரை வண்டி பந்தயம் நடந்தது.இதில் வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், முத்துராஜா எம்எல்ஏ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## 32-ம் ஆண்டு பாரதி திருவிழா



வானவில் பண்பாட்டு மையம் மற்றும் எட்டயபுரம் சமஸ்தானம் சார்பில் 32-ம் ஆண்டு பாரதி திருவிழா அரண்மனை வளாகத்தில் நேற்று நடந்தது. சமஸ்தானம் சார்பில் பாரதியார் சிலையை தொழிலதிபர்கள் வி.ஜி. சந்தோஷம், நல்லி குப்புசாமி செட்டியார் ஆகியோர் திறந்துவைத்தனர்.

## ஆகுவாகன விநாயகர் கோயில் மகா கும்பாபிஷேகம்





செய்யாறு- வெங்கட்ராயன் பேட்டையில் அருள்மிகு ஆகுவாகன விநாயகர் கோயில் மகா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

## சீர்காழியில் உலக மண் தினம் கொண்டாட்டம்



**சீர்காழி , டிச , 08:**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகரில் அமைந்துள்ள சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் டிசம்பர் 5 தேதி அன்று உலக மண் தினம் தமிழக பள்ளிக்கல்வித்துறை உத்தரவின் படி அனுசரிக்கப்பட்டது.

அதனை முன்னிட்டு பள்ளி வளாகத்தில் பள்ளி உதவி தலைமை ஆசிரியர் என். துளசிரங்கன் தலைமையில் பள்ளி தலைமை ஆசிரியர் எஸ். முரளிதரன் மரக்கன்று நட்டார். நிகழ்ச்சியில் பள்ளி முதுகலை ஆசிரியர் ஜி.சுந்தர்ராஜன், பள்ளி அமைப்புகளான தேசிய பசுமைப்படை மற்றும் சுற்றுச்சூழல் மன்றம் ஆகிய அமைப்புகளை சார்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை பள்ளி சுற்றுச்சூழல் மன்ற பொறுப்பாசிரியர் எஸ். ரமேஷ் ஏற்பாடு செய்திருந்தார். நிறைவாக பள்ளி தேசிய பசுமை படை பொறுப்பாசிரியர் கே. வாசுதேவன் நன்றி கூறினார்.

## 10 சதவிகிதம் கூடுதல் மழை

**சென்னை, டிச.8:**

தமிழ் நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் இயல்பாக 379.3 மில்லி மீட்டர் மழை பெய்யும் நிலையில் டிசம்பர் 6 ஆம் தேதி வரை 416.1 மில்லி மீட்டர் மழை பதி வாகியுள்ளது. சென்னை மாவட்டத்தில் இயல்பை விட 1 சத விகிதம் கூடுதலாக மழை பெய்துள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

## டிச.12 வரை மிதமான மழை



**சென்னை, டிச.8:**

தெற்கு கேரள கடலோரப் பகுதி கள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவு கிறது. இதன் காரண மாக டிசம்பர் 7 முதல் 12ஆம் தேதி வரை தமி ழகத்தில் ஓரிரு இடங் களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசா னது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மை யம் தெரிவித்துள்ளது.

## அன்புமணி மீது போலீசில் புகார்

**சென்னை, டிச.8:**

தேர்தல் ஆணையத்தில் போலி ஆவணங்கள் கொடுத்து கட்சியை அபகரித்து உள்ளதால் குற்ற வியல் வழக்கு பதிய வேண்டுமென்று அன்பு மணி ராமதாஸ் மீது தில்லி போலீசில் ராம தாஸ் தரப்பு பாமக எம்எல்ஏ-வான ஜி.கே. மணி புகார் அளித்து உள்ளார்.

## மகளிர் உரிமைத் தொகை: மேல்முறையீடு செய்யலாம்

**திண்டுக்கல், டிச.8:**

மகளிர் உரிமைத் தொகை கோரி 29 லட்சம் விண் ணப்பங்கள் வந்துள்ள தாகவும், தகுதி இருந்தும் இம்மாதம் 12-ஆம் தேதிக்குள் மகளிர் உரிமைத் தொகை வரவில்லை என்றால் கோட்டாட்சி யரிடம் மேல்முறையீடு செய்யலாம் என உணவுப் பொருட்கள் வழங்கல் துறை அமைச் சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

## அதிமுகவில் தற்போது அண்ணா இல்லை: துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்



**சென்னை, டிச.8:**

தமிழ்நாட்டில் அதிமுக தற்போது பாஜக வின் கிளை அலுவலகமாக செயல்படுகிறது என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அதிமுகவில் தற்போது அண்ணாவும் இல்லை, முன் னேற்றமும் இல்லை. பழனிசாமி முழு சங்கியாக மாறிவிட்டார். அதிமுகவை அமித் ஷா குத்தகை எடுத்து அவரது கண்ட்ரோலில் வைத்துள்ளார் என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

# மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வுக்கு தனி சட்டம் - தனிநபர் மசோதா அறிமுகம்

## மசோதாவை கொண்டுவந்தார் கனிமொழி என்விஎன் சோமு

**புதுடெல்லி, டிச.8:**

நாடு முழுவதும் மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான தனி சட்டத்தை ஏற்படுத்துவதற்கான தனிநபர் மசோதாவை மாநிலங்களவையில் திமுக எம்.பி. கனிமொழி என்.வி.என்.சோமு நேற்று அறிமுகம் செய்தார்.



'மார்பகப் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை சட்டம்-2025' என்ற தலைப்பில் அவர் அறிமுகம் செய்த தனிநபர் மசோதாவின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

புற்றுநோயால் பாதிக்கப்படும் பெண்களில் நான்கில் ஒருவர் மார்பகப் புற்றுநோய்க்கு ஆளாகிறார்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 2040-ம் ஆண்டு வாக்கில் மார்பகப் புற்றுநோயால் உயிரிழக்கும் பெண்களின் எண்ணிக்கை 64 சதவீதம் உயரும் ஆபத்து இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிலும் இந்த நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது. 2023-ம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் 2.12 லட்சம் பெண்கள் மார்கப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது.

மேலும், 20 முதல் 30 வயது வரையிலான பெண்களிடையே இந்நோய்க்கான அறிகுறிகள் தோன்றி 50 முதல் 65 வயது வரைக்குள்ளாக அதன் தீவிரத்தன்மையை அடைகிறது. இந்த ஆண்டில் அக்டோபர் 2025 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் 2,52,108 பெண்கள் இந்நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நோய் குறித்தவிழிப்புணர்வு இல்லாததும், சுய பரிசோதனை செய்துகொள்வதில் உள்ள தயக்கம் காரணமாகவும் நோய் முற்றிய நிலையிலேயே பாதிப்பு பற்றி தெரிகிறது. இதனால் சரியான சிகிச்சையை உரிய நேரத்தில் பெற முடியாமல் போகிறது.

இந்த சட்டம் நிறைவேறுவதன் மூலம் மார்பகப் புற்றுநோயிலிருந்து இந்திய இளம்பெண்களைப் பாதுகாக்கும் வகையில், மத்திய - மாநில அரசுகள் இணைந்து, இலவசப் பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யலாம்.

மருத்துவ முகாம்கள் நடத்தி இலவசமாக மருந்துகளை வழங்கலாம். மேமோகிராபி போன்ற சோதனைகளை அனைத்துத் தரப்பு பெண்களும் இலவசமாகப் பெற வழி ஏற்படும்.

இன்னொரு அம்சமாக மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகளை தொடக்கத்திலேயே தெரிந்துகொள்ளும் வகையில் நாடு தழுவிய விழிப்புணர்வு முகாம்களை நடத்த வேண்டும். இந்த மசோதா, சட்டமாக நிறைவேறினால், மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு அவ்வப்போது போதிய நிதியை வழங்கி மேற்சொன்ன மருத்துவ முகாம் ஏற்பாடுகள் மற்றும் இலவச சிகிச்சைகள் அளிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

இந்த விபரங்கள் அடங்கிய மசோதாவை மாநிலங்களவையின் பரிசீலனை மற்றும் ஒப்புதலுக்காக கனிமொழி என்.வி.என்.சோமு தாக்கல் செய்தார்.

இதுதவிர, மக்கள் தொகை கட்டுப்படுத்துவது, சட்டவிரோத குழந்தைகள் தடுப்பு தொடர்பாக தனித்தனி மசோதாக்களையும் அவர் அறிமுகம் செய்தார்.

# திமுக ஆட்சிக்கு வந்ததில் இருந்து 161 கோயில்களை இடித்திருக்கிறது: அண்ணாமலை குற்றச்சாட்டு

**சென்னை, டிச.8:**

பாஜக மாநில முன் னாள் தலைவர் அண்ணா மலை சென்னையில் செய் தியாளர்க ளிடம் நேற்று கூறியதாவது: திருப்பரங்குன் றம் மலையில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றுவது தொடர்பான நீதிபதியின் தீர்ப் பில் ஆட்சேபனை இருந்தால், நியாயப்படி தர்காதான் முறை யீடு செய்திருக்க வேண்டும். ஆனால், கோயில் செயல் அலு வலர் முறையீடு செய்திருக் கிறார்.

அவரை, திமுக தூண்டி விட்டிருக்கிறது. காவல் துறை தங்கள் கடமையை சரிவர செய் யாததால், மத்திய தொழில் பாதுகாப்புப் படை திருப்பரங் குன்றத்துக்கு அனுப்பிவைக் கப்பட்டது. அவர்களை நீதிபதி அனுப்பியதில் எந்தத் தவறும் இல்லை. 2005-ம் ஆண்டில் நடந்த அமைதிக் குழு பேச் சுவார்த்தையின்போது, தர்கா இருக்கும் இடத்திலிருந்து 15 மீட் டர் தொலைவில் தீபம் ஏற்றலாம் என முஸ்லிம்கள் கையெழுத் திட்ட ஆவணம் இருக்கிறது. எனவே, தீபம் ஏற் றுவதில் முஸ்லிம்களுக்கு எந் தப் பிரச்சினையும் இல்லை. திருப்பரங்குன்றம் மலைக்கு சிக்கந்தர் மலை என்று பெயர் வைத்ததையும், ராமநாதபுரம் எம்.பி. சிக்கன் பிரியாணி சாப் பிட்டதையும், நெல்லித்தோப் பில் ஆடு வெட்டுவோம், கோழி வெட்டுவோம் என்று கூறுவதை யும் திமுக அரசு ரசிக்கிறது. பக்தர்களுக்கு எதிராக திமுக அரசியல் செய்து கொண்டிருக் கிறது. திமுக ஆட்சிக்கு வந்த தில் இருந்து 161-க்கும் மேற் பட்ட கோயில்கள் இடிக்கப் பட்டுள்ளன. நீதிமன்றம் உத் தரவிட்டதால் சில கோயில் களை இடித்தோம் என்கிறார் கள். இடித்து அப்புறப்படுத் துவதற்கு மட்டும் நீதிமன்றம் வேண்டுமாம். தீபத் தூணில் தீபம் ஏற்றுங்கள் என்றால், நீதி மன்றம் கூறுவதைக் கேட்க மாட்டார்களாம். இதுவரை எத் தனை தேவாலயங்கள், மசூதி களை இடித்திருக்கிறார்கள்? முதல்வர் தனது சமூக வலை தளப் பக்கத்தில் "மதுரைக்கு தேவை வளர்ச்சி அரசியலா அல்லது... அரசியலா என்று பதிவிட்டிருக்கிறார். ஒரு முதல் வர் போடும் பதிவா இது? திருப் பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற பாஜக தொண் டர்கள் உயிரைக் கொடுத்து துணை நிற்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## மாதத்திற்கு ஒருமுறையாவது விரதம் இருந்து பழச்சாறு அருந்தினால் நச்சுகள் நீங்கும்!



மாதத்துக்கு ஒரு முறையாவது விரதம் இருப்பது உடலுக்கு நல்லதாகும். விரதம் இருப்பதால் குடல் இயக்கங்கள் சீராகி அவை ஆரோக்கியமாக இருக்க வழி வகுக்கிறது. இத்தகைய சிறப்புமிக்க விரதத்தில் பல வகைகள் உண்டு. ஒவ்வொருவருடைய உடல் நிலைக்கு ஏற்ற வகையில் விரதம் இருப்பது நல்லது.

சிலர் குறிப்பிட்ட இடைவெளி விட்டு உணவு உண்ணும் விரதத்தை கடைப்பிடிப்பார்கள். சிலர் ஒருவேளை மட்டுமே சாப்பிட்டு விரதம் இருப்பார்கள். ஒரு சிலர் ஒரு நாள் முழுவதும் எதுவுமே சாப்பிடாமல் விரதம் இருப்பார்கள். இதன் வரிசையில் வெறும் ஜூஸ் மட்டுமே குடித்து விரதம் இருப்பதால் நம் உடலில் ஏற்படும் நன்மைகள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

பழச்சாறுகள் உடலுக்குத் தேவையான அனைத்து வகையான ஊட்டச்சத்துக்களையும் கொடுக்கக் கூடியதாகும். இது நம்முடைய உடலுக்குத் தேவையான திரவ சத்துக்களை வழங்குகிறது. இதனால் உடலில் உள்ள நச்சுக்கள் நீங்கி புத்துணர்ச்சி ஏற்படும்.

ஜூஸ் விரதம் (JUICE FASTING) இருப்பதால் நம்முடைய செரிமான அமைப்பு நன்கு வேலை செய்யும். இதனால் உடலுக்குத் தேவையான ஆற்றல் கிடைத்து, உடலின் பிரச்னைகளை சரி செய்ய வழிவகுக்கிறது.

பழச்சாறுகளில் நிறைந்துள்ள ஊட்டச்சத்துக்கள் நமது இரத்த ஓட்டத்தில் பாய்ந்து, ஒவ்வொரு செல் மற்றும் திசுக்களை துடிப்புடன் வைத்திருக்க உதவுகிறது. தொடக்கத்தில் ஜூஸ் விரதம் முயற்சி செய்யும்போது நன்கு பசி எடுக்கும். பின்னர் படிப்படியாக பசி உணர்வு குறைய ஆரம்பிக்கும். உடல்நிலை பாதிப்பு உள்ளவர்களும், கர்ப்பிணிப் பெண்களும் ஜூஸ் விரதம் இருக்கும் முன்பு மருத்துவர்களை ஆலோசிப்பது நல்லது.

ஜூஸ் விரதம் இருப்பதால் உடலுக்குத் தேவையான ஆன்ட்டி ஆக்சிடென்ட், வைட்டமின்கள் போன்றவை கிடைக்கிறது. இது ஒருவரின் சரும ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும். ஜூஸ் விரதம் இருக்கும்போது தசைகள் இழப்புக்கு வாய்ப்புள்ளதா? என்ற சந்தேகம் சிலருக்கு இருக்கும். அத்தகையவர்கள் புரதம் நிறைந்த பழச்சாறுகளை எடுத்துக் கொண்டால், உடலில் ஏற்படும் தசை இழப்பைக் குறைக்கலாம்.

நீங்கள் கடைகளில் ஜூஸ் வாங்கி, அதைப் பருகி விரதம் இருக்க முயற்சிப்பவராக இருந்தால் சற்று கவனமாக இருங்கள். ஏனெனில், கடைகளில் விற்கப்படும் பழச்சாறுகளில் சர்க்கரை அதிகமாக சேர்ப்பார்கள். அது உடல் நலத்துக்குக் கேடு விளைவிப்பதாகும். ஜூஸ் விரதம் இருக்கும்போது சிலருக்கு தலைவலி ஏற்படலாம். அது நமது உடலின் நீர் பற்றாக்குறையின் அறிகுறி. அந்த சமயத்தில் உடலுக்குத் தேவையான நீர் பருகுவது நல்லது.

ஜூஸ் விரதம் இருக்கும்போது ஆப்பிள், ஆரஞ்சு, அன்னாசி, திராட்சை, தர்பூசணி, மாதுளை போன்ற பழங்களையும், கீரை கேரட், பீட்ரூட் போன்ற காய்கறிகளையும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், இனிப்பு சுவை அதிகம் நிறைந்த பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம் போன்ற பழங்களை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

# குழந்தைகளின் விருப்பத்துக்கு முன்னுரிமை: சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தல்

**சென்னை, டிச.8:**

குழந்தைகளின் விருப்பம், உணர்வுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என மேல்முறையீட்டு வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது.



கருத்து வேறுபாட்டின் காரணமாக பிரிந்த தம்பதி தங்களுக்கு விவாகரத்து கோரி தாக்கல் செய்த வழக்கு சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இதனிடையே இந்த தம்பதிக்குப் பிறந்த இரட்டை ஆண் குழந்தைகள் யாரிடம் இருப்பது என்பது தொடர்பாக பிரச்னை ஏற்பட்டது. இதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற தனி நீதிபதி, திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை குழந்தைகள் தாயுடனும், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தந்தையிடமும் இருக்க வேண்டும் என உத்தரவிட்டார். இந்த உத்தரவை எதிர்த்து குழந்தைகளின் தந்தை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த மேல்முறையீட்டு வழக்கு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது குழந்தைகள் இருவரையும் தனித்தனியாக அழைத்து நீதிபதிகள் விசாரித்தனர். அவர்கள் இருவரும் தாயிடம் செல்ல விரும்புவதாகவும், தங்களது தந்தை மற்றும் பாட்டி தங்களை அடித்து துன்புறுத்துவதாகவும் தெரிவித்தனர்.

இதையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், இனியும் குழந்தைகளை தந்தையுடன் இரண்டு நாள்கள் இருக்க வேண்டும் என உத்தரவிட்டால், அவர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவார்கள். குழந்தைகளும் தாயுடன் வாழவே விரும்புகின்றனர். இந்த வழக்கில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. குழந்தைகளை தாயுடன் செல்ல அனுமதிக்கிறோம் என உத்தரவிட்டனர்.

மேலும், பெற்றோருக்கு இடையிலான பிரச்னைகளில் குழந்தைகளைப் பண்டங்களைப் போல பரிமாற்றம் செய்யக் கூடாது. குழந்தைகள் யாருடன் வாழ வேண்டும் என்பது குறித்த வழக்குகளின்போது, குழந்தைகளின் உணர்வுகள், மனநிலையை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். உலகளாவிய குழந்தைகள் தொடர்பான கருத்துகளின் அடிப்படையில் முடிவு செய்ய வேண்டும்.

குழந்தைகள் இந்த மகத்தான தேசத்தின் முதுகெலும்பு ஆவர். எனவே, குழந்தைகளின் விருப்பம், உணர்வுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## ஏர் ப்யூரிஃபையர்கள் விற்பனை 30% அதிகரிப்பு




சென்னை, டிச.8

காற்றைதூய்மைப்படுத்துவதற்கான சாதனங்களின் (ஏர் ப்யூரிஃபையர்) விற்பனை நடப்பு 2025-ஆம் ஆண்டில் 30 சதவீதம் அதிகரித்துள்ளது.

இது குறித்து டாடா குழுமத்தைச் சேர்ந்த மின்னணு சாதன சில்லறை விற்பனை நிறுவனமான க்ரோமா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2025-ஆம் ஆண்டின் இணையவழி மற்றும் நேரடி விற்பனை தரவுகளின் அடிப்படையில், ஏர்ப்யூரிஃபையர்களின் விற்பனை முந்தைய 2024-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 30 சதவீதம் அதிகரித்துள்ளது.

காற்று தர குறியீடு (ஏக்யூஐ) வெகுவாக உயர்ந்த தில்லி-என்சிஆர் பகுதி, மொத்த ஏர் ப்யூரிஃபையர் விற்பனையில் 72 சதவீதம் பங்களித்துள்ளது. இதில் மகாராஷ்டிரம் 12 சதவீதம், கர்நாடகம் 4 சதவீதம் பங்களித்துள்ளன. பிற மாநிலங்களிலும் விழிப்புணர்வு மற்றும் விற்பனை அளவு அதிகரித்துள்ளது.

ஏர் ப்யூரிஃபையர்களில் ரூ.5,000 முதல் ரூ.15,000 வரையிலான பட்ஜெட் பிரிவு விற்பனையில் 49 சதவீதம் பங்களித்துள்ளது. சூப்பர்-பிரீமியம் பிரிவு 36 சதவீதம் பங்களித்துள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### புதிய விளம்பரப் பிரசாரம்

இந்தியாவின் முன்னணி பொதுத் துறை வங்கிகளில் ஒன்றான பரோடா வங்கி, தனது உலகளாவிய விளம்பரத் தூதரான கிரிக்கெட் நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கரை முன்னிலைப்படுத்தி, 'மாஸ்டர்ஸ்ட்ரோக்' என்ற புதிய விளம்பரப் பிரசாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது குறித்து வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஆண்டின் 'ப்ளே தி மாஸ்டர்ஸ்ட்ரோக்' பிரசாரத்தின் வெற்றியைத் தொடர்ந்து, 'மாஸ்டர்ஸ்ட்ரோக்' என்றபுதியவிளம்பர பிரசாரத்தை தொடங்கியுள்ளோம். வாழ்க்கையின் முக்கிய இலக்குகளான கனவு வீடு அல்லது கார் வாங்குதல், வியாபாரத்தில் முதலீடு செய்தல் போன்றவற்றுக்கு சரியான தேர்வுகளை செய்வதன் முக்கியத்துவத்தை அது வலியுறுத்துகிறது.

சச்சின் டெண்டுல்கரின் தனித்துவமான இருப்பும் உண்மையான தன்மையும் இந்தச் செய்தியை வலுப்படுத்தும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மீண்டும் ஆரம்பம்! சென்னைக்கு அடுத்த சுற்று மழை எப்போது? டிசம்பர் எப்படி இருக்கும்!

சென்னை, டிச.8:



சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் அடுத்தசுற்றுமழைடிச.9 ஆம்தேதி தொடங்கவுள்ளதாக டெல்டா வெதர்மேன் ஹேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வானிலை நிலவரங்களை அவ்வபோது சமூக ஊடகங்களில் பதிவிடும் டெல்டா வெதர்மேன் என்று அறியப்படும் ஹேமச்சந்திரன் மழை நிலவரம் குறித்து தெரிவித்திருப்பதாவது:

"எதிர்மறை இந்தியப் பெருங்கடல் இருமுனை நிகழ்வு தற்போது வலுகுறைய துவங்கியுள்ளது. பசிபிக் பெருங்கடலில் லாநினா அமைப்பு முழுமையாக ஆதிக்கம் செலுத்த துவங்கியுள்ளது.

லாநினா, எதிர்மறை ஐஓடி(IOD), கடல் வெப்பநிலை, கடல் சார்ந்த அலைவுகளின் சாதகமான நிலைகள் டிசம்பர் மாதத்தில் இயல்பிற்கு அதிக மழைப்பொழிவிற்கு வழி வகுக்கும்.

வானிலை எதிர்ப்பார்ப்பு:

1. டிசம்பர் 10 முதல் 12 ஆம் தேதி வரை காற்றழுத்த தாழ்வு நிலையுடன் இணைந்த கிழக்கில் இருந்து வீசும் காற்றின் காரணமாக 5 ஆம் சுற்று மழை துவங்கி கடலோர மாவட்டங்களில் பரவலாக மழையை கொடுக்கும்.

2. டிசம்பர் 15 ஆம் தேதிக்குப் பின்பு அடுத்தடுத்து தாழ்வு பகுதிகள் உருவாகக் கூடும்.

3. டிசம்பர் 15 முதல் 21-க்கு இடைப்பட்ட தேதிகளில் காற்றழுத்த தாழ்வுப் பகுதிகள் உருவாகி பருவமழையை தீவிரப்படுத்தும்.

4. டிசம்பர் 4 வது வாரத்தில் தெற்கு வங்ககடலில் உருவாக கூடிய தாழ்வுப் பகுதி, புயல் சின்னமாக வலுபெற வாய்ப்புள்ளது.

5. ஒட்டுமொத்தமாக டிசம்பர் மாத மழை இயல்பிற்கு அதிகமாக அமைந்து, கடலோர மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களுக்கு நல்ல மழைப்பொழிவை கொடுக்கும்.

6. வட மாவட்டங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களுக்கு மேலும் இரண்டு தீவிரமான வடகிழக்கு பருவமழை சுற்றுகள் ஜனவரி முதல் வாரத்திற்குள் மழையை கொடுக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், "காற்றழுத்த தாழ்வு நிலையுடன் இணைந்த கிழக்கில் இருந்து வீசும் காற்றின் காரணமாக, டிசம்பர் 9 முதல் 11 ஆம் தேதி வரை தமிழக கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, காவிரி டெல்டா மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள் உள்பட வட கடலோர மாவட்டங்களில் டிசம்பர் 10 அல்லது 11 ஆம் தேதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பசுமை சாம்பியன் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

சிவகங்கை, டிச.8:

சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முன் மாதிரியாக விளங்கும் அமைப்புகள் தமிழ்நாடு பசுமை சாம்பியன் விருதுகள் பெற விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி வெளியிட்ட செய்திக் குறிப்பு: சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பல்வேறு பங்களிப்புகளைச் செய்து வரும் தனி நபர்கள், அமைப்புகளுக்கு ரூ. ஒரு கோடியில் பசுமை சாம்பியன் விருது வழங்கப்படுகிறது.

இந்த விருதுகள் பெறும் 100 தனி நபர்கள், அமைப்புகளுக்கு தலா ரூ. ஒரு லட்சம் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

இதன்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் நிகழாண்டுக்கான பசுமை சாம்பியன் விருதுகள் பெறுவதற்கு தனி நபர்கள், அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், குடியிருப்பு நலச் சங்கங்கள், உள்ளாட்சி அமைப்பு தொழிற்சாலைகள் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை மாசுக் கட்டுப்பாட்டு வாரிய இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். மேலும், நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை வரும் 20.1. 2026-ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியா் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளா், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் வழங்க வேண்டும் என்றாா் அவா்.

# காலி மதுபாட்டில்களை டாஸ்மாக் பணியாளர்கள் கண்டிப்பாக திரும்ப பெற வேண்டும்: அமைச்சர் முத்துசாமி

ஈரோடு, டிச.8:



ஈரோட்டில், வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் முத்துசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

சோலார் புதிய பஸ் நிலையத்தில் கழிப்பறை, குடிநீர், மின் விளக்குகள் என அனைத்து வசதிகளும் உள்ளன. அங்கு கட்டப்பட்டுள்ள கடைகள் ஏலம் விடப்பட்டுள்ளன. ஏலம் எடுத்தவர்கள், கடைகள் அமைக்க அவகாசம் தேவைப்படுகிறது. பயணிகள் அதிகரிக்கும் பட்சத்தில் அங்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

காலி மதுபாட்டில்களை வெளியே போடும்போது விவசாயம் பாதிக்கப்படுகிறது. நீலகிரியில் வனவிலங்குகள் பாதிக்கப்பட்டதால் தான், காலி மதுபாட்டில்கள் திரும்ப பெற வேண்டும் என்றும் அதற்கான திட்டத்தை வகுக்க வேண்டும் என்றும் கோர்ட்டு உத்தரவிட்டது. அதன்படி தான், காலி மதுபாட்டில்கள் திரும்ப பெறும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. கோர்ட்டு கொடுத்த கால அவகாச அடிப்படையில் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காலி மதுபாட்டில்கள் திரும்ப பெறுவதில் டாஸ்மாக் பணியாளர்களுக்கு கூடுதல் பணி சுமை இருப்பதை ஒப்புக்கொள்கிறோம். அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுவரை, காலி மதுபாட்டில்களை டாஸ்மாக் பணியாளர்கள் கண்டிப்பாக திரும்ப பெற வேண்டும். இந்த விவகாரத்தில் தொழிற்சங்கங்கள், பணியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம்.

மதுபாட்டில்கள் வைப்பதற்கு இடம் பற்றாக்குறை இருப்பதால், ஒவ்வொரு நாளும் 2 முறை பாட்டில்கள் எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.




## ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க விண்ணப்பங்கள் வரவேற்பு

திருச்சி, டிச.8:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின்கீழ் இயங்கும் அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் இல்லத்தில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு ஆற்றுப் படுத்துநர்கள் மூலம் மதிப்பூதியம் அடிப்படையில் ஆற்றுப் படுத்துதல் சேவை வழங்க தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப் படுத்துதலில் முதுகலைப் பட்டம் பெற்ற நபர்கள் அவர்களது விண்ணப்பங்களை உரிய கல்விச் சான்றுகளின் ஒளிநகலுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் தேர்வுக் குழு மூலம் நேர்முகத் தேர்வு அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

அரசு குழந்தைகள் இல்லத்திற்கு ஒரு பணியிடம் தேர்வு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு 108 நாட்களுக்கு மிகாமல் மதிப்பூதியம் அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரூ.1000 மட்டும் வழங்கப்படும் (அதிக பட்சமாக ஒரு நபருக்கு மாதம் 9 அமர்வுகள் மட்டும்).

விண்ணபத்தாரர்கள் விண்ணப்பங்களை திருச்சிராப்பள்ளி மாவட்ட HTTPS://TIRUCHIRAPPALLI.NIC.IN என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கண்காணிப்பாளர், அன்னை சத்யா அம்மையார் அரசு குழந்தைகள் இல்லம், ஆவூர் ரோடு, மாத்தூர், திருச்சி 622515 என்ற முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ 22.12.2025 மாலை 5 மணிக்குள் வந்த சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்கூறிய காலவரையறைக்கு பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் விபரங்களுக்கு 04339-250074, 6369104191 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள லாம் என மாவட்ட ஆட்சியர் சரவணன் தெரிவித்து உள்ளார்.

## அரசுப் பள்ளியில் தமிழ் கூடல் நிகழ்ச்சி

பெரம்பலூர், டிச.8:

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட கை. களத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்க்கூடல் நிகழ்ச்சி பள்ளி யின் தலைமை ஆசிரியர் வையாபுரி தலைமையில் நடைபெற்றது. வாலிகண்டபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியின் தமிழ் ஆசிரியர் மோகன் பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் ஓய்வுபெற்ற பட்டதாரி ஆசிரியர் தனராசு, பள்ளியின் முதுகலை ஆசிரியர் சுரேஷ், பட்டதாரி ஆசிரியர் சரவணன், ராஜா மற்றும் உடற்கல்வி ஆசிரியர் ஜெயராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக முதுகலை ஆசிரியர் ராமர் வரவேற்புரையாற்றினார். ஆசிரியை அன்பழகி நன்றி தெரிவித்தார்.

# அச்சுறுத்தும் மோசடிகள்: கவனமாக இல்லையெனில் உங்களின் பணம் பறிபோகும்!

செயற்கை நுண்ணறிவின் உதவியில் உருவாக்கப்படும் ஆடியோ, வீடியோபடங்களுடன், மோசடிப் பேர்வழிகள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு பணம் அபகரிக்கின்றனர். நடைபெறும் இது போன்ற குற்றங்களைப் பற்றிய புரிதலிருந்தால், நாம் கவனத்துடனிருந்து அவர்கள் வலையில் விழாமல் நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். சில குற்ற வகைகளைப் பார்க்கலாம்.

1. போலியான அழைப்பிதழ் (Fake Wedding Invites): முன்பின் அறியாத நபர் வாட்ஸ் அப் செயலி மூலம் ஒரு கல்யாண அழைப்பிதழ் அனுப்புவார். யாருக்கு கல்யாணம் என்று அறிந்துகொள்ளும் ஆர்வத்தில் நீங்கள் அழைப்பிதழை திறக்க முயற்சித்தால் அதிலுள்ள 'ஏபிகே' ஃபைல் (APK File), அழையா விருந்தாளியாக உங்கள் மொபைல் போனில் அமர்ந்து, நீங்கள் பதிவிட்டுள்ள வங்கிகள் சாஃப்ட்வேர் மற்றும் உங்களுக்கு வருகின்ற ஓடிபி ஆகியவற்றை கண்காணிக்க வழி செய்யும். ஆகவே, எக்காரணம் கொண்டும் முன்பின் அறியாதவர்கள் அனுப்புகின்ற பிடிஎஃப் ஃபைலை திறக்காதீர்கள். அதனை அழித்து விடுவது நல்லது.

2. டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி (Digital Arrest Scam): இந்த மோசடிப் பேர்வழிகள் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் என்ற போர்வையில் போன் அழைப்பின் மூலமாகவோ, குறுஞ்செய்திகள் மூலமாகவோ தொடர்பு கொள்வார்கள். 'நீங்கள் பணமோசடி செய்துள்ளீர்கள் அல்லது இணைய தளக் குற்றங்களில் சம்பந்தப்பட்டிருப்பதால் விசாரணை வளையத்தில் இருக்கிறீர்கள்; ஆகவே உங்களை டிஜிட்டல் அரெஸ்ட் செய்திருப்பதாகச் சொல்லி, அதிலிருந்து தப்புவதற்கு பணம் கொடுக்கச் சொல்லி மிரட்டுவார்கள்'. போலி




ஆவணங்களை வைத்து பயமுறுத்துவார்கள். டிஜிட்டல் அரெஸ்ட் என்ற ஒன்று இல்லவேயில்லை. அவர்களிடத்தில் அதிகம் பேசாமல் போனை வைத்து விட்டு சைபர் குற்றங்களை கவனிக்கும் நபருக்கு போன் செய்யுங்கள்.

3. சட்டவிரோத பார்சல்கள் (Illegal Parcels): கூரியர் நிறுவனத்தைச் சேர்ந்தவர் அல்லது அமலாக்கத்துறை அதிகாரிகள் என்று சொல்லி, உங்களுக்கு பார்சல் வந்திருப்பதாகச் சொல்வார்கள். அதில் சில பிரச்சனைகள் இருப்பதாகச் சொல்லி, உங்களுடைய நிதி தகவலை அறிந்து, பணம் திருட முயற்சிப்பார்கள். நீங்கள் பார்சல் எதுவும் எதிர்பார்க்கவில்லை என்றால் தேவையற்ற பேச்சுகளில் ஈடுபடாதீர்கள். உங்கள் நிதித் தகவல் எதையும் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

4. அவசர அழைப்பு (Emergency Call Scams): இரண்டுவிதமாக இந்த மோசடி நடைபெறுகிறது. உறவினர்கள் அல்லது நண்பர்கள் பெயரில் அழைத்து, உடனடியாக பண உதவி தேவைப்படுவதாகக் கூறுவார்கள். பணம் அனுப்புவதற்கு லிங்க் பகிர்ந்து கொள்வார்கள். அந்த லிங்க் உங்கள் வங்கிப் பணத்தை கபளீகரம் செய்து விடும். இதைப் போன்ற அழைப்பு வந்தால், அந்த நண்பர் அல்லது உறவினரை அழைத்துப் பேசுங்கள். சில நேரங்களில், பொது இடத்தில் உங்களுக்கு முன் பின் அறிமுகம் இல்லாத நபர், அவசரமாகப் பேச வேண்டும் என்று மொபைல் போன் கேட்பார்கள். நீங்கள் அறியாமல் உங்கள் வங்கி விவரங்கள் அறிந்து, ஓடிபி பெற்று, வங்கி கணக்கிலிருந்து பணம் திருட முயற்சிப்பார்கள். முடிந்தவரையில், அறியாத நபருக்கு மொபைல் கொடுக்காதீர்கள். உதவிசெய்ய விரும்பினால், அவர்களிடம் மொபைல் எண் கேட்டு அழையுங்கள்.

5. ட்ராய் ஆள்மாறாட்ட மோசடி (TRAI Impersonation Scam): இந்திய தொலை தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (ட்ராய்) அதிகாரி என்று கூறிக் கொண்டு அன்னிய தேச எண்ணிலிருந்து மோசடி பேர்வழி கூப்பிடுவார். உங்கள் போன் எண் உடனடியாகத் துண்டிக்கப்படும் என்று மிரட்டுவார். இதைத் தடுப்பதற்கு பணம் அனுப்பித் தரச் சொல்லி வற்புறுத்துவார். முன்பின் தெரியாத அயல்நாட்டு எண்ணிலிருந்து அழைப்பு வந்தால், இணைப்பை துண்டித்து விடுங்கள்.

6. வைப்புத் தொகை மோசடி (Jumped Deposit Scam): உங்கள் வங்கிக் கணக்கிற்கு யுபிஐ மூலமாக, சிறிதளவு பணப்பரிமாற்றம் செய்வார்கள். பின்பு, உங்களை தொடர்பு கொண்டு தவறுதலாக உங்கள் வங்கிக் கணக்கிற்கு அனுப்பியதாகக் கூறி, திருப்பி அனுப்ப லிங்க் அனுப்புவார்கள். அந்த லிங்க்கை அழுத்தி அவருடைய யுபிஐ பின் எண்ணை பதிவு செய்தால் உங்கள் வங்கியிலிருந்து பணம் அவருடைய வங்கிக்கு போய் விடும்.

7. பங்குச் சந்தை முதலீடு மோசடி (Stock Market Investment Scam): நிதி ஆலோசகர்கள் என்று கூறிக் கொண்டு, உங்களை அவர்களின் முதலீட்டு குழுவில் சேரும் படி ஆலோசனை சொல்வார்கள். அதை நம்பி முதலீடு செய்தால், உங்கள் பணம் விரயம். இலாபத்திற்கு ஆசைப்பட்டு இந்த வலையில் விழாதீர்கள்.

8. வீட்டிலிருந்து வேலை (WFH Scams): அதிகம் நடைபெறுகின்ற மோசடிகளில் ஒன்று. வீட்டில் இருந்த படியே பகுதிநேர வேலை செய்யலாம். சுலபமான வேலை. சம்பளம் அதிகம் என்று வலை வீசுவார்கள் மோசடி மன்னர்கள். இந்த வேலையில் சேருவதற்கு

# அறுவடை.!



"அத்தே..பார்த்து பத்திரமா போயிட்டு வாங்க..நம்ம தெருக்காரங்களை விட்டு நகர்ந்து போயிடாதீங்க... கூட்டத்துல காணாம போயிட்டீங்களோ.... உங்க மகனுகிட்ட நான் அப்புறம் வாழவே முடியாது.. அதுவும் உங்க பேத்திங்க என்னை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவாளுவோ... நானும் இந்த பாழாப்போன ஊருல உங்க தயவு இல்லாம குப்பைக் கொட்டுறதும் இயலாத கதை.. பதனமா பாத்து வந்து சேருங்க.." பொய் கரிசனத்துடன் பேசியபடியே அருகில் வந்து.."இந்த புடவை உங்களுக்கு எடுப்பா இருக்கு அத்தே..!"என்றபடி மாமியாருடன் செல்ஃபியும் எடுத்துக் கொண்டாள் மணிமேகலை. மருமகளின் இருட்டுப்புத்தி புரிந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் சிரித்து மழுப்பி கையசைத்து நின்றார் சாரதாம்மாள். தாழம்புதூர் கிராமத்தில் 'கோமுநக' கட்சியின் மாநாட்டுக்கு ஆள் பிடிக்கும் கும்பல் ஏழெட்டு குட்டியானைகளோடு வந்து முகாமிட்டு ...தலைக்கு ஐநூறு பணமும்... கட்சிக்கொடி பார்டர் புடவைகள்.. வேட்டிகளையும் விநியோகித்து ... ஆள்களை அள்ளித் திணித்துக் கொண்டிருந்தனர். மணிமேகலைக்கு முதலில் மாமியாரை மாநாட்டுக்கு அனுப்பும் திட்டம் இல்லாமல் தான் இருந்தது.சும்மா வேடிக்கை பார்க்கலாம் என்றுதான் சந்தைத் திடலுக்கே வந்தாள். இங்கு கட்சிக்காரர்கள் விநியோகித்த சலவைத்தாள்களும்.. கஞ்சிக்கருக்கு குலையாத புடவைகளும் லேசாக ஆசையை கிளறின. 'மூட்டை முடிச்சு...வைக்கோல் கட்டுகள்..ஏன் சந்தைக்கு ஆடு..மாடுகள் தான் இப்படி வரன்முறையில்லாம ஏத்துவாங்க.. ஒரே குட்டியானையில இருவத்தஞ்சு.. முப்பது பேரை திணிச்சி கொண்டு போறாங்களே..'என ஆதங்கத்தோடு பார்த்து நின்றவளுக்குள் பேராசை பூதம் கிளம்பி புத்தியைக் கெடுத்தது. சமீபத்திய ஒரு கட்சியின் மாநாட்டு நிகழ்வும்..அதற்கு பரிகாரமாக அந்தக்கட்சியும்..அரசும் நிவாரணமாய் அறிவித்த பெருத்த தொகைகளும்.. அவளது பணச்சபலத்தை அதிகரித்தன. அவள் பார்வையில் புருஷன் காரனோ அத்தக்கூலி... அள்ளை கொள்ளை அடித்து அனுதினமும் ஆயிரம்..ரெண்டாயிரம் சாமார்த்தியம் செய்ய துப்பில்லாதவன்.. வீட்டில் மூன்றும் பெண் பிள்ளைகள்.. இவள் விவசாயக்கூலி வேலைக்கும்.. அவ்வப்போது நூறுநாள் வேலைக்கும் செல்வதைத் தவிர..வேறு வருமான வழிகளும் இல்லை..'கை கால் சோராத வரைக்கும் உழைச்சி கஞ்சிஊத்தி காவந்து பண்ணிடலாம்.. கரைசேர்க்க வழி என்னவோ...'என புலம்பாத நாளில்லை..இப்போது மின்னலாக ஒரு வழி புலப்பட அதை பயன்படுத்திக் கொள்ள முடிவெடுத்துவிட்டாள் மணிமேகலை. 'கல்லெறிந்து பார்ப்போம் பழம் விழுந்தால் பெருத்த லாபம்.. இல்லாவிட்டாலும் பங்கமில்லை... கைமேல் பலனாக ஐநூறு ரூபாய் கிடைத்துவிட்டது.. கட்சிக்காரன் தயவில் புதுச்சீலையும் கிழவிக்கு கிடைத்தது.தீபாவளி பட்ஜெட்டில் முந்நூறை மிச்சப் படுத்திவிடலாம்.'பெருமூச்சோடும்... நமட்டுச்சிரிப்போடும்..வீட்டை நோக்கி நடந்தாள் மணிமேகலை. மாலை மங்கி விளக்கேற்றியவுடன் ..வழக்கமாக டீவியில் சீரியல் பார்ப்பவள்..இன்று...'ஸ்கூப் ..ஸ்கூப்' என ஸ்குரோலிங்கில் கூவும்..செய்திச்சேனல்களில் அலைபாய்ந்தாள்.. ஆரவாரத்துடன் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்ததே தவிர..அவள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமான நிகழ்வுகள் எதுவும் நடைபெறவே இல்லை.. எரிச்சலோடு அமர்ந்திருந்தாள் அவள். "அம்மா..நம்ப ஆச்சி வீட்ல இருந்து ஃபோன்.." என்றபடி ஓடிவந்தாள் ரீல்ஸ் பார்த்துக்கொண்டிருந்த மூத்தமகள். வாங்கி காதில் வைத்தவள் .."சொல்லும்மா..எப்டி இருக்க.?!"என்றாள். "அண்ணீ..நான் பிரபா பேசறேன்..அத்தைய ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கோம்.. இப்பவே கிளம்பி வாங்களேன்..எனக்கு படபடப்பா இருக்கு." என்றாள் தம்பி மனைவி. "ஏய்.. அம்மாவுக்கு உடம்புக்கு என்ன..?..என்ன நடந்தது..சொல்லு.?.." எதிர்முனை சிறிது நேர மௌனத்திற்கு பிறகு.."அது வந்து அண்ணீ..நம்ம பக்கத்து ஊருல ஒரு குடும்பமே கந்துவட்டி கொடுமையில பாழாச்சுல்ல.. அதுக்காக கலெக்டர் ஆபீஸ் வாசல்ல மறியல் போராட்டம் பண்ண ஆள் வேணும்னு...தலைக்கு ஆயிரம் பேசி அழைச்சுகிட்டு போனாங்க..லோடு ஆட்டோ பாரம் தாங்காம..ரயில்வே ட்ராக்ல சிக்கி அவுந்துட்டுதாம்.. சீக்கிரம் வாங்க..". "அடியே..அதுக்கு எதுக்குடி எங்க அம்மைய அனுப்புன.. நீ போக வேண்டியது தான..?" கூப்பாடு போட்டாள் மணிமேகலை. "என்ன பண்றது..அண்ணீ.. மாசத்துல பாதி நாள் திண்ணை தூங்கறாரு... உங்க தம்பி..மீதி நாள் வேலை கிடைச்சாலும்.. குடிக்கவும்..அவரு வாங்குன கைமாத்து கடனை அடைக்கவுமே பத்தமாட்டேங்குது.. என் ஒண்டி உழைப்புல மூனு புள்ளைகளுக்கு கஞ்சி ஊத்தி..கந்தல் துணி தரலாம்..கரையேத்த வழிய சொல்லுங்களேன்... பார்ப்போம்.. விழுந்தது தான் விழுந்ததே ..இந்த கேடுகெட்ட டெம்போ...ரயில் வரும்போது ட்ராக்குல மாட்டக்கூடாதா..." என்றபடி எதிர் முனை துண்டிக்கப்பட்டது. மணிமேகலை தனது மாமியாரை நயவஞ்சகமாக கூட்டத்திற்கு அனுப்பியதை பேத்திகள் மூலம் தெரிந்து கொண்ட மணிமேகலையின் தாய்..தனது மருமகள் மூலம் நாடகமாடி புத்திப் புகட்ட நினைத்தது மணிமேகலைக்கு தெரியவே இல்லை. அவள் மயங்கிச் சரிந்திருந்தாள்.*

**அரும்பூர்.க.குமாரகுரு,**
மயிலாடுதுறை

# மரகத மாற்றம்



கதிரவன் மேற்குத் திசையில் மெல்ல இறங்கிக் கொண்டிருந்தான் அஸ்தமனத்திற்கு தோதாக... வெயில் சுள்ளென்று அடித்து தன்இளஞ்சிவப்பு கதிர்களால் அந்தப் பள்ளிக்கு சிகப்பு வர்ணம் பூசிக் கொண்டிருந்தான். நகரின் பிரபலமான பள்ளி அது, பள்ளி முடிந்து, மணி அடித்ததும், ரோஜாகூட்டமென வெளியே ஓடிவந்தனர் பிள்ளைகள். இரண்டாம் வகுப்பு படிக்கும் கிருஷ்ணனும், சஜனும் வெளியே வந்து ஸ்கூல் பஸ் வர காத்திருந்தனர்.

"ஏன்டா கிருஷ் டல்லா இருக்க? சரியாகவே பேச மாட்டேங்குற! மிஸ் தனியா கூப்பிட்டு ஏதோ கேட்டாங்களே என்னடா?"

"மிஸ் என்ன பகவத்கீதை ஒப்பிக்கிற காம்படிஷன்ல சேர்றியா?ன்னு கேட்டாங்க.. நான் மாட்டேன்னு சொல்லிட்டேன்".

"என்ன ஆச்சு கிருஷ்! ஏதாவது ப்ராப்ளமா? எங்கிட்ட கூட ஷேர் பண்ண மாட்டியா? மிஸ் என்ன சொன்னாங்க குட் பிரண்ட்ஸ் எல்லா விஷயத்தையும் ஷேர் பண்ணிப்பாங்க. பிரண்ட்க்கு ஹெல்ப் தேவைன்னா பண்ணுவாங்கன்னு சொன்னாங்களே, நீ ஏதோ டல்லா இருக்க, என்கிட்ட சொல்லுடா".

"சஜன்! நேத்திக்கு எங்க மம்மியும், டாடியும் ரொம்ப சண்டை போட்டாங்க டா!"

"இதுக்கு போயா கவலைப்படுற எங்க வீட்டில எப்ப பாரு ரெண்டு பேரும் சண்டை தான்!"

"இது வேற மாதிரி சண்டைடா".

"புரியலை வேற மாதிரின்னா?"

"மம்மியும் டாடியும் பிரியப் போறாங்களாம் என்னமோ சொல்றாங்கடா... கோர்ட், டைவர்ஸ்னு எனக்கு ஒண்ணும் புரியல. ரொம்ப பயமா இருக்கு. மம்மியும் டாடியும் பிரிஞ்சிடுவாங்களா? எனக்கு மம்மியும் வேணும்... டாடியும் வேணும். அம்மாச்சி சொல்றாங்க நான் மம்மி கூடத்தான் வளரணுமாம். ஜட்ஜ் ஆன்ட்டி கேட்கும்போது எனக்கு மம்மி தான் வேணும்னு சொல்லணுமாம்...." என்றவன் உடைந்து போய் அழ ஆரம்பித்தான்.

"கிருஷ் ப்ளீஸ் அழாதடா!"

"சஜன் எனக்கு டாடியை ரொம்ப பிடிக்கும். அவர் ரொம்ப நல்லவர். அவர் இல்லாம என்னால இருக்க முடியாது. ஸ்கூல்ல எல்லாருக்கும் டாடி இருப்பாங்க. எனக்கு மட்டும் இல்லைன்னா எல்லாரும் சிரிப்பாங்க", சஜன் ஒன்றும் புரியாமல் நின்றான்.

"கிருஷ் நாம வேணா நம்ம கீதா மிஸ் கிட்ட சொல்லி ஹெல்ப் கேட்போமா?"

"வேணான்டா சஜன்! மிஸ் எல்லாம் சின்ன பிள்ளைங்க சண்டையைத்தான் தீர்த்து வைப்பாங்க. பெரியவங்க சண்டையெல்லாம் ஜட்ஜ் ஆன்ட்டி தான் சரி பண்ணுவாங்க. அதனால மிஸ் கிட்ட சொல்ல வேண்டாம்". அதற்குள் ஸ்கூல் பஸ் வந்து விட அவர்கள் பேச்சு அத்துடன் முடிந்தது.

"கீதா மிஸ் சண்டை போடக்கூடாது... எல்லோரும் பிரண்ட்ஸ்ஸா இருக்கணும்னு சொல்றாங்களே! அப்படியே சண்டை போட்டாலும், ஹேண்ட் ஷேக் பண்ணி.. ஹக் பண்ணி, 'பிரண்ட்ஸ்' அப்படின்னு சொல்ல சொல்றாங்களே! அது மாதிரி மம்மியும் டாடியும் சொல்லி சேர்ந்துட்டா எவ்வளவு நல்லாயிருக்கும்....." ஏக்கத்துடன் நினைத்த கிருஷ் வீடு வர, இறங்கினான்.

கிருஷ்ஷை இந்த ரெண்டு வருஷமா பார்த்துகிட்டிருக்கேன். ஒரு பர்பெக்ட் ஸ்டுடண்ட். ஆனா இப்ப மூணு மாசமா அவன் கிட்ட நிறைய சேன்ஞ்ச். மார்க்ஸ் குறைஞ்சு போச்சு. கிளாஸ்லயும் கவனமில்லை. விளையாடவும் போறதில்ல. ரொம்ப சோர்வா இருக்கான். காம்படிஷன்னா முதல்ல கை தூக்கறவன், இப்ப நான் கலந்துக்கல மிஸ்ங்கறான். அவனுக்குள்ள நிறைய குழப்பங்கள்".

"நாங்க என்ன செய்யணும் மேடம்? அவனை கவுன்சிலிங் அழைச்சிட்டு போக வா?", என்றான் ராஜேஷ்.

"மிஸ்டர் ராஜேஷ்! மிஸ்ஸஸ் ரம்யா! உங்க பர்சனல் லைஃப்ல தலையிடறேன்னு நினைக்காதீங்க! கவுன்சிலிங் அவனைவிட, உங்களுக்குத்தான் தேவை. உங்களுக்குள்ள என்ன மனகசப்புன்னு எனக்கு தெரியாது, அதுக்குள்ள போகவும் நான் விரும்பல. அது உங்க பர்சனல் லைப். ஆனால் அது அந்த குழந்தையை எவ்வளவு தூரம் பாதிச்சிருக்கும்ன்னு உங்களுக்கு புரியுதான்னு எனக்கு தெரியல."

"நான் கவனிச்சதில நீங்க ரெண்டு பேருமே அவன்கிட்ட பாசமாத்தான் இருக்கீங்க. அதனால்தான் அவன் உங்க ரெண்டு பேர்ல யாரையுமே இழக்க விரும்பலை. இவ்வளவு உங்க மேல பாசம் வைச்சிருக்கிற உங்க குழந்தைக்காக நீங்க கொஞ்சம் யோசிக்கக் கூடாதா ? வெளி உலகத்துல பாருங்க எத்தனை பேர் குழந்தை இல்லைன்னு ஏங்கறாங்க. குழந்தைகள் இருந்தாலும் கிருஷ் மாதிரி ஒரு புத்திசாலி அன்பான குழந்தை எத்தனை பேருக்கு கிடைக்கும்?"

" நீங்க ரெண்டு பேருமே செல்ப் எம்ப்ளாய்ட்... பிரிஞ்சாலும் சிங்கிள் பேரன்டா, குழந்தையை வளர்க்கக் கூடிய பினான்ஷியல் பேக்ரவுண்ட் உள்ளவங்க! ஆனா அந்தக் குழந்தை ஏங்கற தாய்- தந்தை அன்பை நீங்க எவ்வளவு பணம் செலவு பண்ணினாலும் கொடுக்க முடியுமா? நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து உருவாக்கின ஒரு உயிருக்கு நீங்க செய்ற துரோகம் இல்லையா? கொஞ்சம் யோசிச்சு பார்த்தா உங்களுக்கே நீங்க பண்றது தப்புன்னு புரியும்..... ரெண்டு வருஷம் பழகின நானே, கிருஷ் மேல உள்ள அக்கறையில் முன்பின் தெரியாத உங்ககிட்ட அவனுக்காக பேசிகிட்டிருக்கேன். நீங்க அவனை பெத்து, வளர்த்து, எட்டு வருஷமா மனசுல சுமந்துகிட்டிருக்கீங்க! அவனுடைய மன வருத்தம் உங்களுக்கு உறுத்தலையா?"

"பிரியறதுல மட்டும் தான் சந்தோஷம் இல்லை, பிள்ளைக்குப் பண்ணுற தியாகமா நெனச்சு நீங்க சேர்ந்து வாழ்ந்தாலும் சந்தோஷம் கிடைக்கும். உங்களுடைய மனக் கசப்புகளை அவனுக்கான தியாகமா மாற்றிப் பாருங்க! அது அந்த பிஞ்சு மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். அவன் வளர்ந்து பெரியவனாகும் போது இந்த சமுதாயத்தில், உயர்ந்த நிலைக்கு வந்து, உங்களுக்கும் பெருமை தேடிக் கொடுப்பான்.உங்க பர்சனல் லைஃப்ல நான் தலையிடுறது தப்பு. நான் எல்லை மீறி பேசியதா நீங்க நெனச்சா உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன். அதுல எனக்கு எந்த வெட்கமும் இல்லை ஏன்னா நான் கிருஷ்ஷை சந்தோஷமா பார்க்க ஆசைப்படுறேன். யோசிச்சு நல்ல முடிவுக்கு வாங்க! நான் வர்றேன். இவ்வளவு நேரம் நான் பேசியதை பொறுமையா கேட்டதற்கு நன்றி!".

தெருவில் இறங்கி நடந்தார் கீதா! ஒரு மரகத மாற்றத்தை எதிர்நோக்கி! இப்போதெல்லாம் சஜன் சொல்கிறான் கிருஷ் பழைய சந்தோஷத்தோடு பள்ளிக்கு வருவதாக!!!



**-தி.வள்ளி**
திருநெல்வேலி.

# திருவிளையாடல் புராணம் 12



**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## *உக்கிர குமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்"*

இப்படலத்தில் சிவபெருமான் தன் மகனான உக்கிர குமாரனுக்கு இந்திரன், வருணன், மேருமலை போன்றோரை வெல்வதற்காக வேல், வளை, செண்டு ஆகிய ஆயுதங்களை வழங்குகிறார்.

உற்ற வயது வந்ததும் கற்ற தன் மகனுக்கு மண முடித்து வைக்க வேண்டு மென்று பெற்ற தாயும் தந்தையும் முடிவு செய்தனர். அழகுக்கும் கல்விக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் போற்றத் தக்க அரசர் குலத்துப் பெண்ணைத் தேட முனைந்தனர். வடபுலத்தில் மணவூர் என்னும் நகருக்கு அரசனாக விளங்கிய சோம சேகரன் என்னும் அரசன் மகள் காந்திமதியே தக்கவள் என முடிவு செய்தனர்.

அன்று இரவே சோமசேகரன் கனவில் இறைவன் எழுந்தருளி "நாம் மதுரையில் உறையும் சோமசுந்தரன்; நீ பாண்டியன் சுந்தரேசனின் மகன் உக்கிர குமாரனுக்கு; உன்மகளை மணம் முடித்துக் கொடு; காந்திமதியை அழைத்துக் கொண்டு சகவ ஏற்பாடுகளுடன் மதுரைக்குச் செல்வாயாக" என்று கூறினார்.

இறைவன் திருவாக்கை அமுத மொழி என ஏற்றுச் சோமசேகரன் அமைச்சர் படைத்தலைவருடன் மதுரையை அடைந்தான். சுந்தரபாண்டியன் அரண்மனையை அடைந்து கனவில்வந்து சொல்லிய செய்தியைச் சொல்லித் தன் மகளையும் அழைத்து வந்திருப்பதாகக் கூறினான். தடாதகை எந்தத் தடையும் சொல்லவில்லை. கண்ணுக்கு இனிய காரிகையைக்கண்டு மருமகள் ஆவதற்கு வேண்டிய கவினும் நலனும் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தாள். அங்கலக்ஷணம் அனைத்தும் உடைய அப்பங்கயச் செல்வி போன்ற அரசமகளை அனைவரும் ஆமோதித்தனர். நாள் பார்த்துக் கோள் குறித்து அரசர்களுக்கு ஆள் மூலம் ஓலை போக்கிச் செய்தி சொல்லி மணநாள் ஏற்பாடு செய்தனர். தேவர்களும், விஷ்ணு, பிரமன் முதலிய தெய்வங்களும் முனிவர்களும்




மண்ணுக்குரிய மகிபர்களும் வேத வேதியரும் நகர மாந்தரும் கூடிய அரங்கில் இருவருக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

நாட்கள் சில நகர்ந்தன. நாட்டு ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்புவித்து விட்டுச் சுந்தரேசர் விடை பெற விரும்பினார். அதற்கு முன் அவன் சந்திக்க வேண்டிய பகைகளை எடுத்து உரைத்தார். "இந்திரனும் வருணனும் மேருமலையும் உனக்கு இடையூறு செய்வர். அவர்களை வெல்வதற்கு வேல், வளை, செண்டு என்ற மூன்று படைகளைத்தருகிறேன். பெற்றுக் கொள்க" என்று சொல்லி அவற்றை அவனிடம் தந்தார். நீண்ட காலம் மதுரையில் தங்கிவிட்டதால் தானும் தடாதகையாரும் திருக்கோயிலுக்குச் சென்று விட்டனர்; சிவகணங்கள் முன்னை வடிவம் கொண்டு தத்தம் பதவிகளைத் தாங்கக் கயிலை சென்றனர். பிள்ளைகளைப் பெற்று நல்வழியில் வளர்த்து அவர்களின் வாழ்க்கை வேண்டிய பொருளாதாரத்தை நல்வழியில் ஈட்டச் செய்து, நல்ல மணவாழ்க்கையையும் அமைத்து தருவது பெற்றோரின் கடமை ஆகும். இதுவே உக்கிரபாண்டியனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)

# அதிசய கோவில்கள்....!!!





## நிறம் மாறிக்கொண்டே இருக்கும் அதிசய கோவில் குளம்!

- ★ காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரிலிருந்து 27 கிலோ மீட்டர் தொலைவில் காணப்படும் இடம் கீர் பவானி கோவில். இக்கோவிலை சுற்றியுள்ள மரங்களும், சுனையும் பார்ப்பவரை கவர்ந்திழுக்கும்.
- ★ இக்கோவிலில் பக்தர்கள் காணிக்கை அளிக்கும் கீர் என்ற இனிப்பு பதார்த்தத்தையும், பாலையும் கொண்டு இக்கோவில் இப்பெயரை பெற்றது. இந்த கோவிலில் பவானி அம்மன் சிவனோடு அருள்பாலிக்கிறார்.
- ★ இந்த கோவிலில் உள்ள குளத்தின் நீரில் பக்தர்கள் அபிஷேகம் செய்வது வழக்கம். இந்த குளத்தில் இருக்கும் நீரானது பச்சை, இளஞ்சிவப்பு, கறுப்பு, நீலம் என பல்வேறு நிறங்களில் அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கிறது.
- ★ எந்த நிறத்தில் நீர் மாறினாலும் பிரச்சனை இல்லை. ஆனால் குளத்தின் நீர் கறுப்பு நிறத்தில் மட்டும் மாறவே கூடாது என்கிறார்கள். குளத்தின் நீர் கறுப்பு நிறத்தில் மாறினால் அது அழிவிற்கான அறிகுறியாம்.
- ★ ஆகையால், நீர் கறுப்பு நிறத்தில் மாறும் அறிகுறி தெரிந்தாலே சுவாமிக்கு விசேஷ பூஜைகள் நடத்தப்படுமாம். எவ்வளவு பெரிய ஆபத்தையும் முன்கூட்டியே உணர்த்தும் ஒரு அதிசய குளமாகவே இது பார்க்கப்படுகிறது.



## அபிஷேக பால் நீல நிறமாக மாறும் அதிசய கோவில்...!

- ★ தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு கிழக்கே 6 கிலோ மீட்டர் தொலைவில் இந்த திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி கோவில் ராகு தோஷ பரிகார தலமாக விளங்குகிறது.
- ★ நாக அரசனாகிய ராகு பூஜித்த காரணத்தால் இத்தலத்துக்கு திருநாகேஸ்வரம் என்ற பெயர் வந்தது.
- ★ இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருநாகநாத சுவாமி, இறைவி பிறையணியம்மன், தீர்த்தம் சூரிய புஷ்கரணியாகும், தலவிருட்சம் செண்பக மரம் ஆகும்.
- ★ மேலும் இவருக்குகந்த நிறம் நீலம் என்பதால் அணிகின்ற ஆடை மட்டுமல்ல, இவருக்குச் செய்கின்ற பாலாபிஷேகத்தின்போது தலை மீது ஊற்றும் பால் தலையிலிருந்து வழிந்து உடல் மீது வரும் போது பாலின் நிறமும் நீலமாகி விடுகின்ற அதிசயத்தைப் பார்க்கலாம்.
- ★ இங்கு இராகுவினால் ஏற்படக் கூடிய தோஷங்கள் அகல இராகுவுக்குப் பாலாபிஷேகம் செய்கின்றனர். ராகுவின் மேனியில் பாலாபிஷேகம் செய்யும்போது பால் நீலநிறமாக மாறுவது தனிச்சிறப்பாகும்.
- ★ கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி நாளில் அம்பாளின் பாதத்தில் நிலவு ஒளிபட்டுப் பாதத்தில் இருந்து தலைக்குச் செல்லும் காட்சி அற்புதமாகும்.

**A s Govinda rajan**
KODAMBAKKAM, CHENNAI

# தினம் ஒரு தலைவர்கள் — பரலி சு.நெல்லையப்பர் வரலாறு



பரலி சு. நெல்லையப்பர் (செப்டம்பர் 18, 1889 - மார்ச்சு 28, 1971) கவிஞர், எழுத்தாளர், இதழாளர், பதிப்பாளர், விடுதலைப் போராட்ட வீரர், வ.உ.சி.க்குத் தொண்டர், சுப்பிரமணிய பாரதிக்குப் புரவலர் என்னும் பன்முகம் கொண்டவர்.

குடும்பம்
தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பரலிக்கோட்டை என்னும் சிற்றூரில் 1889ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18ஆம் நாள் சுப்பிரமணிய பிள்ளை, முத்துலட்சுமி அம்மாள் என்னும் இணையரின் மூன்று ஆண் மக்களுள் இரண்டாவது மகவாகப் பிறந்தார். இவர் சென்னைக்கு அருகிலுள்ள குரோம்பேட்டையில் 1971ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 28ஆம் நாள் மறைந்தார்.

நெல்லையப்பருக்கு மூத்தவர் பரலி சு. சண்முகசுந்தரம்பிள்ளை. இவர் வ.உ.சிதம்பரனாரோடு இணைந்து அவர்தம் சுதேசி இயக்கத்தைப் பரப்புவதிலும் வலுப்படுத்துவதிலும் முனைப்போடு இருந்தவர். சுதேசி கப்பல் கம்பெனியின் பங்குகள் பலவற்றை திருச்சி மற்றும் திருச்சி மாவட்டத்தின் பல இடங்களில் விற்றுப் பல்லாயிரம் ரூபாயைத் திரட்டிக் கொடுத்தவர். அன்றைய மதுரை மாவட்டம் வத்தலக்குண்டில் பிறந்த சுப்பிரமணிய சிவாவை தூத்துக்குடிக்கு அழைத்து வந்து வ.உ.சிக்கு அறிமுகம் செய்து வைத்தவர். சுப்பிரமணிய சிவத்தால் வந்தே மாதரம் பிள்ளை என அழைக்கப்பட்டார்.

நெல்லையப்பருக்கு இளையவர் பரலி சு. குழந்தைவேலன். நெல்லையப்பரோடு இணைந்து வ.உ.சி. யின் கப்பல் கம்பெனியில் கணக்கராக வேலைப் பார்த்தவர். பின்னாளில் லோகோபகாரி என்னும் இதழை நடத்துவதில் நெல்லையப்பருக்குத் துணைநின்றவர்.

நெல்லையப்பர் திருமணம் செய்துகொள்ளவில்லை. எனவே, தன்னுடைய இறுதிக் காலத்தில் பூங்கோதை என்னும் பெண்ணைத் தத்தெடுத்து வளர்த்தார்.

கல்வியும் இளமைக்காலமும்
நெல்லையப்பர் மெட்ரிக்குலேசன் வரை பள்ளியில் படித்தவர். அதற்கு அப்பால் தமிழிலக்கிய, இலக்கணங்களைக் கற்று, கவிதை எழுதும் திறமை பெற்றிருந்தார். 1907ஆம் ஆண்டில் பள்ளிப் படிப்பை முடித்த சில நாள்களிலேயே தூத்துக்குடியில் வ.உ.சி. நடந்திய சுதேசி கப்பல் கம்பெனியில் கணக்கராகப் பணியாற்றத் தொடங்கினார். அவ்வாண்டில் மராட்டிய மாநிலத்திலுள்ள சூரத் நகரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசு மாநாட்டில் கலந்துக் கொள்வதற்கு வ.உ.சி. உள்ளிட்டவர்களைத் திரட்டுவதற்காகத் தூத்துக்குடிக்கு வந்த சி. சுப்பிரமணிய பாரதியை வ.உ.சி. யின் வீட்டில் முதன்முறையாகக் கண்டார். அங்கிருந்த பாரதியின் கவிதைகள் அடங்கிய நான்கு பக்க வெளியீடு ஒன்றைப் படித்தும் இந்தியா இதழைப் படித்தும் பாரதிபால் அன்பு கொண்டார்.

விடுதலைப் போரில் பங்கேற்பு
வ.உ.சி., சுப்பிரமணிய சிவம், சுப்பிரமணிய பாரதி, நீலகண்ட பிரமச்சாரி, அரவிந்தர், வ.வே.சு.ஐயர் முதலிய விடுதலைப் போராட்ட வீரர்கள் பலரோடு தொடர்ந்து பழகிய நெல்லையப்பர் தானும் விடுதலைப் போராட்டங்கள் பலவற்றில் பங்கேற்றார். அவற்றுள் சில:

பிரித்தானியருக்கு இயன்ற வழிகளில் எல்லாம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் நோக்கில் இருந்த வ.உ.சிதம்பரனார், ஆங்கிலேயர்களின் வீடுகளில் வேலைபார்த்த துணி வெளுப்பாளர்கள், வேலையாட்கள், சமையற்காரர்களைத் திரட்டி வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தினார். அப்போராட்டத்திற்கு நெல்லையப்பர் பெரிதும் உதவியாக இருந்தார். 1908ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாள் விடுதலைப் போராட்ட வீரர் விபின்சந்திரபால் விடுதலை செய்யப்பட்டார். அந்நிகழ்வைக் கொண்டாடுவதற்காக காவல்துறையினரின் தடையை மீறி வ.உ.சி. தூத்துக்குடியில் சுப்பிரமணிய சிவத்தோடு இணைந்து மார்சு 9ஆம் நாள் ஊர்வலம் ஒன்றை நடத்தினார். அதில் பரலி சு. நெல்லையப்பரும் கலந்துகொண்டார். கப்பல் கம்பெனி நடத்தியது, ஊர்வலம் நடத்தியது, வந்தே மாதரம் எனக்கூவியது ஆகிய குற்றங்களுக்காக திருநெல்வேலி கொக்கிரகுளத்தில் இருந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வ.உ.சி.சிவா ஆகிய இருவரும் மார்சு 12ஆம் நாள் கைது செய்யப்பட்டு பாளையம்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டனர். இதனைக் கண்டித்துக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கான துண்டறிக்கை ஒன்றினை அச்சிட்டு நெல்லையப்பர் வெளியிட்டார். அதற்காக அவரை காவல்துறை கைது செய்தது; நீதிமன்றம் ஒரு மாதம் சிறைத்தண்டனை விதித்தது; அவர் பாளையம்கோட்டைச் சிறையில் வ.உ.சி, சிவம் ஆகியோரோடு அடைக்கப்பட்டார். 1930ஆம் ஆண்டில் மறைக்காடு என்னும் வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டார். அதனால் ஆறு திங்கள் சிறைத்தண்டனை பெற்றார். 1932ஆம் ஆண்டில் காந்தியடிகளின் கட்டளையை ஏற்று சென்னை சிந்தாரிப்பேட்டையில் கள்ளுக்கடை மறியல், அந்நியத் துணிக்கடை முன்பு ஆர்ப்பாட்டம் ஆகிய போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தினார். 1941ஆம் ஆண்டில் நடைபெற்ற தனிநபர் சத்தியாகிரகம் என்னும் தனியாள் அறப்போராட்டத்தில் கலந்துகொண்டார். அதனால் பெல்லாரி சிறையில் ஆறு திங்கள் அடைக்கப்பட்டார்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான உதவித்தொகையை இந்திய ஒன்றிய அரசாங்கம் (Union Government of India) இவருடைய இறுதிக்காலத்தில் வழங்கி வந்தது. அந்த உதவித்தொகையை 1967ஆம் ஆண்டில் இவருடைய பொருளாதார நிலை உயர்ந்துவிட்டது என தமிழக அரசு அனுப்பிய குறிப்பின் அடிப்படையில் இந்திய ஒன்றிய அரசாங்கம் நிறுத்திவிட்டது. எழுத்தாளர் எதிரொலி விசுவநாதன், அன்றைய சட்ட மேலவை உறுப்பினர்களாக இருந்த நாமக்கல் வெ. இராமலிங்கம், தி. க. சண்முகம் ஆகியோரின் முயற்சியால் 1969ஆம் ஆண்டு முதல் மீண்டும் அவ்வுதவித் தொகை கிடைத்தது.

# விஜய்-காக களத்தில் இறங்கும் தனுஷ்?



விஜய் நடிப்பில், ஹெச்.வினோத் இயக்கத்தில் உருவாகி வரும் படம் ஜன நாயகன். இப்படம் அடுத்தாண்டு பொங்கலுக்கு திரைக்கு வருகிறது. இதில் பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, பிரியாமணி, பாபி தியோல், கவுதம் வாசுதேவ் மேனன், நரேன் ஆகியோர் நடித்துள்ளனர். அனிருத் படத்திற்கு இசையமைக்கிறார்.

அரசியலால் விஜய் நடிக்கும் கடைசிப் படம் இது என்பதால், ரசிகர்கள் மத்தியில் இதற்கான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. சமீபத்தில் இப்படத்தின் முதல் பாடலான "தளபதி கச்சேரி" வெளியாகி அவரது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

ரசிகர்களுக்கு ட்ரீட் கொடுக்கும் விதமாக படத்தின் இசை வெளியீட்டு விழா டிசம்பர் 27ம் தேதி மலேசியாவில் உள்ள புகித் ஜலீல் அரங்கத்தில் நடைபெறவுள்ள அறிவிக்கப்பட்டது.

பிரமாண்டமாக நடைபெற உள்ள இந்த இசை வெளியீட்டு விழாவில் நடிகர் தனுஷ் கலந்துகொள்ள உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதேபோல் இதன்முன் விஜயை வைத்து படம் இயக்கிய இயக்குநர்கள் லோகேஷ் கனகராஜ், நெல்சன், அட்லீ ஆகியோரும் கலந்துக்கொள்ள உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

எனவே விழாவில் விஜய் ஒருபுறம் குட்டி கதை சொல்ல தனுஷ் மறுபுறம் ரஜினி ஸ்டைலில் பேச வாய்ப்புள்ளதாக ரசிகர்கள் எதிரார்ப்பிக்கின்றனர்.

மறுபுறம் சுதா கோங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள பராசக்தி பட இசை வெளியீட்டு விழாவில் ரஜினி, கமல் கலந்துகொள்ள உள்ளதாகவும் கூறப்படுகிறது.



விஜய் தொலைக்காட்சியில் நடிக்கும் சீரியல் நடிகைகளுக்கு மக்களிடம் பெரிய வரவேற்பு கிடைக்கிறது. இந்த தொலைக்காட்சியில் ஒரு தொடர் நடித்தாலே பிரபலம் ஆகிவிடுகிறார்கள்.

அப்படி இந்த தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பாரதி கண்ணம்மா, பாண்டியன் ஸ்டோர்ஸ் போன்ற தொடர்கள் மூலம் பிரபலமானவர் காவ்யா அறிவுமணி.

பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியல் மூலம் பிரபலமான இவர் பாதியிலேயே தொடரில் இருந்து வெளியேறிவிட்டார்.

தொடரில் இருந்து வெளியேறிய கையோடு காவ்யா அறிவுமணி அடுத்தடுத்து நிறைய படங்கள் நடிக்க கமிட்டாகியுள்ளார்.

தற்போது இவர் சேலையில் இருக்கும் அழகிய ஸ்டில்ஸ்.

# மருந்து வியாபாரம் – கார்ப்பரேட் லாப வெறி



தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, பெங்காலி மற்றும் மராத்தி ஆகிய 7 மொழிகளில் வெளியாக உள்ளது.

நிவின் பாலி, தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் பல திரைப்படங்களை லைனப்பில் வைத்துள்ளார். பாக்கியராஜ் கண்ணன் இயக்கும் பென்ஸ் திரைப்படத்தில் வில்லன் கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார். ராம் இயக்கிய ஏழு கடல் ஏழு மலை படத்தில் நடித்துள்ளார். மேலும் நயன் தாராவுடன் டியர் ஸ்டுடெண்ட்ஸ் படத்திலும் நடித்து முடித்துள்ளார்.

அதை தொடர்ந்து நிவின் பாலி Baby Girl படத்தில் நடித்து முடித்துள்ளார். இவர் நடிப்பில் சர்வம் மாயா என்ற படம் கிறிஸ்துமஸ்க்கு வெளியாக உள்ளது.

இதற்கிடையில் பி.ஆர். அருண் எழுதி இயக்கியுள்ள 'பார்மா' என்ற வெப் தொடரில் நிவின் பாலி நடித்திருந்தார் .

இந்த படம் வரும் 19ஆம் தேதி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, பெங்காலி மற்றும் மராத்தி ஆகிய 7 மொழிகளில் வெளியாக உள்ளது. இந்த தொடரின் டிரெய்லர் தற்போது படக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.



தமிழ் சினிமா ரசிகர்களின் மனதை கொள்ளை கொண்டவர் நடிகை சினேகா. புன்னகை அரசி என மக்களால் கொண்டாடப்படும் இவர் அவருடைய சிரிப்பால் தனக்கென தனி ரசிகர் கூட்டத்தை பெற்று உள்ளார். நடித்துக் கொண்டிருக்கும் போதே நடிகர் பிரசன்னாவை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர்.

நடிகை சினேகா சென்னையில் Snehalayaa என்ற புடவை கடை நடத்தி வருகிறார். சமீபத்தில் கோயம்புத்தூரில் தனது 2வது புடவை கடையை திறந்துள்ளார்.

தற்போது இவர் சேலையில் இருக்கும் அழகிய ஸ்டில்ஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# திரைப்படமாகும் Peaky Blinders.. அசத்தல் தலைப்புடன் ரிலீஸ் தேதி அறிவிப்பு



உலகெங்கிலும் கேங்ஸ்டர் கதைக்கு என்று என்றுமே தனி மவுசு உள்ளது. அந்த வகையில் இங்கிலாந்தின் புகழ் பெற்ற கேங்ஸ்டர் கதை பீக்கி 'பீக்கி பிளைண்டர்ஸ்' (Peaky Blinders). இணைய தொடராக வெளிவந்து வரவேற்பை பெற்ற இதன் 6வது சீசன் 2022 இல் வெளியானது. அடுத்ததாக 2 புதிய சீசன்களுக்கான அறிவிப்பு அண்மையில் வெளியானது.

இந்த க்ரைம் டிராமா தொடர், 1880கள் முதல் 1920கள் வரை பர்மிங்காம் நகரில் இயங்கிய 'பீக்கி பிளைண்டர்ஸ்' என்ற நிஜமான குற்ற கும்பலை அடிப்படையாகக் கொண்டது. தொடர் முழுவதும் சிலியன் மர்ஃபி (Cillian Murphy) டாமி ஷெல்பி கதாபாத்திரமாக வாழ்ந்திருப்பார். கடந்த 2023 வெளியான கிறிஸ்டோபர் நோலன் இயக்கிய ஓபன்ஹைமர் படத்திற்காக சிலியன் மர்ஃபி ஆஸ்கர் விருது வாங்கியது அவரது நடிப்புத்திறனுக்கு சான்று.

இதற்கிடையே பீக்கி பிளைண்டர்ஸ் தொடரை படமாக தயாரிப்பதாக நெட்பிளிக்ஸ் அறிவித்தது. படத்திலும் சிலியன் மர்ஃபி -யே டாமி ஷெல்பியாக நடிக்கிறார். முதலாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டனில் நடைபெறும் வரலாற்று கதைகளத்துடன் இந்த படம் உருவாக உள்ளதாக கூறப்படுகிறது

இந்நிலையில் இந்த படத்திற்கு "தி இம்மோர்டல் மேன்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. மேலும் 2026 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் தேதி படம் ரிலீஸ் ஆகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட திரையரங்குகளில் மட்டுமே வெளியாகும் "தி இம்மோர்டல் மேன்" திரைப்படம் மார்ச் 20 ஆம் தேதி நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் நேரடியாக வெளியிடப்படும் என்றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

# ரஜினி-ன் 75வது பிறந்தநாள்: வரும் 12ம் தேதி ரசிகர்களுக்கு காத்திருக்கும் திரை விருந்து



ரஜினியின் இளைய மகள் சவுந்தர்யா ரஜினிகாந்த் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பிறந்த நாள் வரும் 12ம் தேதி கொண்டாடப்படுகிறது. 75வது பிறந்தநாளை கொண்டாடும் ரஜினிக்கும் அவரது ரசிகர்களுக்கும் சர்ப்ரைஸ் கொடுக்கும் வகையில் அவரது இளைய மகள் சவுந்தர்யா ரஜினிகாந்த் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே, ரஜினியின் பிறந்தநாள் அன்று படையப்பா ரீ ரிலீஸ் செய்யப்போவதாக தகவல்கள் வெளியான நிலையில், இன்று அவர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

அதன்படி, ரஜினியின் பிறந்தநாளான வரும் 12ம் தேதி அன்று சூப்பர் ஹிட் திரைப்படமான படையப்பா 4K தரத்தில் வெளியாக இருப்பதாக சவுந்தர்யா ரஜினிகாந்த் தனது எக்ஸ் தள பக்கத்தில் அறிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல.. நடிகர் ரஜினிகாந்த் சினிமாவில் நடிக்க வந்து 50 ஆண்டுகள் நிறைவு செய்ததை கொண்டாடும் விதமாகவும் படையப்பா திரைப்படம் ரீ ரிலீஸ் செய்யப்படுகிறது. இதனால், படையப்பாவின் ரீ ரிலீஸ்க்காக ரசிகர்கள்கள் ஆவலுடன் உள்ளனர்.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


WANTED
NEWS COORDINATOR
NEWS
Salary
Rs. 25000
Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


MLM Software/Website
Rs. 9999/- only/-
Contact :
+91 9853719337
+91 7436914247
Whatsapp
+91 7684053514
• Binary MLM Software
• Matrix MLM Software
• Single Leg MLM Software
• UniLevel Plan MLM Software
• Re-purchase Plan MLM Software
• Board Plan MLM Software
• Cryptocurrency MLM Software
• Investment Plan MLM Software
• Helping/ Gift Plan MLM Software


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


அருள்தரும்
தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com




### நான் கவிஞனும் இல்லை !

நாங்கள் கவிஞர்கள்
கிடையாது... எங்களுக்கு
இலக்கணம், இலக்கியம்,
புராணம் தெரியாது....
அடுக்கு மொழியிலோ...
உவமை மொழியிலோ...
இரட்டை கிளவியிலோ...
பேசவும் எழுதவும்
தெரியாது.... எங்களுக்கு
கவிதை எழுத கற்றுத்
தந்ததெல்லாம்... ரணங்களும்,
தோல்விகளும், காயங்களும்,
வேதனை
களுமே.... !
கவிதை எழுத
இத்தனை
அனுபவம்
போறாதோ !



**எம்.பி.தினேஷ்**
கோவை



பகிரும் நேசமும்...
உடனிருக்கும் காலமும்
குறுகிய படியே...என
கோபித்துக் கொள்கிறாய்....

கார்மேகங்களில் பொதிந்து
கிடக்கும்
...பெருமழை
யாய்... என்னை
நனைத்துக்
கொண்டே
இருக்கிறாய்...
என்பதனை
உணராமல்..



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

உன் கைபேசித்
தொடு திரையில்
என்னை
உயர்த்தவும்
தாழ்த்தவும்
முடிகிறது
உனக்கு !



**ரிஷபன்**



### தடயம் !

வீட்டின் பின்னால்
குவியலாய் கிடந்த
காலியான மது, பீர்பாட்டில்,
சிகரெட் பாக்கெட்டுகளை
ஒரு சாக்கில் கட்டி
தெருமுனை குப்பை சேகரிப்பு
தொட்டியில் வீசினான் !

தன் செல்ஃபோனில் தான்
பார்த்தவற்றை குரோம்
ஹிஸ்டரியில் சென்று
அனைத்தையும் அழித்தான் !

ஒரு வாரமாக தான் செய்த
அவுட்கோயிங் கால்கள்
இன்கம்மிங் கால்களை
உடனடியாக டெலிட்
செய்தான் !

வீட்டில் ஊதுபத்தி
சாம்பிராணியை பற்றவைத்து
பக்தி மணம் பரவிடச்
செய்தான் !

ஆம்... எல்லாம்
ஒரு முன்னெச்சரிக்கை...
ஊருக்கு போன
மனைவி திரும்ப வந்து
கொண்டிருப்பதாக தகவல் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

### சுமைகள்.!

ஐயிருத் திங்கள்
மெய்யதுசோர.. அன்னை
வயிற்றில் சுமையானாய்!

கையறு நிலையில்
தந்தையின் தோளில்
காண்பவர் கண்ணுக்குச்
சுமையானாய்!

ஐயங்கள் தீர.. அன்றொரு
நாளில் ஆசான் நெஞ்சினில்
சுமையானாய்!

செய்வது யறியா..
சின்னஞ் சிறு வயதில்
தெருமண் புழுதியின்
சுமையானாய்!

பருவம் தொடங்கி
பாவையர் பலரின்
பார்வையில் காதல்
சுமையானாய்!

பைங்கொடி ஒருவளை
கரம்பற்றி கட்டிலில்
அவளுக்குச் சுமையானாய்!

கருவம் இளமை
காசுடன் பொருளுக்கு
ஊரெல்லாம் அலைந்தே
சுமையானாய்!

காசினைத் தேடி கடவுளைத்
தேடி ஆசையால் பூமிக்கு
சுமையானாய்.!

நேசமும் பாசமும் நித்தியம்
மென்றே நினைப்பினில்
இங்கேசுமையானாய்!

வேசங்கள் கலையும்
நாடகமேடையில்..
நடித்தே உறவுக்கு
சுமையானாய்.!


ஆசையின் விளைவில்
ஆடினாய்.. ஒருநாள்..
பாயினில் படுத்தேச்
சுமையானாய்!

ஓடியும் ஒளிந்தும் ஆடிய
ஆட்டத்தில்.. எமனின்
கயிற்றுக்கு சுமையானாய்.!

கூடினர் கூவினர்
அரற்றினர் காடுசெல்ல
நால்வரின் தோள்களில்
சுமையானாய்!

இத்தனைச் சுமைகளை
இவர்களுக் களித்தாய்..
எத்தனைச் சுமைகளை
நீ..சுமந்தாய்?

**வே.கல்யாண்குமார்.**



### பசுமையை நேசி..

பாவையை நேசி..
பறவையை நேசி..
பசுமையை நேசி பாரிலே..!
தேவையை கருதி
திரும்பவும் யோசி
நீரினை ஊற்றுக வேரிலே.!

கழனியை நேசி
உழவினை நேசி
கண்களை போலவே
பசுமையை..
வழியிலே தழைக்க
வைத்திடு மரங்கள்
வாழ்விலே காணலாம்
வளமையை..

விதைகளை ஊன்று
விடியலை காண
வேலியாய் நின்றே
காப்பாய்.. கதையல்ல தோழா
காணுக பசுமையை
காலத்தே பயிரிட்டு
சேர்ப்பாய்..

இலைகளும் தழைக்க
மலர்களும் பூக்க..
இயன்றதை செய்வதே
மனிதம். நிலையினை
உயர்த்த நிலமெலாம் பசுமை..
விலையிலா இயற்கையே
புனிதம்.



பாலையில்
கூட..
பாரையில்
நீராய் ஊறிடும்
இயற்கை
நீரூற்று
சாலைகள் தோறும்
மழைதரும் மரங்கள்
வேர்களில் தோழா
நீர் நீ.. ஊற்று

**வே.கல்யாண்குமார்.**



### கடலுடைந்த விழிகள்

அடர் மரங்கள் சூழ்ந்த
இந்த இரவுத்தெருக்கள்
இருள்போர்த்தி உன்
நினைவை
இறுகத்திணிக்கின்றன..

உன் சிரிப்பொலி
அரவணைக்கும்
பாதங்களின் கொலுசொலி
கேட்கத்தவிக்கும்
செவிகளுக்கு
இந்நீள்நெடுந்தூரம் வரம்..

கால்கடுக்கும் பயண
இடைவெளியில்
எங்கேனுமொரு மரநிழலில்
நீ மடிசேர்க்க காத்திருக்கும்
நப்பாசையோடு
அனிச்சையாய் அலைவுறும்
என் மீச்சிறு கவிதைகள்..

என் இருப்பை
பறித்துக்கொள்ளும்
சில தூக்கணாங்
குருவிகளுக்கு நீ இடமளிக்க
விழைதலின் பொருட்டு
என் வலிகள் வடுக்களாகும்..




நீ அறிந்திடாத
அல்லது
அறிய
விரும்பிடாத
என்
அறைகளின்
சுவர்களுக்கு
கடலுடைந்த விழிகள்
பொருத்தப்பட்டிருந்தன..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்

பருக்கை தரையில்
மெதுவாக, மெதுவாக
நகர்ந்து கொண்டே
இருந்தது. எடுத்துச்
செல்லும் எறும்பின்
கவனமெல்லாம்
மிதி படாமல்
கூடடைவதில் இருந்தது.

**கே. பி. ஜனார்த்தனன்**



### போதையின் அதிகாரம்

மொத்த அழகும்
குத்தகைக்கு எடுத்தவளே...

உன் கருங்கூந்தலும்
காது சிமிக்கியும் காதல்
தூது சொல்லுதம்மா...!

உன் காந்த பார்வையம்
கண் சிமிட்டும் அழகும்
உன்னை ஆள
துடிக்குதம்மா...!

உன் மென்மையான மேனியும்
முட்டி வளந்த முன்னழகும்
மூச்சடைக்கவைக்குதம்மா...!

நீ பாவாடை கட்டி பதிஞ்ச
இடம் பல பல சாதனைகள்
படைக்குதம்மா...!

உன் கால் கொழுசும்
கண்டாங்கி சேலையும்
கவிதைகள் பல
சொல்லுதம்மா...!

உன் உச்சாந்தலை முதல்
உள்ளாங்கால் வரை
கொள்ளை அழகு கொட்டி
கிடக்குதம்மா...!!



அதை அள்ளி
அனைக்க
என் மனசும்,
கையும் கபடி
ஆடுதம்மா....!!

**பொன். கருணா**
நவி மும்பை

### மீட்போம்

" விழிகளில் வழியும்
கண்ணீருக்கு பஞ்சம்
இல்லை கடல் போல்
பரவி விரிகிறது ...."

" தேடினேன் தேடினேன்
சுகப்பட்ட மனிதரும்
தென்படவில்லை ...."

" எங்கும் மனதில்
புழுக்கம் ஏக்கம்
தாக்கம் தவிப்பு
பயம் நடுக்கம் ....."

" காரணம் கண்டுகொள்ள
ஆண்டுகள் பல
ஓடியே மறைந்தது ...."

" புரியாத புதிராக
புரிந்த விடையாக
உணர்ந்த பதிலாக
உறுதியான மனமாக ...

" தொடர்கிறது
அகழ்வாராய்ச்சி
எதிர்கால தேடல்
அடுத்த தலைமுறை ...."

" எதை இழந்தும்
தெரிந்து கொள்ள தயார்..."

" நேர்மை நாணயம்
தூய்மை வாக்குசுத்தம்
தொலைந்த
இடம்
மட்டும்
தெரிய
வில்லையே...."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி



### பசி

உன்னைப்பார்த்தால்
பசி தீர்வதில்லை!
படித்தால் மட்டுமே
பசி தீர்கிறது!

### அரண்மனை

வெற்றிடமாக இருந்த
என் இ த ய ம் நீ வந்து
அமர்ந்த பின் ஓர் அழகிய
அரண்மனையாகி விட்டது!

### உள்ளத்தரசி

என் உள்ளத்தரசி
நீ என் இல்லத்தரசியான
பிறகு என் வீடு கா த லு ம்
கா த லை ச் சார்ந்த
நிலமுமாகி விட்டது!

### முகவரி

உன் முகவரி கேட்டார்கள்
தேவதை 143 தென்றல் தெரு
அழகு பாளையம்
கவிதை நகர் வனப்பூர்
அஞ்சல் முத்துநகரம்–143 143
வியப்பூர் மாவட்டம் என்று
எழுதிக் கொடுத்தேன்!

### பலன்

அழகு தேவதை நீ
தவறாமல் தினமும் ஏதேனும்
ஒரு பூவைச்
சூடுகிறாய்!
தவறாமல் பிறந்த
பலனை அடைகிறது!
நீ சூடிய பூக்கள்!

### அன்பு

முன் வைத்த
காதலை
எப்பொழுதுமே
பின் வைப்பதில்லை
உண்மையான அன்பு!

### கொக்கு

எத்தனையோ பெண்கள்
கடந்து செல்ல நீ
வரும் வரை ஆசையுடன்
காத்திருக்கும் நானும்
ஒரு வகையில்
கொக்கு தான்!

### அதிசயம்

உன்னை ரசித்துப் பார்த்தால்
நீ பூவிருந்தவல்லி யிலிருந்து
வருவது போல் தெரிகிறது!
உன்னை ருசித்துப் பார்த்தால்
நீ பழமுதிர்சோலை யிலிருந்து
வருவது போல் தெரிகிறது!

### வா


தன்னிடம் வந்தாரை
வாழ வைக்குமாமே
இந்தக்கா த ல்!
வா.... அன்பே நாமும்
இணைந்து இருவரும்
கா த லி ட ம்
கா த லு ட ன் போவோம்!

### சுரபி

என் மீசையைப் பார்த்தால்
அச்சமுறும் நீ என்
ஆசையைக் கேட்டால்
(மட்டும்) அப்படியே
மு த் த சு ர பி யா கி
விடுகிறாய்!



**முத்து ஆனந்த் வேலூர்**



### நகலகம்

வாழ இன்றியமையாத செலவினம் ரொம்ப
ரொம்ப குறைச்சல்

இரவில் சயனிக்க கட்டாந்தரையில் பாயிருந்தால்
உறக்கம் வராதா?

பிறரைப் போல் பகட்டாய் ஜொலிக்க பொற்குவை தேவை

மதிப்புடன் வாழ்ந்த மனிதனுக்கு நேரும்
அவமானம் மோசமானது
பகன்றார் சுப்பிரமணிய பாரதி

வாழ்வியலைக் கற்றுத் தேர்ந்திடு போற்றும்
வண்ணம் வாழ்ந்திடுவீர்
ஜெயக்கொடி பறக்கும் உச்சத்தில்



**பி. பழனி, சென்னை.**



### அழகிய உலகம்


கடல்சூழ்ந்த பூமியிலே பெருமலைகள்
கல்மலையில் நீர்நழுவி அருவியாகிக்
கடக்கின்ற ஆறாக நதியாய் மாறிக்
காடுகளாய் வயல்களாகச் செழிக்க வைக்க
நடமாடும் கோடிகளாய் உயிர னங்கள்
நகர்கின்ற ஊர்கின்ற பறத்த லென்றே
அடடாவோ கற்பனைக்கும் எட்டிடாத
அற்புதங்கள் நிறைந்ததிந்த உலகமன்றோ !


நதிக்கரையில் தோன்றிட்ட நாக ரீகம்
நன்றாக வளர்ச்சியுற மனிதனின்று
புதிதாகப் புதிதாக அறிவு பெற்றுப்
புதுமைகளைப் படைத்திட்டான் உலக மோங்க
நதிநீரில் மின்சாரம் பிரித்தெ டுத்தான்
நகரங்கள் உருவாக்கி உயரச் செய்தான்
அதிநவீன தொழிற்சாலை கட்டுவித்தே
அனைத்துவகைத் துறைகளிலும் வளர்ச்சி பெற்றான் !

வெள்ளைநிற கறுப்புநிற மக்களாக
வெளிப்படுத்தும் மொழிகளிலே வேறு வேறாய்
அள்ளியுண்ணும் உணவுகளில் கலாச்சாரத்தில்
அணிகின்ற உடைகளிலே வேறு வேறாய்த்
தள்ளிப்பல் நாடுகளில் வாழ்ந்த போதும்
தமரென்றே அணைக்கின்ற நேயம் காட்டிப்
பள்ளமேடு இருந்தாலும் மனத்திற் குள்ளே
பாகுபாடு இல்லையென்றால் அழகே ஞாலம் !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



இந்த நூலுக்கான எடைத்தராசே முற்றிலும் வேறொன்றாக இருக்கவேண்டும். ஒரு கவிமனம், புனைகதை எழுதினால் என்னவெல்லாம் மாயம் செய்யுமோ, அவை அத்தனையும் இக்கதைகளுக்குள் பொதிந்திருக்கின்றன. அதுவும் வைதீஸ்வரன் கவிமனம், இயற்கையால் நிரம்பியது. அதன் ஆச்சரியங்களை, வேறு வேறு சொற்களுக்குள் புகுத்தி, உன்னதங்களை உணர வைப்பது. நாம் காணாத கோணத்தில் சுட்டிக்காட்டுவது.

கவிமனம் என்ற சொல்லை மேலே பயன்படுத்தினேன்.

இதோ பாருங்கள், இந்த அழகு வெடிப்புகளை:

"ஒரு குழந்தையின் சந்தோஷத்தை மலர்த்திக் கொண்டிருந்தது."

"வீசும் மலைக்காற்றின் கிசுகிசுப்பால் வயல்கள் சதா முதுகை நெளித்துக்கொண்டே இருக்கின்றன."

"அழுக்குக் கிழவர்கள் போல் கழுகுக் கூட்டங்கள் அரைத் தூக்கத்தில்..."

சிறுகதை வாசிப்பவனுக்கு ஆச்சரியங்கள் தேவையாக இருக்கின்றன, உன்மன ஓட்டத்தில் சிகரங்கள் தேவைப் படுகின்றன, யதார்த்தத்தோடு நம்பும்படியான கற்பனைகள் தேவைப்படுகின்றன. தட்டையான எதார்த்தங்கள் பிடிப்பதில்லை, ரசிப்பதில்லை. இதைத்தான் லத்தீன் அமெரிக்க மேஜிக்கல் ரியலிச எழுத்துகள் வழங்குகின்றன. அவை, தமது தொன்மங்களையும் வாய்மொழிக் கதைகளையும் பயன்படுத்தி, இத்தகைய வாசிப்பு அனுபவத்தை வாசகனுக்கு வழங்குகின்றன.

ஆர். வெங்கடேஷ் அவர்களின் முன்னுரையிலிருந்து...

# நூல் விமர்சனம்:

நூலின் பெயர்:
ஒரு கொத்துப் புல்
ஆசிரியர்: வைதீஸ்வரன்
விலை : ₹200
வெளியீடு: வித்யுத் பப்ளிகேஷன்ஸ்
தொடர்புக்கு: 9003107654

*கவிஞர் வைதீஸ்வரன் எழுதிய 26 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு. இதிலிருந்து ஓரிரு கதைகள் இங்கே பார்வைக்காக :*

**1. ஒரு கொத்துப் புல்:**

*கேதார்நாத் உச்சிக்கு செல்லகௌரிகுண்ட் என்ற ஸ்தலத்தில் இருந்து 14 கிலோமீட்டர் குட்டை குதிரையின் மேல் 2 மணி நேரத்திற்கு மேல் சவாரி செய்வது பற்றியும், அதில் ஒரு குதிரைமீது, நிலச்சரிவினால் மலையிலிருந்து பாறை உருண்டு விழுந்ததில் , அதன் வாயில் தின்னப்படாமல் தொங்கிக் கொண்டிருந்த ஒரு கொத்துப் புல் தனக்கு வாழ்க்கையின் தீராத பற்றைச் சொல்லிக் கொண்டிருந்தது என்கிறார்.*

**8. பெயர்**

*இராணுவத்தில் வேலையில் இருக்கும் பிரகாஷ் விடுப்பில் ஊரில் இருக்கும் தன் பெரியப்பாவைப் பார்க்க வருகிறான். அவன் பிறந்த நாளுக்காக ஹோமம் எல்லாம் ஏற்பாடாகி இருக்க தன் நண்பன் ஜார்ஜ்ஜை சாப்பிட அழைக்க நினைக்கிறான். சாஸ்திரிகள், உறவினர்கள் என்ன சொல்வார்களோ என பெரியப்பா தவிர்க்க,சகோதரி கணவனை அழைத்து வர இருசக்கர வாகனத்தில் செல்பவன் விபத்துக்குள்ளாக அவனைக் காப்பாற்றிய மருத்துவமனையில் சேர்த்தவன் பெயரும் ஜார்ஜ் என அறிந்து அதிரும் பெரியப்பா , அவன் பெயர் ராமுவா இருந்தா என்ன? கரீமா இருந்தாலென்ன யாராக இருந்தாலும் சாப்பிட அழைத்திருக்க வேண்டும் என உணர்கிறார்.*

**26. கந்தல் புத்தகம்:**

*இளம் வயதில் விதவையான முத்து அத்தை கோவிலில் நொண்டிய ஒரு இளைஞனை அழைத்து காரணம் கேட்க, அட்டாளியில் ஏறி பாத்திரம் எடுத்த போது சறுக்கி விழுந்ததில் கணுக்கால் மடங்கி வீங்கிப்போனதாகக் கூறுகிறான். வீட்டிற்கு வந்த அத்தை டிரங்க் பெட்டியில் இருந்த புத்தகத்தைப் படித்து அந்த இளைஞனை வீட்டிற்கு வரச்சொல்லி, கிணற்றடியில் வைத்து தன் புடவைத் தலைப்பில் 7-8 முடிச்சுகள் போட்டு ஒரு வித தாள லயத்தோடு அவன் கணுக்காலில் அடித்து மந்திரம் சொல்லி குணப்படுத்துகிறாள். எப்படி அத்தை? என வியந்த அண்ணன் மகனிடம், " சாகும் முன் உன் அத்திம்பேர் சொல்லிக் கொடுத்தது, அவர் எனக்கு விட்டுப்போன ஒரே சொத்து அந்த கந்தல் புத்தகம் தான்" என்கிறார்.*

**ஸ்ரீகாந்த் திருச்சி**




### நாளைய உலகம்.!

இழப்பதற்கு எதுவும் இல்லை எங்கள் மனதிலே.!
பெறுவதற்கு அதிகம் உண்டு.. இனிய உலகிலே.!

தேடுகின்ற மனது வேணடும் உனது நெஞ்சிலே..
தெய்வநிலை எய்தும் உறுதி மனித வாழ்விலே..!

காண்பதெல்லாம் உண்மை யென்று நம்பும் வரையிலே..
மெய்ப் பொருளை உணரவதென்று ? உனது வாழ்விலே!

விடியும் போது விடியும் என்று இருக்கும் வரையிலே..
வெளிச்சம் என்று தோன்றிடுமோ உனது மனதிலே.!

**வே.கல்யாண்குமார்.**



### அன்னையை இழந்தவனின் கண்ணீர் வரிகள் !

தெய்வத்திற்கு கர்ப்பக்கிரகம்தான் இருப்பிடம் !

நான் சிசுவாய் இருந்தபொழுது என் அன்னையின்
கர்ப்பப்பைதான் என் இருப்பிடம் !

என்னைப் பத்துமாதம் சுமக்க என் அன்னை பெற்ற
இன்னல்கள் ஏராளம் !

நான் சிசுவாய் ஜனித்தபொழுது செத்துப் பிழைத்த என்
அன்னை ஒரு தெய்வம் !

தன் இரத்தத்தை பாலாக்கி எனக்கு ஊட்டிய
என் அன்னை ஒரு தெய்வம் !

பாலகனாய் இருந்த எனக்கு நெய் கலந்த
நிலாச்சோறு ஊட்டிய என் அன்னை ஒரு தெய்வம் !

அம்மை நோயினால் பாயில் விழுந்த எனக் காக நோன்பிருந்து
நேர்த்திக் கடன் செலுத்திய என் அன்னை ஒரு தெய்வம் !

தந்தை அடித்த அடிகளை தன்னைக் கவசமாக்கிக்கொண்டு
அத்தனை யையும் வாங்கிக்கொண்ட
என் அன்னை ஒரு தெய்வம் !

எனக்கு ஏதாவது ஒன்று என்றால் பதறித் துடித்துப்போன என்
அன்னை ஒரு தெய்வம் !



என் அன்புத் தெய்வமான என் அன்னையை
இவ்வளவு சீக்கிரம் உன்னிடம் அழைத்துக் கொ
ண்டாயே தெய்வமே ! இது நியாயமா?தர்மமா ?
உன்னோடுசங்கமித்துவிட்ட என் அன்னையைத்
திருப்பித்தா தெய் வமே ! '

**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**



### தேடல் ஒரு காவியம்

குழந்தைப் பருவத்தில்
அம்மாவைத் தேடி


பள்ளிப் பருவத்தில் பாட
புத்தகங்கள்
நல்லாசான் நன் நட்புகள் தேடி

பள்ளி இறுதியில்
மதிப்பெண்கள் தேடி
மேற்ப் படிப்பில் பிடித்த
பாடம்

கல்லூரி நண்பர்கள்
வட்டங்கள் நாடி

உத்தியோகம் சம்பளம்
உயர்வாக வேண்டி
வாழ்க்கைத் துணை
வசதி வாய்ப்பு
மணியான குழந்தை
செல்வம் பெற்று

மறுபடி ஒரு சுற்றல் வந்து
வயோதிகம் வந்தபின்
ஏங்குது மனம் பற்றுப் பாசம்
ஆறுதல் தேடி



மீண்டும் பிறப்பு
வேண்டா வரம்தேடி

வாழ்க்கைச் சக்கரம்
காவியம் ஆனது

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்



### கொடி நாள்!

நேரிசை வெண்பா!

முப்படை வீரரின்
மேன்மைப்பணிகளைத்
தப்பாமல் போற்றிடும்
தக்கநல்...
ஒப்பிலா நாளே கொடிநாளே
நன்கேதான்
வாழ்த்திடுவோம்
தாளாண்மையோடு தக!

வீரர் தியாகமுறு வீறாம்
உணர்வையே தீரமுடன்
வாழ்த்திடுவோம்
தேர்ந்தவரை...
ஆரத்தழுவியே
போற்றிடுவோம் அன்னாரின்
தொண்டை அழகாகச்
சாற்றிடுவோம் ஆம்!

ஊனமுற்ற வீரரின்
உன்னத இல்லத்தை
ஆனமட்டும் பாதுகாப்போம்
அன்பையே.. கானமுடன்
தந்தே மகிழ்ந்திடுவோம்
தாங்கிப்பிடித்திடுவோம்
சிந்தனை செய்தலே சீர்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

### புரிதல் வேண்டும்

மாதம் மும்மாரி பெய்த காலம்
மிரட்டியதில்லை மழை.

புவியில் மரம் செய்ய மறந்து
தீங்கு விளைவிப்பதில்
சாதனை .

அபகரிப்பின் வகைமைகளில்
பேரிடரை சிந்திக்க
மறந்தோம்.

பேரழிவை அறுவடை
செய்வதும் கட்டாயமானது.

இயற்கைச் சீற்றம்
ஒதுங்கவோ ஓடி ஒளியவோ
முடியவில்லை...

பருவநிலையில் மாற்றம்.

பனியும் மழையும் வெயிலும்
வாட்டி வதைக்கின்றது.
கண்முன்னே யாவரையும்
கொன்று புதைக்கின்றது.

புலம்புவதும்
புலம் பெயர்வதும்
வாடிக்கையானது.

புரிதலில் சமரசம் செய்து
இயற்கை சமநிலை




காக்க
வேண்டும்.

**எறும்பூர்**
**கை.**
**செல்வகுமார்,**
செய்யாறு.



சோடா புட்டி கண்ணாடி
தான் சோக்கா தான்
இருக்குதடி சொர்க்கம்
தான் செல்ல தேவதையா நீ
இருக்க வேணாம்டி
சோளக்காட்டு
பொம்மையா தெரிந்தாலும்
சொக்கத்தங்கம் உன் குணம்
போதுமடி! குட்டிமா வட்டியும்,



முதலுமா தான்
உன் காதல்ல
காலத்துக்கும்
தருவேன்டி!

**@-லி.**
**நௌஷாத்**
**கான்-@**



### நீ மட்டுமே அல்ல... நானும்....

என்னைப் பற்றியே
எழுதுகிறாய்" என
வெட்கப்படுகிறாய்....

உன்னை மட்டும் அல்ல...
நான் எழுதுவது...
காதலையும் சேர்த்து தான்....

ஒப்பனை...

உன் திசையில்
திரும்புகையில் தான்
மேலதிக ஒப்பனை செய்து
கொள்கிறது...மொழி...
உன்னைப் போலவே....

-------------------

சருகுகள் கூட சிறகு
முளைத்து பறந்து
போகின்றன... உன்



வருகையைக்
கண்டதும்....

உன்
கொலுசொலி
கேட்டு
மலர்கின்றன...
தோட்டத்தில்...மல்லிகள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

மனம் ஒரு
ரெண்டாங்கெட்டான் தான் ??
இலட்சியங்கள் ஒரு புறம்
ஓயாமல் தொல்லை
கொடுத்து கொண்டே
ஒரு புறம் இன்னொரு புறம்
குடும்ப சூழ்நிலை
மாத சம்பளத்தின் பின்னே
ரொட்டி துண்டுக்கு
ஆசைப்படும் நாய் போல
வேலையை கெட்டியாக
பிடித்து கொண்டே !!
அடுத்து என்ன செய்ய ??
எப்படி வெல்வேன் ?
என் லட்சியங்களை –என்ற
போட்டா–போட்டியில்
சிக்கி தவிக்கிறது
பாழாய் போன உயிர் !!

**லி .நௌஷாத் கான்**

### சிலரது கொள்கை முடிவுகள் குழப்பம் தருகிறது.

முடிவினை அவர்கள்
எடுக்கிறார்கள் அதனை
நம் வாயால் நம்மையே
சொல்லவும் வைக்கிறார்கள்

இதனை அவர்களது
புத்திசாலித்தனம் உள்ளதா
நமது முட்டாள் தனம்
என்பதா

சில நேரங்களில் நன்மை
நடப்பது போலத்தான்
தெரிகிறது ஆனால் அதன்
முடிவில் அது நமக்கான
ஆப்பு என்பது அறியாமல்
போய் விடுகிறது

உங்கள் கொள்கையை
சுயநலம் என ஆனபின்
அதில் மற்றவர் நலனை
எதிர்பார்ப்பது அறிவீனம்
தான்

உடலெங்கும் காயங்கள்
மனதெங்கும் ஆறாத அதன்
ரணங்கள்

முகத்திற்கு ஒரு வகை
முகமூடி என்றால்
ஆயுதங்களுக்கும் முகமூடி

ஆயுதங்கள் பல விதமாய்
உள்ளது அன்பினை தடவி



பூவால்
அலங்கரித்து
இதயத்தில்
பாயும் இனிய
ஆயுதங்களால்
தான் அதிக
ஆபத்து.

**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

### ஏன் இந்த வேறுபாடு ?

ஒரு வீட்டில் சின்ன
மருமகள் பெரிய மருமகள்
இருக்கிறார்கள்.

ஆனால் சின்ன மருமகளை
மகளாவும்

பெரிய மருமகள் வீட்டின்



சம்பளம்
இல்லாத
வேலைகாரியாக
இருக்கிறார்கள்.

ஏன் இந்த
வேறுபாடு?

**பா.மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை



குழந்தையொன்று வந்தது
குறும்புடனே பார்த்தது
குச்சி மிட்டாய் கேட்டது
குடுக்கும் வரை அழுதது
கேட்ட ஒன்று வந்தவுடன்
புன்னகையில் அதன் முகம்

வளர்ந்துவரும் நேரத்திலே
குறும்பு பார்வை போனதுவே
குச்சி மிட்டாய் பொருள்
மாறி பார்த்ததெல்லாம்
கேட்கவே கேட்பதெதுவும்
கிடைக்காமல்
புன்னகையும் மறந்ததுவே

வளர்ந்து விட்ட
குழந்தையொன்று
முடிந்து வரும் பருவத்திலே
கேட்க வேண்டியதை
அறியாமல் கிடைத்ததையே
கேட்டதாக கையிலேந்தி
நன்றி கூற
பொக்கைவாய் சிரிப்பு

வயதொன்று வந்திடினும்
பருவங்கள் மாறிடினும்
சிரிப்பதிலே மாற்றமில்லை
புன்னகையோ
பொக்கைவாய் சிரிப்போ



வாழ்க்கையுடன்
சேர்ந்து வர
வாழ்க்கையும்
ஒளிருமன்றோ

**ஓம் குமார்**
**P N**
மதுரை

### தென்கிழக்கு வாசமல்லி

தென்கிழக்கு வாசல்
மல்லிக்கு திருமணம் தான்
நடக்குது என்று வடகிழக்கு
வாசமல்லி வாழ்த்து
சொல்ல வந்ததம்மா
வந்ததம்மா

மல்லியும் முல்லையும் மணம்
மிகுந்த பூக்கள் ஆகும்
மாலையில் மலரும் மணம்
வீசும் நல்மலர்கள் மனதை
மயக்கும் வாசம் தான்

பணம் இருந்தால் வாசமுள்ள
மலர் மாலைகளை நாம்
வாங்கலாம் நல்லமல்லிகை
முல்லை வாசங்கள் எல்லாம்
மனத்தை சுண்டி இழுக்கும்

அந்தியில் மலரும் அத்தனை
மலர்களும் அத்தானை
இழுக்குதடி மாலையில்
மலரும் மல்லிகை வாசனை
மச்சானை இழுக்குதடி

மணம் மணம் பரப்பும்
மாலை மல்லிகை வாசனைப்
வாசனை பட்டு மயங்கி



நிற்கிறார்
மாமன்
சொக்கி
நிற்கிறார்
பேரழகில்
தான்

**பேராசிரியர்**
**முனைவர்**
**வேலாயுதம் பெரியசாமி**

### பணம் பணம்

பணம் பணம் பணம் பணம்
பாரினில் புதிதாய் வந்ததே
பண்டம் பரிமாற்றம் கெட்டதே
மனித வாழ்க்கை மாறியது

பணமே உன்னை தேடி தேடி
அள்ளும் பகலும்
அலைகின்றனர் ஆடுகிறான்
ஓடுகிறான் தேடுகிறான்
பணமே ஒடி ஒடி ஒளிகிறது

பேயாய் அலைகின்றான்
நாயாய் நாயாய் ஓடுகிறான்
நரியாய் நரியாய்
ஊளையிடுகிறான்



பாடுபட்டு பணத்தை
சேர்க்கிறான்

சாகும்போது எல்லா
வற்றையும் விட்டு விட்டு
போகிறான் எதையும்
எடுத்துச் செல்வதில்லை
இதுதாண்டா பணம்பணம்

**பேராசிரியர் முனைவர்**
**வேலாயுதம் பெரியசாமி**

### சொந்தம்

ஈன்று புறம் கொடுத்தவளைஇன் முலை தந்தவளை ஈ எறும்பும்
கடிக்காமல் வளர்த்தவள் உயிரென உன்னை மதித்தவள்

பாசமும் நேசமும் மிகுந்தவள் தாயே
ஆணவமும் ஆங்காரமும் இல்லா தவள் தாய்
அவள் உழைக்கும் வர்க்கத்தை வழி
வந்தவள்உண்மைக்குவிளக்கமும் தெளிவும் அவளே

ஓசை விட்டு நான் அழுதால் தூக்கி அனைத்து கொண்டவள்
வறுமையிலும் கொடுமையிலும் வாய்மை உயிர் கொடுத்தவள்

எந்த சூழ்நிலையிலும் மழலை உயிரென போற்றும் சொந்தம்
பிள்ளையை உயிரென போற்றி யவள் அவளே எனக்கு
சொந்தம்.

**பேராசிரியர் முனைவர் வேலாயுதம் பெரியசாமி**

### தேர்தல் முன்னோட்டம்

நான்கு சுவற்றுக்குள்
நடந்தவைகள் நாற்சந்தியில்
நாளும் அரங்கேற:

கொம்பு சீவும்
ஊடகங்கள்
குதூகலமாய்
குதித்து
கும்மாளமிட:

ஒன்றும் புரியாத



மக்கள்
மாறி மாறி கைதட்ட:

கட்டுக்குள் அடங்கா
மக்கள் கூட்டம்

கைகட்டி நிற்கும் காவலரின்
கையறு நிலை

தேர்தல் முன்னோட்டம்
இன்று.

**சசிகலா விஸ்வநாதன்**




### அம்மா அம்மாதான்

பெற்ற அம்மா ஐந்து வருசம் பால் கொடுத்தால்...
பேச தெரியாத அம்மா என் உயிர் உள்ளவரை பால்
கொடுத்தால்....!

உணர்வை புரிந்து அம்மா என்னை வளர்த்தால்...
இவள் என் உயிரோடு ஒட்டி வளர்ந்தால்...!

எதற்காகவும் விட்டு கொடுக்க மாட்டாள் அம்மா....
இவள் பிள்ளையை கட்டி போட்டாளும் எனக்கு பால்
கொடுத்தாள் அம்மா...!

நான் அம்மாவை மட்டும்தான் அம்மா என்றழைப்பேன்...
ஆனால் இவளோ அம்மா என்று மட்டுதான் அழைப்பாள்...!



பெற்ற அம்மாவை அவள் உயிர் உள்ளவரை
காப்பேன்....
இந்த அம்மாவை இவள் உயிர் உள்ளவரை
காப்பேன்....!!

தாயும் அம்மாதான்....
சேவை செய்யும் மாடும் என் அம்மாதான்...!!

**பொன்.கருணா,** நவி மும்பை



### புகைவண்டி

எரிந்து புகை விட்டு
எல்லையில்லா
மகிழ்ச்சி தரும்

வாழும் மனிதரோடு
வாழ்வின் கதைகளையும்
வகையாகக் கூட்டிச் செல்லும்

சிறிது நேரப் பயணம் கூட
சிறந்த நட்பைத் தேடித் தரும்

இணையாத
தண்டவாளங்களைப்
பயணத்தில் இணைத்து
அழகாக்கும்

உறவும் நட்பும்
இணை சேரும்
உலகில் உன்னதப்
பிணைப்பாக்கும்

ஜன்னலோர
இருக்கைக்கு
உள்ளம் என்றும்
ஏங்கி நிற்கும்

கடந்து செல்லும் கம்பங்களும்
காற்றின் வேக வருடல்களும்
பயணத்தை இன்னும்
இனிதாக்கும்

தடதடத்துச் செல்லும் ஒலி
கூட தாளத்தோடு செவி
நிறைக்கும்

ஓடும் ரயிலில் பாடும் குரலும்
ஓடிச் செய்யும் விற்பனையும்
பயணத்தின் சலிப்பை
மாற்றி விடும்

நிலையம் தோறும் அறிவிப்பு
நில்லாது செல்லும் மனித
இனம் நமக்குச் சொல்லும்
பரபரப்பை



இணைந்த பெட்டிகள்
இலகுவானால்
இனிமை வாழ்வு நமக்காகும்

பாடம் சொல்லும்
புகைவண்டி
பாரம் சுமக்கும் புகைவண்டி.

**தமிழ்நிலா**

# வாசகர் கடிதம்

கயப்பாக்கம் ரமேஷ் எழுதிய " இரண்டுக்கு இரண்டு" படித்ததும் சிறுவயதில் அடியேன் 2 ம் வகுப்பில் படிக்கும் போது என் ஆசிரியை ராஜேஸ்வரி அவர்கள், புவியியல் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வழங்கியது நினைவிற்கு வந்தது.

பானுமதி நாச்சியார் எழுதும்" வள்ளுவத்தில் வியாசர்" தொடரில் சல்லியன் பற்றிப் படித்ததும் கர்ணன் படக் காட்சிகள் கண்முன் விரிந்தன. அத்தோடு நண்பர் பாலகணேஷ் தன் நூலில் குறிப்பிட்ட " சல்லிப்பயல்" மற்றும் அந்தக்காலத்தில் காளையை அடக்குபவருக்கு அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் " சல்லிக்காசுகள்" பரிசாக வழங்கப்படும் என்றும், காளைகளின் கழுத்தில் சல்லியைக் கட்டுவதால், அக்காலத்தில் அது "சல்லிக்கட்டு" எனக் குறிப்பிட்டதும் ஞாபகத்திற்கு வந்தது .



-ஸ்ரீகாந்த்
திருச்சி

டிசம்பர் 7க்குள்
பணத்தைத் திருப்பித்
ரவேண்டும்#இண்டிகோவுக்கு
மத்திய அரசு கெடு
அகண்ட பாரதத்துக்கான
அடித்தளம் அமைத்தவர்
படேல்#துணை ஜனாதிபதி
சிபி ராதாகிருஷ்ணன்
புகழாரம்
இலங்கைக்கு கப்பல்களில்
950 மெட்ரிக் டன் நிவாரணப்
பொருட்கள் முதல்வர்
ஸ்டாலின் அனுப்பினார்
பருவமழைக் காலங்களில்
மழை நீர் தேங்குவதைத்
தடுக்க நான்கு புதிய
குளங்கள் வடசென்னையில்
அமைத்துள்ள மாநகராட்சி
48 கோயில்களின் வரவு-
செலவு கணக்குகளை
இணையத்தில் இரு
வாரங்களில் பதிவேற்ற
உத்தரவு
சென்னை தி.நகர்
பாண்டிபஜாரில் தினமும்
மதியம் 12 மணிக்கு இலவச
உணவு
சிவகங்கை: இலங்கைத்
தமிழர் வீடு கட்ட கடன்
வழங்குவதில் நிதி
முறைகேடு#ஐவருக்கு சிறை
தண்டனை
ரயிலில் மருத்துவ
சேவை#எப்போது
துவங்கியது? உதவி
கோருவது எப்படி?
புதுக் கவிதைகள் சூப்பர்
நூல் விமர்சனம் சிறப்பு
புதுக் கவிதைகள் வெகு
ஜோர்
நெல்லை பிரபல அல்வா
கடையின் பேரில் போலி
அல்வா விற்பனை#ஆறு
கடைகளுக்கு சீல் + ஒரு டன்
அல்வா பறிமுதல்
ராஜபாளையம்: 200 கிலோ
புகையிலை ஒரு கிலோ
கஞ்சா பறிமுதல்#ஒருவர்
கைது இருவர் தப்பியோட்டம்
இண்டிகோ விமான சேவை
ரத்து#சென்னை-பெங்களூரு
இடையே சிறப்பு ரயில்
தவெக பரப்புரை
செயலாளராக நாஞ்சில்
சம்பத் நியமனம்#விஜய்
அறிவிப்பு
சென்னையில் ஆன்லைன்
வர்த்தகத்தில் 12 லட்சம்
மோசடி#பெண் உட்பட
மூவர் கைது
பத்தாம் வகுப்பு கூட தேர்ச்சி
பெறாமல் ஆயுர்வேத
மருத்துவமனை நடத்தியவர்
கைது
வாட்சப்பில் புதிய
அம்சம் அறிமுகம்#மிஸ்டு
கால்களுக்கு வீடியோ
மற்றும் வாய்ஸ் மெசேஜ்
மூலம் பதிலளிக்கலாம்
டெல்லியில் டிசம்பர் 10ல்
தொடங்குகிறது#இந்திய
மெரிக்க வர்த்தக பேச்சு
வார்த்தை=புதின்
வருகையால் இதில்
பாதிப்பு ஏற்படாது
எஸ் ஐ ஆரைத்
தடுத்திருந்தால் மேற்கு
வங்கத்தில் குடியரசுத்
தலைவர் ஆட்சி
அமலாயிருக்கும்#மம்தா
வங்கி மோசடி வழக்கில்
அனில் அம்பானி
குழுமத்தின் 1200 கோடி
சொத்து முடக்கம்
ஃபிபாவின் அமைதிப் பரிசு
பெற்றார் அமெரிக்க அதிபர்
டிரம்ப்#ஓயாமல் குரல்
கொடுத்துக் கொண்டே
இருந்தால் விருது நிச்சயம்
அமெரிக்கா# தீ விபத்தில்
சிக்கி தெலுங்கானாவைச்
சேர்ந்த இந்திய மாணவி
பலி
புதினின் அதி நவீன
பறக்கும் மாளிகை#சொகுசு
விமான சிறப்பு அம்சங்கள்



-பி.சுரேகா
சென்னை




வணக்கம். 7.12.25 தமிழ்நாடு இ பேப்பர். காம் முதல் பக்கத்தில் டிசம்பர் 7ஆம் தேதிக்குள் பயணிகளுக்கு விமான கட்டணத்தை திருப்பி தர வேண்டும் என்று மத்திய அரசு சொன்ன செய்தி மிகவும் அருமையான தகவல் பாராட்டுக்கள். இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புதமாக நல்ல நாளாக எனக்கு நல்ல செய்தியை சொன்னது. பாராட்டுக்கள்.

திருக்குறளை அதன் பொருளுடன் படித்து மகிழ்ந்தேன். மிக்க மகிழ்ச்சி. கல்வி சுய தொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை முதல்வர் ஸ்டாலின் அவர்கள் வழங்கியது நல்ல தகவல் பாராட்டுக்கள்.

பலருக்கு மாத்திரை தான் உணவாகவே இருக்கிறது. ஆனால் மாத்திரைகள் வேண்டாம் கெட்ட கொழுப்பை கரைக்க ஏழு வழிகள் என்று நலம் தரும் மருத்துவம் பகுதியில் மிக அழகாக வழி முறைகளை சொல்லிக் கொடுத்தது மாத்திரைகளுக்கு விடை கொடுக்கலாம் என்று எண்ணி படிக்க வைத்த தகவல் பாராட்டுக்கள்.

இன்டிகோ முடக்கம் தாக்கம் கல்லா கட்டிய மற்ற விமான நிறுவனங்கள் என்று மற்ற விமான நிறுவனங்கள் செய்த செயலை அழகாக பட்டியலிட்டு சொன்னது பாராட்டுக்குரியது.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் இன்று அப்துல் கபூர் வரலாறு மிகவும் அருமை அவருடைய படத்தை பார்க்கும் போது ஒரு மன தைரியமும் தெம்பும் வந்து அந்த செய்தியை படித்து ரசிக்க வைத்தது.

பல்சுவை களஞ்சியம் பகுதியில் வந்த ஜோக்ஸ் பலமுறை படித்து என்னையே மறந்து கண்ணில் நீர் வரும் வரை சிரிக்க வைத்தது.

ஜோதிடம் அறிவோம் பக்கத்தில் வந்த அனைத்து தகவல்களும் அருமை. ஏமாற்றத்திற்கு ஆளாகும் ராசிக்காரர்கள் என்று பட்டியலிட்டதில் என் ராசி இல்லை என்று மனம் மகிழ்ந்தாலும் எதனால் இவர்கள் ஏமாற்றம் அடைகிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடிந்தது.

தமிழ் கூடல் விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு அளித்த செய்தி மிகவும் அருமை. அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஆதிதிராவிட பழங்குடியினருக்கு நல்ல திட்டங்களை உதவி செய்தது மிகவும் அருமையான தகவல் பாராட்டுக்கள்.

இயற்கை அழகு கொஞ்சும் கொல்லிமலை என்ற படத்தைப் பார்த்தவுடனே இங்கு சுற்றுலா செல்ல வேண்டும் என்று தோன்றிய அருமையான தகவலை சுற்றுலா பக்கத்தில் படித்து மகிழ்ந்தேன். ராசி பலன்கள் மிகவும் அருமை. இந்த வாரம் எப்படி இருக்கும் என்று என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. சென்னையில் ஆன்லைன் வர்த்தகத்தில் ரூபாய் 12 லட்சம் மோசடி செய்த பெண்கள் உட்பட்ட 3 பேர் கைது என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது. வாழ்க்கையில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று இந்த செய்தி படித்ததும் ஒரு விழிப்புணர்வு வந்தது.

விமான நிறுவனங்கள் டிக்கெட் கட்டணங்களை உயர்த்தினால் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரித்தது மிகவும் அருமை. இதனால் பயணிகள் மிக மகிழ்ச்சியாக குறைந்த கட்டணத்தில் விமானத்தில் பயணம் செய்ய முடியும். சொத்துக்களை கைப்பற்றினால் பதிலடி என்று ரஷ்யா எச்சரிக்கை செய்தது. அங்கு நடப்பதை இங்கு உட்கார்ந்து தெரிந்து கொள்ள முடிந்தது. எல்லா பக்கத்திலும் நல்ல தகவல்களாக இருந்ததால் ஆர்வமுடன் ஞாயிறு காலையில் உற்சாகமாக தமிழ்நாடு இ பேப்பரை படித்து மகிழ்ந்தேன். இதற்கு அருமையாக பாடுபடும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்






Launch Your Own Secure Crypto MLM Software Today!

@4999/- onwards



CALL: 98537 19337, 74369 14247 www.mlmperfect.com

LOCATION - CHENNAI

WE ARE HIRING TELECALLERS

VACANCIES - 50

QUALIFICATION - ANY DEGREE

FRESHERS ALSO CAN APPLY

TELECALLING EXPERIENCE IS PREFERABLE

9337501889

7789941009

qknewstv@gmail.com

ST COURIER

The People's Choice

ISO 9001:2008 Certifed

DOMESTIC- INTERNATIONAL

Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.

Cell: 9176130601

Make Money Without Investment Through Mobile



Just 20 min/per day

Any Time

Earn upto Rs. 1000/per mobile

Call : 9337501889

OFFICE/RESIDENCE FOR SALE

7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles

Contact:

98410 62644

இடம் விற்பனைக்கு

இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 செண்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புக்கு:

8300134494

வாடகைக்கு இடம் தேவை

Institute மற்றும் பல் மருத்துவமனை நடத்துவதற்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் மெயின் ரோட்டின் அருகில் Car Parking வசதியுடன் வாடகைக்கு இடம் தேவை.

தொடர்புக்கு: Dr.ROBINSON

Door No: 1/82, Water Tank Road, Nagercoil. Mob: 9487665511

இடம் விற்பனைக்கு

காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 செண்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

Contact: 08220426606

அருள்தரும் தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

வழங்கும்

2026 மாத காலண்டர்

தெய்வீகப் படங்களுடன்

3 காலண்டர் 100 ரூபாய்



அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்

இது காலண்டர் அல்ல

மினி பஞ்சாங்கம்

Admin office

Padma Media House

116, EH Road, Gandhi Nagar Chennai 600081

தொடர்பு கொள்ளவும்

9337501889

COMMERCIAL SPACE FOR RENT

5000 Sqft, 2500 Sqft in Ramanathapuram, Coimbatore- 45

Brokers Contact :

98422 65900

SAA

DTCP Sites For Sale

@ KALAPATTY

East Facing Site

6 Cents

Direct Sale !!!

90471 87197

SAA

ADVERTISE WITH US



CONTACT US

9438610756

Space available on OMR for RENT!

Fully Furnished Amenities

Ideal for:

Coaching / Tuition Classes, Govt. / Competitive Examinations, Workshops, Conferences, Seminars, etc.

Film shooting & Advt. shoots

Video/ Audio Editing or Recording

Facilities include Ample Parking, Cafeteria, and Power Backup.

Available on Weekends and Holidays

Contact +91 99406 94545

to know more!




குடோன் வாடகைக்கு விடப்படும்
கோவை வடவள்ளி
IOB காலனியில்
3614 sq.ft with
EB Service 150HP
CT: 88708 68595




சென்னையில் உயர்நீதி மன்றம் அருகில்
Double Room Rs.800/- Per day
Single Room Rs.650/- Per day
well furnished Attached Bath.
Wifi Facility
மாத வாடகைக்கு ரூம்கள் கிடைக்கும்
with Bath Attach
Rs. 9000- Rs.10000
Ct: 044- 25261430

OFFICE/RESIDENCE FOR SALE
7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles
Contact:
98410 62644

நாங்குநேரியில் 40 சென்ட் (பைபாஸ் ரோட்டில் இருந்து 150அடி) வீட்டுமனை இடம் விற்பனைக்கு (இளந்தோப்பு)
9884431675
9176691675




கோவை பீளமேட்டில் உள்ள
லேடீஸ் ஹாஸ்டலில் பணிபுரிய
★ சமையல் மாஸ்டர்
★ CARE TAKER/ LADY SECURITY
வீட்டில் பணிபுரிய
★ சமையல்காரர்
★ தோட்ட பராமரிப்பு
மற்றும் செக்யூரிட்டி தேவை
தங்குமிடம், உணவு இலவசம்
98947 73431

WORKSHOP FOR RENT
AT THANEERPANDAL ROAD WITH 5HP POWER SUPPLY 1200 SQFT BEHIND NOYYAL SUPER MARKET
CT: 96559 91887

இடம் விற்பனை
வடவள்ளி to கணுவாய் மெயின் ரோடு 15 சென்ட் (கிழக்கு) விற்பனைக்கு.
93601 18066

S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

ஆட்கள் தேவை
நாகர்கோவில் to திருநெல்வேலி வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை.
6385434442

ரப்பர் வெட்டும் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தேவை
பாலக்காடு, கேரளா
தங்கும் வசதி உள்ளது
94477 69114 | 044 - 6378118

இடம் விற்பனைக்கு
சிவகங்கை மாவட்டம், சிவகங்கை to இளையான்குடி மெயின் ரோட்டில் 250 ஏக்கர் மொத்த இடம் விற்பனைக்கு தயாராக உள்ளது.
தொடர்புக்கு :
98434 88428 / 94420 78428




COMMERCIAL COMPLEX FOR RENT

3 FLOORS with Lift
EACH Floor AREA, 3000 sqft,
1st, 2nd, 3rd Floor Available
Corner Side 2 way Entrance
KKR GARDEN 3rd Main Road, Madhavaram, Chennai - 60
Nr. Metro Rly Stn & Anthony Hospital.
Cell: 98846 25240 / 98843 38911


CREST THE BEST
@ ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS

1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards
visit our site www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

DTCP APPROVAL
அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை அங்கீகாரம் பெற
&
பில்டிங் பிளான் APPROVAL
லே அவுட் APPROVAL
84381 83848



# பல்சுவை களஞ்சியம்




## பாதங்களை வெடிப்பின்றி மிருதுவாக வைத்து கொள்ள வேண்டுமா? இதோ சூப்பரான டிப்ஸ்!!

பொதுவாக முகத்தை பொலிவாக வைத்துக்கொள்ள எல்லோரும் பெரிய அளவில் மெனக்கெடுகிறோம்.

அதேநேரம், நம் உடலை முழுமையாகத் தாங்கும் பாதத்தை கண்டுகொள்வதே இல்லை. இதனால் தோல் வறட்சியும், அதிக உடல் எடையும்தான் பாத வெடிப்புக்கான முக்கியமான காரணிகள்.

நம் உடலில் நீர்ச்சத்து குறையும்போது தோல் வறண்டு, பாதத்தில் வெடிப்பு உண்டாகும். எனவே இவற்றை எளியமுறையில் போக்கலாம்.

தற்போது அவை என்னென்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

வாழைப்பழத்தை நன்றாக மசித்து வெடிப்பின் மேல் தேயுங்கள். சில நிமிடங்களில் கழுவுங்கள். இவை ஒரே வாரத்தில் பாத வெடிப்பை மறையச் செய்து மிருதுவான பாதத்தை தரும்.

வாசலினை எடுத்து அதில் எலுமிச்சை சாறு கலந்து பாதங்களில் தடவுங்கள். இரவு முழுவதும் அப்படியே வைத்திருந்து மறு நாள் காலையில் கழுவுங்கள். சாக்ஸ் போட்டுக் கொள்வதால் இன்னும் நல்லது.

ஆலிவ் எண்ணெயில் சில துளி லாவெண்டர் எண்னெய் கலந்து பாத வெடிப்புகளில் தடவுங்கள். இது அற்புதமான ரிசல்ட்டை தரும். விரைவில் வெடிப்பிலிருந்து குணம் பெறுவீர்கள்.

விளக்கெண்ணெயை சூடுபடுத்தி மஞ்சள் கலந்து தூங்குவதற்கு முன் வெடிப்பில் இந்த எண்ணெயை பூசிக் கொண்டு படுங்கள். இவை ஒரு சில நாட்களில் வெடிப்பை போக்கும்.

வினிகரை சிறிது எடுத்து வெதுவெதுப்பான நீரில் கலந்து பாதங்களை அதில் 10 நிமிடம் தினமும் ஊற வைக்கவும். பின்னர் ஸ்கர்ப் செய்யுங்கள். மிக விரைவில் பலன் தரும். மேலும் வெடிப்பு உண்டாகாமலும் தடுக்கும்.



தேன் ஒரு ஸ்பூன் எடுத்து அதில் அதே அளவு பால கலந்து பாதத்தில் தடவவும். மறு நாள் காலையில் கழுவுங்கள். இது பாதங்களை மிருதுவாக்கும். சொரசொரப்புத்தன்மையை நீக்கும்.

ஓட்ஸை பொடித்து அதனைக் கொண்டு தினமும் பாதங்களை ஸ்க்ரப் செய்யுங்கள். இவை கால்களை மிருதுவாக்குவதோடு, பாதங்களை அழகாக்கு. ஓஸினால் தேய்க்கும்போது பாதங்களின் பக்கவாட்டில் இருக்கும் கருமையை எளிதில் மறையச் செய்யும். ஓட்ஸூடன் எலுமிச்சை சாறு கலந்தால் இன்னும் நல்ல பலன்களை தரும். ஓட்ஸை பொடி செய்து அவற்றுடன் எலுமிச்சை சாறு கலந்து பாதத்தில் தேயுங்கள். சில நிமிடம் கழித்து கழுவுங்கள். இந்த குறிப்பு இன்னும் வேகமாக பலனைத் தரும்.

லிஸ்டெரின் வினிகர் மற்றும் நீர் ஆகிய மூன்றையும் சம அளவு எடுத்து பாத வெடிப்புகளில் தடவுங்கள். அல்லது இவை கலந்த நீரில் 15 நிமிடம் பாதங்களை ஊற விடுங்கள். இவை விரைவில் வெடிப்பை குணப்படுத்தும்.
பாதம் மூழ்கும் அளவிற்கு நீரை வெதுவெதுப்பக எடுத்துக் கொண்டு அதில் ஆப்பிள் சைடர் வினிகரை 1 மூடி கலந்து பாதங்களை 10 நிமிடம் ஊற வைகக்வும். வாரம் 3 நாட்கள் செய்தால் வெடிப்பு மறையும். தவிர பாத வெடிப்பு வருவதை தடுக்கலாம்.



லால்குடி
- வெ.நாராயணன்
மாம்பாக்கம், சென்னை

# மீம்ஸ்







## பதினெட்டு ’பட்டி

வாழைப்பழ வியாபாரியோட பையன் எப்படி இருப்பான்?"
"அப்படியே அப்பனையே உரிச்சு வைச்சிருப்பான்."

-----------------------


ரெய்டுக்கு வந்தவங்க போலி சி.பி.சி.ஐ.டி..ன்னு தலைவர் எப்படி உறுதியா சொல்றாரு?"

"தலைவரோட பேஸ்புக் அக்கவுண்ட்டுல. எவ்வளவு பணம், ’பேலன்ஸ்’ இருக்குன்னு துருவி துருவி விசாரிச்சாங்களாம்!

-எஸ்.எம்.பித்து

-----------------------

கடி டைம்



ஏகப்பட்ட நாய்கள் அவரைச் சுற்றி நிற்குதே..?"

"நான் சொல்லலை அவரு பதினெட்டு ’பட்டி’க்குச் சொந்தக்காரருன்னு..."

## எத்தனை தலைமுறையை காக்கும் புண்ணியப் பலன்?



கங்கை போன்ற புனித நதியில் நீராடுவது - 3 தலைமுறை.

பாழடைந்த கோவிலில் தீபம் ஏற்றுவது - 5 தலைமுறை.

கோவில் திருப்பணிக்கு உதவுவது -7 தலைமுறை.

ஏழை பெண்ணுக்கு திருமணம் செய்வது - 9 தலைமுறை.

அனாதை பிணத்திற்கு அந்திம கிரியை - 11 தலைமுறை

கோசலைக்கு உதவுவது, பசு பராமரிப்பு - 13 தலைமுறை.

காசி, கயாவில் செய்யப்படும் தர்ப்பணம் - 16 தலைமுறை.

பசிக்கு உணவு அளிப்பது அன்னதானம் 27 தலைமுறை.



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி



## விடுகதை

| | |
|---|---|
| கொக்கு எப்ப ஒத்த கால்ல நிக்கும்? | அது ஒத்த காலை எப்ப தூக்குது அப்பதான். |
| நாம் ஏன் தண்ணீர் தெளித்து கோலம் போடுகிறோம்? | கோலம் போட்டு தண்ணீர் தெளித்தால் கோலம் அழிந்துவிடும்ல. |
| ஒரு பையன் அவனுடைய 500 ரூபாய் நோட்டையும் 2000 ரூபாய் நோட்டையும் சாக்கடையில் போட்டுட்டான் பர்ஸ்ட் எதை எடுப்பான்? | அவன் ஃபர்ஸ்ட் வாந்தி எடுப்பான். |
| ரோட்ல போற சில பேரு ஒருத்தர்கிட்ட மட்டும் அடிக்கடி டைம் கேக்குறாங்க ஏன்? | ஏன்ன அவரு வாட்ச்மேன் ஆம். |
| முட்டையை போடாத பறவை என்ன பறவை? | ஆண் பறவை. |


# ஜோக்ஸ்

"என்னய்யா சொல்றான்? பிராந்தி வளர்ச்சி நாட்டுக்கு நல்லதில்லே–ங்கறானே!

”தலைவரே! அது பிராந்திய கட்சி வளர்ச்சி...நீங்கதான் தப்பா புரிஞ்சிகிட்டீங்க!”

-----------------

நம் மன்னர் அயல்நாட்டுக்கு சென்று தங்கத்தை ஈர்க்க முயற்சிய செய்கிறாராமே! நலல திட்டம்தான்



”அடேய்! எதிரிநாட்டு இளவரசி தங்கத்தை ஈர்க்க திட்டமாம் அது!”

-----------------

அந்த புலவரு பாடிய பாடல்கள் அனைத்தும் அருமைதானே

பின் ஏன் ஒரேயொரு வராகன் பரிசாக தந்தாராம் மன்னர்?

-----------------

”பாடல்களில் நீ என்று ஒருமையில் பல இடங்களில் நீ என்று பாடியதால்

-------------

”ஏம்பா சூரிய புயல் வரப்போகிறதாமே சேதி

தெரியுமா ஒனக்கு?

”ஆமாம்பா! ஊருக்கு போன என் பொண்டாட்டி

சூரியா திரும்ப போறாளாம்

------------------

”மன்னர் இப்பொழுதெல்லாம் கலகலப்பாக இருப்பதில்லையே ஏன்?


அந்தப்புர பணிப்பெண் கலா நீண்ட விடுப்பில் சென்று விட்டாராம்!”



# பன்முகம்



## மீன் வளர்ப்பு மன அழுத்தத்தை குறைக்கும்



மீன்கள் உயிரோட்டத்தையும் நேர்மறையையும் குறிக்கின்றன. எனவே, தொட்டியில் நீந்தும் மீன் நேர்மறை உணர்வலைகளை வெளியிடுவதாக நம்பப்படுகிறது. மேலும், மீன் தொட்டிகள் வீட்டின் அழகையும் வசீகரத்தையும் கூட்டுவதுடன் அமைதி உணர்வையும் உருவாக்குகிறது. வண்ணமயமான மீன்கள் கண்ணாடித் தொட்டிகளில் நீந்துவது ஓர் அழகான காட்சியாகும். இது, அந்த இடத்தை உத்வேகம் ஊட்டுவதாக மாற்றுகிறது. எனவேதான், பல்வேறு கலாச்சாரங்களிலும் மீன் வளர்ப்பது நன்மை பயக்கும் ஒன்றாக கருதப்படுகிறது.

மீன் தொட்டி வைத்திருப்பதால் அமைதியான சூழல் உருவாகி, கவலையும் மன அழுத்தமும் குறையும். ஏனெனில், மீன்களை நாம் கவனிப்பதும் ஒரு வகையான சிகிச்சை முறையாக உள்ளது. மீன் தொட்டிகளைப் பார்ப்பதில் நேரத்தை செலவிடுபவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வும் மேம்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.மீன்கள் சுறுசுறுப்பு, வலிமை, வெற்றியின் அடையாளமாகவும் கருதப்படுகிறது. இரண்டு மீன்கள் இணையாக நீந்திச் செல்வது ஒற்றுமையைக் குறிப்பதாகும். மீன் தொட்டியை வீட்டில் வைப்பது மனநிலையை சீராக்குவதுடன் செல்வ செழிப்பையும் அதிகரிக்கும் என்று நம்பபடுகிறது.

அந்தவகையில், நல்ல அதிர்ஷ்ட மீனை வீட்டில் செல்லப் பிராணியாக வளர்ப்பதன் மூலம் நேர்மறையான உணர்வலைகளுடன் கூடிய மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் கிடைக்கிறது. மேலும், மீன்கள் கண்களை திறந்த நிலையிலேயே தூங்கும் தன்மை கொண்டது. இதனால் என்றும் விழித்துக் கொண்டிருப்பதால் தீய சக்தியை நுழைய விடாது. தீய சக்தியை உடன் இழுத்து, தீமையை ஏற்றுக் கொண்டு வீட்டில் இருப்பவர்களை காப்பாற்றுகிறது என்றும் நம்பபடுகிறது.

### மீன்களின் நிறம்

சிவப்பு நிறமீன்கள் வளமையையும், பச்சைநிற மீன்கள் வளர்ச்சியையும், மஞ்சள் நிற மீன்கள் செயல்திறனையும் வளர்க்கும். மீன்களை ஒற்றைப்படையாக வைக்க வேண்டும். 4 ஜோடிகளுடன் ஒருகறுப்பு மீனையும் வளர்த்தால் அதிர்ஷ்டம் எனப்படும்மீன் தொட்டியில் கருப்பு மீன் இருந்தால், அது வீட்டினுள் நுழையும் எதிர்மறை ஆற்றல்களை முற்றிலும் உறிஞ்சிவிடும். ஒருவேளை அந்த கருப்பு மீன் இறந்துவிட்டால், அது வீட்டில் உள்ள அனைத்து கெட்ட சக்திகளையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டது என்று அர்த்தம்.

### வீட்டில் மீன் தொட்டி வைப்பதால் கிடைக்கும் நன்மைகள்

*சுறுசுறுப்பாக இருக்கும் மீன்களைத் தேர்ந்தெடுத்து தொட்டியில் விடவும். இது ஆற்றலின் சீரான ஓட்டத்தை உறுதி செய்யும்.

*மீன்கள் வீட்டின் நிதி நிலைமையை சரியாக வைத்து செல்வத்தை ஈர்க்கின்றன.

*மீன் வளர்ப்பு ஒரு அமைதியான சூழ்நிலையை உங்கள் வீட்டில் உருவாக்குகின்றன.

*மீன் தொட்டிகள் வெற்றி மற்றும் நல்லிணக்கத்திற்கு முக்கியமாக கருதப்படுகின்றன.

*மீன்கள் வாழ்வாதாரத்தையும் நேர்மறையையும் குறிக்கின்றன. எனவே, தொட்டியில் நகரும் ஒரு மீன் நேர்மறை அதிர்வுகளை வெளியிடும் என்று நம்பப்படுகிறது.

*வீட்டில் செல்வம் அதிகரிக்க வேண்டும் என்றால், மீன் தொட்டியில் கண்டிப்பாக 9 மீன்களாவது இருக்க வேண்டும். 9 மீன்களுக்கு குறைவாக மீன் வளர்க்க கூடாது.

## எப்போது நடக்கலாம்?



இதய பிரச்னை, ரத்தத்தில் அதிகளவு சர்க்கரை உள்ளவர்களுக்கு பின்விளைவு தராத மருந்தாக தினசரி நடைப்பயிற்சி வேலை செய்கிறது. உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை, ஒவ்வாமை உள்ள நோயாளிகளுக்கு மருத்துவர்கள் நீண்ட காலமாகவே தினசரி நடைப் பழக்கத்தை பரிந்துரைக்கின்றனர்.

ஆனால், நடக்க எது சரியான நேரம்..? காலையா அல்லது மாலையா?

எப்போது நடந்தால் பலன் அதிகமாக கிடைக்கும் என்று பலருக்கு கேள்வி கலந்த சந்தேகமாக உள்ளது. காரணம், சிலர் அதிகாலையில் நடந்தால் பலன் அதிகம் என்கிறார்கள். சிலர் மாலை நடைப் பயிற்சிக்கு 'ஓ' போடுகிறார்கள். ஒரு சிலர் எதற்கு வம்பு இரண்டு வேளையும் நடந்துவிடலாம் என்கிறார்கள். ஆனால், சமீபத்திய மருத்துவ ஆராய்ச்சியில் காலை - மாலை நடைப் பயிற்சி 'தனித்துவமான' பயன்களை கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

ஒவ்வொரு மனித உடலும் 'சர்க்காடியன் ரிதம்' (circadian rhythm) எனப்படும் இயற்கையான உடல் கடிகாரத்தில் இயங்குகிறது. சர்க்காடியன் ரிதம்' என்பது உடலினுள் இருக்கும் 24 மணி நேர உயிரியல் கடிகாரமாகும், இந்தக் கடிகாரம், ஒருவரின் தூக்கம்-விழிப்பு முறைகள், ஹார்மோன் வெளியீடு மற்றும் உடல் வெப்பநிலை உள்ளிட்ட உடல், மனம் மற்றும் நடத்தை மாற்றங்களை ஒழுங்குபடுத்தும் ஒரு இயற்கை சுழற்சி.

அதே சமயம், உணவு நேரம், எடுத்துக் கொள்ளும் மருந்துகள், பயணம் போன்ற காரணிகளாலும் பாதிக்கப்படலாம். இத்தகைய பாதிப்புகள் உடல்நலப் பிரச்னைகளுக்கு வழிவகுக்கும். மூளையில் இருக்கும் ஹைபோதாலமஸில் உள்ள 'சுப்ராச்சியாஸ்மாடிக் நியூக்ளியஸ்' (Suprachiasmatic nucleus - SCN) எனப்படும் செல்களின் குழு, 'சர்க்காடியன் ரிதத்'தை ஒழுங்குபடுத்துகிறது. மேலும், சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தத்தின் அளவினையும் வழிநடத்தும். அதிகாலை வேளையில், கார்டிசோல் என்ற மன அழுத்த ஹார்மோன்கள் உச்சத்தை அடையும். இதன் மூலம் சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தம் இரண்டும் உயரும். காலையில் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போது இவை இரண்டும் உயராமல் பார்த்துக் கொள்ளும்.

ஆய்வுகளில் காலை உணவுக்கு முன் நடைப் பயிற்சி மேற்கொள்வதால், இன்சுலினை மேம்படுத்தும் என்று கூறப்படுகிறது. ரத்த அழுத்தத்தைக் குறைக்க காலை நடைப்பயிற்சி உதவும். மென்மையான நடைப்பயிற்சி, நாள் முழுவதும் ரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்கும். காலை நடைக்கு இத்தனை நன்மைகள் இருக்கிறதே என்று மாலை நடைப் பயிற்சியை ஒதுக்கிவிடக் கூடாது. பகல் மற்றும் இரவு நேர உணவிற்குப் பிறகு, ரத்தத்தில் சர்க்கரை அளவு கூடும்.

மாலை அல்லது இரவு நடைப்பயிற்சி மேற்கொள்வதால், சர்க்கரை அளவைக் குறைக்கும். இரவு உணவிற்குப் பிறகு 15-20 நிமிட நடைப்பயிற்சி கூட உணவுக்குப் பிறகு சர்க்கரை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி மாற்றங்களைத் தரும். மாலை நேரத்தில் ரத்த அழுத்தமும் இயற்கையாகவே குறையும். மேலும் இதயத்திற்கு நல்லது. காலை வேளையில் நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு பகல் நேரத்தில் ரத்த அழுத்தம் குறையும் என்று ஆய்வில் கண்டறிந்துள்ளனர். அதே போல் மாலையில் நடைப்பயிற்சி மேற்கொள்வதால், இரவு நேரத்தில் ரத்த அழுத்தம் குறைவதாக கூறப்படுகிறது.

ரத்த சர்க்கரை அளவைப் பொறுத்தவரை, காலை நடைப்பயிற்சி ஒட்டுமொத்த வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்துகிறது. மதிய உணவுக்குப் பிறகு சர்க்கரை அளவு கூடும். மாலை நடைப்பயிற்சி ரத்தத்தில் சர்க்கரை அளவைக் குறைக்க உதவும். இரவு உணவிற்குப் பிறகு சர்க்கரை அளவு கூடாமல் இருக்க இரவு நடையும் அவசியம். நீரிழிவு ஆராய்ச்சியில், காலை நடையுடன் ஒப்பிடும் போது மதிய உணவுக்குப் பிறகு மாலை நடைப்பயிற்சிகள் சர்க்கரையை மிகவும் திறம்படக் குறைத்ததாகக் குறிப்பிட்டுள்ளன.

பொதுவாக நடைப்பயிற்சி இதயத்தை பலப்படுத்தி ரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். இதன் மூலம் ரத்த அழுத்தம், கொழுப்பின் அளவும் குறையும். நடைப்பயிற்சி கலோரிகளை எரிப்பதால், உடல் எடை குறையும். ஆஸ்டியோபோரோசிஸைத் தடுக்கும். மூட்டு மற்றும் தசை வலியைக் குறைக்கும். நுரையீரல் திறனை அதிகரித்து, ஆக்ஸிஜன் விநியோகத்தை மேம்படுத்தும். செரிமானத்திற்கு உதவும்.

காலை சூரிய ஒளி உடலில் படும்போது, உடலில் வைட்டமின் டி உற்பத்தியாகும். வைட்டமின் டி எலும்பு ஆரோக்கியத்திற்கும் நோயெதிர்ப்பு செயல்பாட்டிற்கும் முக்கியமானது.

## கருப்பையைக் காக்கும் கருப்பட்டி!



உணவில் கருப்பட்டியை பயன்படுத்திவர, பற்களும், நரம்புகளும் உறுதியாகும். நீரிழிவு நோயாளிகள் கைக்குத்தல் அரிசி சாதத்துடன் கருப்பட்டி கலந்து சாப்பிட்டு வர சர்க்கரையின் அளவு குறையும். அடிக்கடி சிறுநீர் போவது குறையும். கருப்பட்டி பெண்களின் கருப்பைக்கு மிகவும் ஏற்றது. சுக்கு, மிளகு கலந்து கருப்பட்டியை சேர்ந்து சாப்பிட தாய்ப்பால் நன்றாக சுரக்கும். குழந்தைக்கும் நல்ல ஊட்டச்சத்து கிடைக்கும். பாலுடன் கருப்பட்டி, பொடித்த மிளகு, மஞ்சள் தூள் ஆகியவை கலந்து குடித்தால் தொண்டைப்புண் சரியாகும். சிலருக்கு மூலநோய் அவஸ்தை இருக்கும். அவர்கள் இதனை பின்பற்றலாம். கருப்பட்டிக்கு வயிற்று புண்களை ஆற்றும் சக்தி உண்டு.

வாயு தொல்லையால் அவதிப்படுபவர்கள் ஓமத்துடன் கருப்பட்டியை சாப்பிட வேண்டும். நல்ல தீர்வு கிடைக்கும். கல்லீரலில் உள்ள நச்சுக்களை நீக்க கருப்பட்டியை சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும். நாம் அன்றாடம் உபயோகித்து வரும் வெள்ளை சர்க்கரை உட்கிரகிக்கப்படுவதற்காக நம் உடலில் இருக்கும் சில வைட்டமின் சத்துகளை கூட எடுத்துக் கொள்ளும். அதாவது நம்முடைய உடலில் ஏற்கெனவே இருக்கும் சத்துக்களை உறிஞ்சிவிடுகிறது. அதனால் அதனை வைட்டமின் திருடன் என்பார்கள். ஆனால் கருப்பட்டி அப்படியல்ல. உடலில் உள்ள சத்துகள் அழியாமல் பாதுகாக்கிறது. மேலும், எலும்புகளுக்கும் பலம் சேர்க்கிறது. எனவே, வெள்ளை சர்க்கரை சாப்பிடுவதை தவிர்த்து, கருப்பட்டியைச் சேர்த்துக் கொள்வது நல்ல பலன்களை தரும்.

## நோய் தீர்க்கும் ஆசனங்கள்



யோகாசனப் பயிற்சிகள் செய்வதால் பல நன்மைகள் உண்டு. உடலை நல்ல நிலையில் வைத்திருப்பது மட்டுமின்றி நோய்கள் சேராமல் தடுக்கின்றன. இதனால் உடல் உள்ளுறுப்புகள் பலமடைகின்றன. வீண் சதைப் பிடிப்புகள் ஏற்படாது. சுறுசுறுப்பு, புத்தித் தெளிவு, நினைவாற்றல் அதிகப்படும்.பிராணாயாமம்: நுரையீரல் ஆரோக்கியமாகும். ரத்தம் எல்லா உடல் திசுக்களுக்கும் சென்றடையும். எனவே உடல் நன்முறையில் இயங்கும்.பதுமாசனம்: பதுமம் என்றால் தாமரை. தாமரை வடிவில் அமர்தல். ரத்த ஓட்டத்தை சீராக்கும். மூளையை நன்றாக செயல்பட உதவும். ஜீரண சக்தியை அதிகரிக்கும். செரிமான பிரச்னையை போக்கும்.

மயூராசனம்:வயிற்றுப் பிணிகள் நீங்கும். முக்குற்றங்களும் தன்னிலைப்படும். செரிமான உறுப்புகளுக்கு ரத்தம் சீராக பாயும்.

புஜங்காசனம்: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். முதுகுத் தண்டுக்கு பயிற்சி கிடைக்கும்.

தனுராசனம்: பசியைத் தூண்டும். கல் பிணிகளுக்கு சிறந்தது.

சலபாசனம்:மலச்சிக்கலை போக்கும். வயிற்றின் உள் உறுப்புகளுக்கு பயிற்சி தரும். இதய நோய், நுரையீரல் நோய் உடையோர் இதை செய்யக் கூடாது.

சவாசனம்:களைப்பைப் போக்கும். உடலுக்கு புத்துணர்ச்சியைத் தரும்.

சிரசாசனம்:மூளைக்கு அதிகம் ரத்தம் பாய்ந்து மூளை பலப்படும். நரம்பு மண்டலத்தைத் தூண்டும். மாதவிடாய், கர்ப்ப காலங்களில் செய்யக் கூடாது.

சர்வாங்காசனம்: நரை, திரை, மூப்பை மாற்றி இளமையை உண்டாக்கும். உடலின் எல்லா உறுப்புகளும் பலப்படும். கருப்பை கோளாறு நீங்கும். தலைவலி, நாடி பலமின்மை,

மலச்சிக்கல் தீரும்.


இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## கலெக்டர் தர்ப்பகராஜ் கொடிநாள் நிதி



திருவண்ணாமலையில் கொடிநாள் தினத்தை முன்னிட்டு கலெக்டர் தர்ப்பகராஜ் உண்டியலில் நிதி செலுத்தி கொடிநாள் நிதி வசூலை துவக்கி வைத்தார்.

## விவசாய கருத்தரங்கு



விருதாச்சலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உலக மண் தினத்தையொட்டி, மண் பரிசோதனையின் முக்கியத்துவத்தலியுறுத்தும் வண்ணமாக விவசாய கருத்தரங்கு நடந்தது. திட்ட ஒருங்கிணைப்பாளர் நடராஜன் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசினார்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



உதகையில் கொடி நாள் தினத்தை முன்னிட்டு, 26 பயனாளிகளுக்கு ரூ.37லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் லட்சுமி பவ்யா வழங்கினார்.

## இயற்கை சீற்றத்தையும் தாங்கும் வாமன்– குட்டை வாழை ரகம் அறிமுகம்



பொள்ளாச்சி மணக்கடவு வேளாண் கல்லூரியில் நடந்த தேசிய கருத்தரங்கில், இயற்கை சீற்றத்தையும் தாங்கும் வாமன்- குட்டை வாழை ரகம் அறிமுகப்படுத்தப் பட்டது.

## விமான மாதிரி கண்காட்சி



உடுமலை விஏவி இண்டர்நேஷனர் பள்ளியில் விமான மாதிரி கண்காட்சியில் மாணவர்கள் அறிவியல் படைப்புகளை சமர்ப்பித்து அசத்தினர்.

## அண்ணாமலையார் கோயிலில் சுவாமி தரிசனத்துக்காக காத்திருந்த பக்தர்கள் கூட்டம்



விடுமுறை நாளான நேற்று திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் சுவாமி தரிசனத்துக்காக காத்திருந்த பக்தர்கள் கூட்டம்.

## முதலமைச்சர் ஸ்டாலின் கொடி நாள் நிதிக்கு நன்கொடை



முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று கொடி நாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார்.

## முன்னாள் முதல்வர் கருணாநிதி திருவுருவச்சிலை



விக்கிரவாண்டி சிந்தாமணியில் முன்னாள் முதல்வர் கருணாநிதி திருவுருவச்சிலையை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்.

## பிசியோதெரபி மாநாடு



கோவை குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனையில் பிசியோதெரபி மாநாடு நடந்தது. மருத்துவமனை தலைவர் டாக்டர் ரகுபதி வேலுசாமி துவக்கி வைத்தார்.

## துணை முதல்வர் உதயநிதி கொடி நாள் நிதிக்கான நன்கொடை



முப்படை வீரர்களின் வீரத்தைப் போற்றிடும் வகையிலும், போரில் தியாகம் புரிந்த வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் உதவிடும் வகையிலும், துணை முதல்வர் உதயநிதி, கொடி நாள் நிதிக்கான நன்கொடை அளித்தார்.

## திருப்படி பூஜை விழா



கரூர் வெண்ணெய்மலை பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நேற்று திருப்படி பூஜை விழா நடந்தது.

## நியாய விலைக் கடையில் அமைச்சர் கீதாஜீவன் ஆய்வு



தூத்துக்குடி மாநகரம் - அசோக் நகர் 2வது தெருவில் உள்ள நியாய விலைக் கடையில் அமைச்சர் கீதாஜீவன் நேற்று ஆய்வு செய்தார்.

## மாரத்தான் போட்டிகளில் வென்றவர்களுக்கு மாவட்ட செயலாளர் செந்தில்பாலாஜி எம்எல்ஏ பரிசு



துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் விழாவில் கரூர் மாவட்ட திமுக நடத்திய மாவட்ட அளவில் இருபாலருக்குமான மாரத்தான் போட்டிகளில் வென்றவர்களுக்கு மாவட்ட செயலாளர் செந்தில்பாலாஜி எம்எல்ஏ பரிசு வழங்கினார்.

## மாட்டு வண்டி போட்டி



விளாத்திகுளம் அருகே அரியநாயகிபுரம் ஸ்ரீசோலைசாமி திருக்கோயில் கொடை விழாவை முன்னிட்டு மாட்டு வண்டி போட்டியை மார்க்கண்டேயன் எம்எல்ஏ கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## பயனாளிகளுக்கு ரூ.64.04 லட்சம் மதிப்பில் இணையவழிப் பட்டா அமைச்சர் வழங்கினார்



விருதுநகரில் நடந்த விழாவில், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ், 4105 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.6.51 கோடி மதிப்பிலான கடனுதவி, 127 பயனாளிகளுக்கு ரூ.64.04 லட்சம் மதிப்பில் இணையவழிப் பட்டாக்களை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன் வழங்கினார்.

## ரவுசு மணி

காதல்.... கண்ணீர்....
காசு......... இவை
மூன்றையும்
நம்மை மதிக்கும்
இடத்தில் கொடுக்க
வேண்டும்...

நம்மை அவமதிக்கும்
இடத்தில்
கொடுத்தால்
நாம் கண்ணீருடன்
நிற்கத்தான்
வேண்டி வரும்....



V. முத்து ராமகிருஷ்ணன்

## பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி



திண்டுக்கல் மாவட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் பி.எஸ்.என்.ஏ பொறியியர் கல்லூரியில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் நினைவு நாளில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சக்கரபாணி வழங்கினார்.

## திமுக சார்பில் நலத்திட்ட உதவி



சென்னிமலை கிழக்கு ஒன்றியத்தில் உள்ள 5 ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைபணியாளர்கள், தூய்மை காவலர்கள் மற்றும் குடிநீர் வழங்கல் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு திமுக சார்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சாமிநாதன் வழங்கினார்.



## அம்பேத்கர் நினைவுநாள் நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவி

நாகர்கோவில் இந்து கல்லூரியில் நடந்த அம்பேத்கர் நினைவுநாள் நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை கலெக்டர் அழகுமீனா தலைமையில் அமைச்சர் மனோ தங்கராஜ் வழங்கினார்.உடன் உணவு ஆணையத் தலைவர் சுரேஷ்ராஜன், மேயர் மகேஷ், ஆணையர் நிஷாந்த் உள்படபலர் உள்ளனர்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## MBBS மருத்துவர் வேலைவாய்ப்பு: 1100 Assistant Surgeon காலியிடங்கள் அறிவிப்பு..!

தமிழ்நாடு மருத்துவத்துறையில் 1100 மருத்துவர்களை நியமிக்க தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.இதற்கான கல்வி தகுதி, சம்பளம், காலியிடங்கள் எண்ணிக்கை, தேர்வு செய்யும் முறை அனைத்தும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பதவி: Assistant Surgeon (General)

சம்பளம்: மாதம் Rs.56,100 2,05,700/-

காலியிடங்கள்: 1100

தமிழ்நாடு மருத்துவ சேவைகள் பிரிவின் கீழ் இப்பணியிடங்கள் நிரப்பப்படுகிறது.இவை பொதுப் பிரிவு - 320, பிசி - 278, பிசிஎம் - 35, எம்பிசி - 212, எஸ்சி - 174, எஸ்சிஏ - 33, எஸ்டி - 48 என நிரப்பப்படுகிறது.

கல்வி தகுதி: MBBS பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். மேலும் மருத்துவராக பதிவு பெற்றிருக்க வேண்டும். House Surgeon ஆக 12 மாதங்களுக்கு குறையாமல் பணி செய்திருக்க வேண்டும்.

வயது வரம்பு: இப்பணியிடங்களுக்கு 01.07.2025 தேதியின்படி, அதிகபடியான வயது வரம்பு 37 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு 47 வயது வரையும், முன்னாள் ராணுவத்தினருக்கு 48 வயது வரையும் இருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி, எம்பிசி, பிசி, பிசிஎம் ஆகிய பிரிவினருக்கு அதிகபடியான வயது வரம்பு கிடையாது. அதிகபடியாக அனைத்து பிரிவினரும் 60 வயதை நிறைவு செய்திருக்கக்கூடாது.

விண்ணப்ப கட்டணம்: SC / SCA / ST / DAP Rs.500/- Others Rs.1,000/-

தேர்வு செய்யும் முறை: Computer Based Examination Certificate Verification

முக்கிய தேதிகள்: விண்ணப்பிக்க கடைசி தேதி: 11.12.2025

விண்ணப்பிக்கும் முறை: விண்ணப்பதாரர்கள் https://mrb.tn.gov.in/ இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள லிங்கை கிளிக் செய்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். தேர்வு கட்டணமாக ரூ.1000 செலுத்த வேண்டும். எஸ்சி/எஸ்டி பிரிவினர் ரூ.500 செலுத்த வேண்டும். விண்ணங்கள் டிசம்பர் 11 வரை பெறப்படும் நிலையில், தேர்வு தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா: பயணம் செய்யத் தூண்டும் ஸ்கை வாக் (Sky Walk) பாலங்கள்!

கண்ணாடி பாலங்கள் மீது நடக்க நாம் வியட்நாம், சீனா, மலேசியா போன்ற நாடுகளுக்கு செல்லவேண்டிய அவசியமில்லை. இந்தியாவிலேயே நிறைய கண்ணாடி பாலங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை காணலாம்.

விசாகப்பட்டினத்திற்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் நாட்டின் மிக நீண்ட உயரமான கண்ணாடிபாலம்கட்டிமுடிக்கப்பட்டு மக்கள்பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இது நாடு முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான மக்களை ஈர்க்கும் என்றும், சுற்றுலா பயணிகள் மூலம் அரசுக்கு அதிக வருமானம் வரும் என்றும் கூறப்படுகிறது. இந்த பாலத்தில் இருந்து வங்கக்கடலை கண்டு ரசிக்கலாம். கடலும் தொடுவானமும் சந்திக்கும் இடம் வரை இயற்கையை ரம்யமாக ரசிக்கும் வகையில் இந்த பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்த கண்ணாடி பாலத்தில் நடந்து செல்லும் பொழுது பறப்பது போன்ற மெய்சிலிர்க்கும் அனுபவத்தை ஒவ்வொரு சுற்றுலா பயணிகளும் பெற முடியும். கைலாச கிரியில் இதன் அருகிலேயே 55 அடி உயர திரிசூலம் 5.5 கோடி ரூபாய் செலவில் கட்டமைக்கப்பட்டு வருகிறது. வரும் காலங்களில் கைலாசகிரி மலை சுற்றுலாப்பயணிகளை வெகுவாக கவர்ந்திழுக்கும்.



### டைட்டானிக் வியூ பாயிண்ட்:

கைலாசகிரி மலைப்பகுதியை நாட்டின் டைட்டானிக் வியூ பாயிண்ட் என்று அழைப்பது வழக்கம். இங்கிருந்து இயற்கையின் அழகை ரசிப்பதற்கு மற்றொரு மணி மகுடமான இந்த கண்ணாடி பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இயற்கையின் ஒரு பிரமிப்பான மலைப்பகுதியில் இருந்து மற்றொரு இயற்கை அதிசயமான வங்கக்கடலை காணும் அனுபவத்தை இங்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டு களிப்பதுடன், வாழ்வில் என்றுமே அந்த நினைவுகளை மறக்கமாட்டார்கள். இந்த கண்ணாடி நடைபாதை பாலம் கடலோர சுற்றுலாவை அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

ஏற்கனவே கைலாசகிரியில் ஜிப் லைன், ஸ்கை சைக்கிள் மற்றும் ரோப் கோர்ஸ் போன்ற சாகச விளையாட்டுகள் உள்ளன. இது பார்வையாளர்கள் இடையே மிகவும் பிரபலமாக உள்ளது. புதிய கண்ணாடி பாலமும் சேர்ந்து கைலாச கிரியை இந்தியாவின் சிறந்த சுற்றுலா தலங்களில் ஒன்றாக இதனை மாற்றும்.

### வாகமனில் உள்ள கண்ணாடி பாலம்:

வாகமனில் உள்ள கண்ணாடி பாலம் கேரளாவில் உள்ள மணிமாலா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இது சுமார் 125 அடி நீளமும், ஜெர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து அடுக்கு கண்ணாடியால் ஆனது. பாதுகாப்புக்காக 35 டன் எஃகு கட்டுமானத்தின் கீழ் தாங்குகிறது. இது இடுக்கி மாவட்டத்தின் மிக நீளமான கான்டிலீவர் பாலமாகவும் உள்ளது.

### கன்னியாகுமரியில் கண்ணாடி பாலம்:

விவேகானந்தர் பாறையில் இருந்து திருவள்ளுவர் சிலையினை இணைக்கும் வகையில் கண்ணாடி பாலம் நெடுஞ்சாலைதுறைசார்பில் 37 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டது. இந்த கண்ணாடி பாலத்தில் நடந்து கடலின் அழகினைக் கண்டுகளிக்க ஏராளமான டூரிஸ்டுகள் வந்து குவிக்கின்றனர். இது திறக்கப்பட்டு எட்டுமாதங்களில் ஓரிடத்தில் மட்டும் திடீரென விரிசல் விழுந்துள்ளதால் மாற்றுகண்ணாடிவரவழைக்கப்பட்டு பழுது பார்க்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இதுவும் விரைவில் பழுது பார்க்கப்பட்டு சரி செய்யப்பட்டு மக்களுக்கு திறந்து விடப்படும் என்று மாவட்ட நிர்வாகத் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

### கைலாசகிரியிலுள்ள இந்தியாவின் மிக நீளமான பாலம்:

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நாட்டின் மிக நீளமான கண்ணாடி நடைபாலம் மக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டுள்ளது. இது விசாகப்பட்டினத்தின் கைலாச கிரி மலை உச்சியில் அமைந்துள்ளது. இந்தியாவின் மிக நீளமான கண்ணாடி பாலம் சுமார் 50 மீட்டர் நீளம் கொண்டுளந்த ஆதரவும் இல்லாமல் பாறையில் இருந்து வெளியே நீட்டி கொண்டிருப்பதுபோல கட்டப்பட்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த பாலம் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இங்கு 15 நிமிடங்கள் நடக்க ரூபாய் 300 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் கண்ணாடிகள் ஜெர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. 40 மில்லி மீட்டர் தடிமன் கொண்ட உயர்தர மூன்று அடுக்கு கண்ணாடி, 40 டன் வலுவூட்டப்பட்ட எஃகு இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பானது மணிக்கு 250 கிலோ மீட்டர் வேகத்தில் வீசும் புயல் காற்றையும், சூறாவளி காற்றையும் தாங்க கூடிய வகையில் உள்ளது. தினமும் இப்பாலம் காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை பொதுமக்களுக்காக திறந்து இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 'ஸ்கைவாக்' என்றழைக்கப்படும் இந்த கண்ணாடி நடைபாலம் பார்வையாளர்களுக்கு ஒரு அற்புதமான அனுபவத்தை அளிக்கிறது.

### தமிழ்நாடு முழுவதும்

## மின்னணு வாக்கு எந்திரங்கள் சரிபார்க்கும் பணி 11-ம் தேதி தொடக்கம்



சென்னை, டிச.8:

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை, கட்சி கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதேபோல், தேர்தல் ஆணையும் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் மின்னணு வாக்கு எந்திரங்கள் சரிபார்க்கும் பணியை தேர்தல் ஆணையம் வரும் 11ம் தேதி தொடங்குகிறது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் மின்னணு வாக்கு எந்திரங்கள் சரிபார்க்கும் பணி தொடங்கப்பட உள்ளது.

## புதுவையில் நாளை தவெக பொதுக்கூட்டம்: தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு அனுமதியில்லை

புதுச்சேரி, டிச.8:

புதுச்சேரி உப்பளம் ஹெலிபேடு மைதானத்தில் தமிழக வெற்றிக்கழக பொதுக்கூட்டம் நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி முதல் மதியம் 12 மணிவரை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் த.வெ.க. தலைவர் விஜய் கலந்துகொண்டு பேச உள்ளார். இதற்காக விஜய், பனையூரில் உள்ள வீட்டில் இருந்து அன்று காலை 8 மணிக்கு கார் மூலம் கிழக்கு கடற்கரை சாலை வழியாக புதுச்சேரி வருகிறார். ஹெலிபேடு மைதானத்தில் விஜய் வழக்கமாக பயன்படுத்தும் பிரசார வாகனத்தில் நின்றபடியே பேசுகிறார்.



பொதுக்கூட்டத்திற்கு 5 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். அவர்களுக்கு 'கியூ-ஆர்' கோடுடன் கூடிய பாஸ் வழங்க வேண்டும்.

தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு பாஸ் வழங்கக்கூடாது. அனைவருக்கும் அடிப்படை வசதிகள் குடிநீர், கழிவறை உள்ளிட்டவைகள் இருக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு பாதுகாப்புக்கு அளிக்கும் வகையில் மருத்துவக் குழுவினர், ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் உள்ளிட்டவை முன்னெச்சரிக்கையாக செய்தி ருக்க வேண்டும்.

முதிய வர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கு பாஸ் வழங்கக்கூடாது என்பன உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

## டிச. 11 விசைத்தறி தொழிலாளர்கள் மாநிலந் தழுவிய ஆர்ப்பாட்டம்

மதுரை, டிச. 8:

தமிழ்நாடு விசைத்தறித் தொழிலாளர் மாநில சம்மேளனக்குழு கூட்டம், திருப்பரங்குன்றம் கே.பி. ஜானகியம்மாள் நினைவரங்கத்தில் வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் ஆர். சோமசுந்தரம் தலைமை வகித்தார். சிஐடியு மாநிலத் துணைத் தலைவர் எம். சந்திரன், சம்மேளன மாநிலப் பொதுச் செயலாளர் பி. முத்துசாமி, மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பகுதியில் பல்லா யிரக்கணக்கான தொழிலாளர்கள் விசைத்தறி தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் குடும்பங்களின் பிரதான வருவாய் ஆதாரம் விசைத்தறி தொழிலே ஆகும். கூலி உயர்வு கோரிக்கையை முன்வைத்து கடந்த 19.11.2025 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டம் ஆகியவற்றை நடத்தி வருகின்றனர். 17 நாட்களாக வருமானமின்றி போராடி வரும் விசைத்தறி தொழிலாளர்களின் நிலைமை மிகக்கடுமையாக உள்ளது.

எனவே, தொழிலாளர்கள் முன்வைத்த நியாய மான கூலி உயர்வு கோரிக்கைக்கு உடனடி தீர்வு காண தமிழக அரசு மற்றும் தொழிலாளர் துறை அவசர தலையீடு செய்ய வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மேலும், தொழிலாளர் விரோதச் சட்டங்களை இயற்றி அமலாக்கி வரும் ஒன்றிய அரசை கூட்டம் கடுமையாக கண்டித்தது. போராடும் விசைத்தறி தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் கூலி உயர்வு வழங்கக்கோரியும் டிசம்பர் 11 அன்று மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் விசைத்தறி தொழிலாளர் சங்கங்களின் ஒருங்கிணைந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

## தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் 5 யூனிட்டுகள் நிறுத்தம்: 1,050 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு

தூத்துக்குடி, டிச.8:

தூத்துக்குடியில் உள்ள அனல்மின் நிலையத்தில் 5 அலகுகள் மூலம் 1,050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த மார்ச் 15-ம் தேதி அனல்மின் நிலையத்தில் ஏற்பட்ட தீவிபத்து காரணமாக, முதலாவது, இரண்டாவது அலகுகள் முற்றிலும் எரிந்து சேதமானது. 4, 5-வது யூனிட்டுகள் பராமரிப்பு பணிகளுக்காக சில மாதங்களுக்கு முன்பே நிறுத்தப்பட்டது.

3-வது யூனிட்டில் மட்டும் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் 3வது யூனிட் பழுது காரணமாக நேற்று முன்தினம் இரவு நிறுத்தப்பட்டது.

இதனால் அனல்மின் நிலையத்தில் 5 யூனிட்களும் ஒரே நேரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் 1,050 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை சிறையில் இருந்து விடுதலையாகி தாயகம் திரும்ப முடியாமல் தவிக்கும் 31 நாகை மீனவர்கள்! மீட்கக்கோரி உறவினர்கள் கோரிக்கை

நாகை, டிச.8:

*எல்லை தாண்டியதாக கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டு, இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பிறகும் தாயகம் திரும்ப முடியாமல் தவிக்கும் நாகை மீனவர்கள் 31 பேர், தங்களை மீட்கக் கோரி சோகத்துடன் உறவினர்களுக்கு வீடியோ அனுப்பியுள்ளனர்.*

*நாகை நம்பியர் நகரைச் சேர்ந்தவர் பாரி(40). இவருக்கு சொந்தமான விசைப்படகில் அதே பகுதியைச் சேர்ந்த பாண்டியன்(45), உதயகுமார்(40), ஆகாஷ்(25) உள்ளிட்ட 10 மீனவர்கள், அக்கரைப்பேட்டையைச்சேர்ந்த ஆனந்தகுமார்(42) என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் அவர் மற்றும் விஜயகுமார்(35), தமிழ்ச்செல்வன்(30), இளங்கோவன்(50), கணேசன்(40), சபரிநாதன்(19) உள்ளிட்ட 10 மீனவர்கள் அக்.30-ம் தேதியும், நாகை அக்கரைபேட்டை வடக்கு தெருவைச் சேர்ந்த ராஜா(54) என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ராஜா மற்றும் க.ராஜா(58), செல்வமணி(31), ரவி(60) உள்ளிட்ட 10 மீனவர்கள் அக்.31-ம் தேதியும் மீன்பிடிக்க சென்றிருந்தனர்.*

*இவர்கள் நவ.3-ம் தேதி கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி, இந்த 3 விசைப்படகுகளில் இருந்த 31 மீனவர்களை கைது செய்து இலங்கை சிறையில் அடைத்தனர்.*

*இந்நிலையில், நவ.17-ம் தேதி இலங்கை பருத்தித்துறை நீதிமன்றத்தால் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இதையடுத்து, மீனவர்கள் 31 பேரும் விரைவில் நாடு திரும்புவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தற்போது வரை அவர்கள் இலங்கையில் இருந்து இந்தியா அழைத்து வரப்படவில்லை. இதனால், மீனவர்களின் குடும்பத்தினர் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். இந்நிலையில், தங்களை மீட்டு, தாயகம் கொண்டு செல்ல இந்திய தூதரகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம்சாட்டி, மீனவர்கள் இலங்கையில் இருந்து வீடியோ பதிவுகளை நாகையில் உள்ள அவர்களது உறவினர்களுக்கு அனுப்பி உள்ளனர்.*

*அந்த வீடியோ பதிவுகளில், "நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட நிலையில் தற்போது வரை இலங்கை தூதரகத்துக்கு சொந்தமான இடத்தில் தங்கியுள்ளோம். 2 வாரங்களுக்கு மேலாகியும் எங்களை தாயகம் அழைத்துச் செல்ல இந்திய தூதரகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

*சிறையில் இருந்ததை விட, அதிக நாட்கள் இங்குதான் கஷ்டத்தை அனுபவித்து வருகிறோம். பலருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு சிரமப்பட்டு வருகின்றனர். சரியான உணவு, உடை, இருப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி தவித்து வருகிறோம். எங்களை மீட்டு, சொந்த ஊருக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று சோகத்துடன் தெரிவித்துள்ளனர்.*

*இந்த வீடியோ பதிவுகளை பார்த்து அதிர்ச்சியடைந்த மீனவர்களின் குடும்பத்தினர் கூறும்போது, "இலங்கையில் உள்ள எங்கள் சொந்தங்களை உடனடியாக மீட்டு, தாயகம் கொண்டுவர மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.*


*தமிழக அரசுக்கு பரிந்துரை: இது குறித்து நாகை மாவட்ட மீன்வளத்துறையினர் கூறும்போது, "நாகை மீனவர்களை மீட்டு தாயகம் கொண்டுவர ஆட்சியர் மூலம் தமிழக அரசுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பி உள்ளோம். டிட்வா புயலால் இலங்கையில் அசாதாரண சூழ்நிலை நிலவி வருவதால், நாகை மீனவர்களை மீட்க காலதாமதமாகிறது. விரைவில் மீனவர்கள் மீட்கப்பட்டு, சொந்த ஊருக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.*

# மறுசீரமைப்பால் புதுப்பொலிவு பெறும் மதுரை ரயில் நிலையம் - பயணிகளுக்கு கூடுதல் வசதிகள்

**மதுரை, டிச.8:**

முக்கிய ரயில் நிலையங்களில் ஒன்றான மதுரை ரயில் நிலையம், மறுசீரமைப்பு மூலம் புதுப்பொலிவு பெறுகிறது. பயணிகளுக்கான கூடுதல் வசதிகளும் அதிகரிக்கப் படுகின்றன. இது தொடர்பாக, கோட்ட ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: மதுரை ரயில் நிலையம் ரூ.347.47 கோடியில் மறுசீரமைக்கப்படுகிறது.

கிழக்கு, மேற்கு பகுதி ரயில் முனைய கட்டிடங்கள், 42 மீட்டர் அகல ரயில் பாதை, மேற்குப் பகுதியில் பயணிகள் காத்திருப்பு வளாகம், நடைமேம்பால மேம்பாடு, பார்சல் போக்குவரத்துக்கென புதிய தனி நடை மேம்பாலம், விசாலமான இரு சக்கர, நான்கு சக்கர வாகனக் காப்பகங்கள்,



கூரையுடன் கூடிய பாதசாரிகள் நடைபாதை, ரயில் நிலையம் - பெரியார் பேருந்து நிலையத்தை இணைக்கும் சுரங்கப்பாதை பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கிழக்கு - மேற்கு முனைய கட்டிடங்களை இணைத்து, ரயில் பாதை மேற்புற பகுதியில் பெரிய விசாலமான அரங்கு கட்டப்படுகிறது. அதில் பயணிகள் காத்திருப்பு பகுதி, பயணச்சீட்டு பதிவு மையம், ஓய்வறைகள், உணவு விடுதிகள் அமைகின்றன.

ரயில் நிலையத்தை பெரியார் பேருந்துநிலையத்தோடு இணைக்கும் சுரங்கப்பாதை பணிகளில் ரயில்வே எல்லைக் குள் 38 சதவீதப் பணிகள் முடிந்துள்ளன. 456 சதுர மீட்டர் மட்டும் இருந்த பயணிகள் தங்கும் அறைகள் 2,372.31 சதுர மீட்டராக அதிகரிக்கப்படுகிறது.

பல படுக்கை ஓய்வறைகளில் தனித்தனியாக ஆண்களுக்கு 47 படுக்கைகளும், பெண்களுக்கு 21 படுக்கைகளும் அமைக்கப் படுகின்றன. பயணிகள் காத்திருக்கும் பகுதி 354 இருக்கைகளுடன் 3,855 சதுர மீட்டராக அதிகரிக்கிறது. 450 சதுர மீட்டர் மட்டும் இருந்த குளிரூட்டப்பட்ட பயணிகள் தங்கும் அறைகள், 252 இருக் கைகளுடன் 773.12 சதுர மீட்டராக உயர்த்தப்படுகிறது. அதேபோல், 10,200 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, 287 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையிலும் பரப்பளவு அதிகரிக்கப்படுகிறது.

உணவு, அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டு 35,730 சதுர மீட்டரில் அமைகின்றன. 2,475 சதுர மீட்டரில் இருந்த ரயில் நிலைய கட்டிடம் 22,846 சதுர மீட்டராக அதிகரிக்கப்படுகிறது. இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## க்ரைம் கார்னர்

### தாணே: போலி பாஸில் உள்ளூர் ரயிலில் பயணம் செய்த இளைஞர் கைது

**தானே, டிச.8:**

தாணேவில் போலி பாஸில் உள்ளூர் ரயிலில் பயணம் செய்ததாக இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம், தாணேவில் யுடிஎஸ் மொபைல் டிக்கெட் செயலி மூலம் உருவாக்கப்பட்ட போலி பாஸில் தாதர்-அம்பர்நாத் விரைவு ஏசி உள்ளூர் ரயிலில் 20 வயது இளைஞர் வெள்ளிக்கிழமை பயணம் செய்திருக்கிறார்.

அப்போது அவரிடம் பயண டிக்கெட்டை காண்பிக்கச் சொல்லி டிக்கெட் ஆய்வாளர் கேட்டிருக்கிறார். உடனே அவர், தனது மொபைல் போனின் வாட்ஸ்அப்பில் டிஜிட்டல் ரயில் பாஸைக் காட்டியுள்ளார். ஆனால் அது போலியானது என கண்டறியப்பட்டதாக ரயில்வே போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பின்னர் அவர் தாணே ரயில் நிலையத்தில் இறக்கிவிடப்பட்டு மேலும் விசாரணைக்காக ரயில்வே காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார். விசாரணையின் போது, நண்பர் ஒருவர் போலி பாஸை வாட்ஸ்அப்பில் தனக்கு அனுப்பியதாக அந்த நபர் தெரிவித்ததாக அதிகாரி மேலும் கூறினார்.

பின்னர் அந்த இளைஞர் மீது மோசடி குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார்.

### கந்து வட்டி தடைச் சட்டத்தின் கீழ் ஒருவர் மீது வழக்கு

**தேனி, டிச.8:**

தேனியில் ஜவுளிக் கடை பணியாளரிடம் அதிக வட்டி கேட்டு மிரட்டியதாக கந்து வட்டி தடைச் சட்டத்தின் கீழ் ஒருவர் மீது போலீஸார் வெள்ளிக்கிழமை வழக்குப் பதிந்தனர்.

பெரியகுளம் அருகே டி. கள்ளிப்பட்டியைச் சேர்ந்தவர் கண்ணன்(42). இவர், தேனியில் உள்ள தனியார் ஜவுளிக் கடை ஒன்றில் வேலை பார்த்து வருகிறார். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் பழனிசெட்டிபட்டியைச் சேர்ந்த சிவக்குமாரிடம் கண்ணன் ரூ. ஒரு லட்சம் கடன் வாங்கினார்.இந்தக் கடன் தொகைக்கு கண்ணன் 15 மாதங்களில் அசல், வட்டியாக சிவக்குமாரிடம் மொத்தம் ரூ.1.50 லட்சம் திரும்பக் கொடுத்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், தன்னிடம் அதிக வட்டி கேட்டு கொலை மிரட்டல் விடுப்பதாக தேனி காவல் நிலையத்தில் கண்ணன் அளித்த புகாரின் பேரில் சிவக்குமார் மீது கந்து வட்டி தடைச் சட்டத்தின் கீழ் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

### தூத்துக்குடியில் 500 ரூபாய் போலி நோட்டுகளை புழக்கத்தில் விட்ட 2 பேர் கைது



**தூத்துக்குடி, டிச.8:**

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பகுதியில் உள்ள ஒரு ஓட்டலில் கோவில்பட்டி சரமாரி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த சரவணன் (வயது 28) என்பவர் வேலை பார்த்து வருகிறார்.

இவர் நேற்று முன்தினம் பள்ளிவாசல் தெருவில் உள்ள பெட்டிக்கடை வியாபாரியிடம் 500 ரூபாய் போலி நோட்டை கொடுத்து சில்லரை கேட்டார். இதன்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், சரவணனை பிடித்து விசாரணை மேற்கொண்டனர். அதில் அவர் வைத்திருந்த ரூபாய் நோட்டுகள் குழந்தைகள் விளையாடுவதற்காக கடைகளில் விற்கப்படும் போலி ரூபாய் நோட்டுகள் என்பது தெரியவந்தது. மேலும் சரவணன் மாஸ்டராக பணிபுரியும் ஓட்டலில் சோதனை நடத்தி, கட்டுக்கட்டாக 70 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான போலியான 500 ரூபாய் நோட்டுகளை பறிமுதல் செய்து, அசாம் மாநிலத்தை சேர்ந்த குமார் சர்மா(45) மற்றும் சரவணன் ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

### ஆசை வார்த்தைகள் கூறி சிறுமியை திருமணம் செய்த விவசாயி - போக்சோவில் கைது

**திண்டுக்கல், டிச.8:**

திருச்சி மாவட்டம் மணப்பாறையை சேர்ந்த ஒரு தம்பதி, தங்களது 3 மகள்களுடன் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு கொடைக்கானல் அருகே வடகவுஞ்சி செம்பிரான்குளம் கிராமத்துக்கு வந்தனர். அங்கேயே தங்கி அவர்கள் தனியார் எஸ்டேட்டில் கூலி வேலை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 20-ந்தேதி அந்த தம்பதியின் மூத்த மகளான 17 வயது சிறுமி திடீரென மாயமானார். பல்வேறு இடங்களில் தேடியும் அவள் கிடைக்கவில்லை. இதுகுறித்து கொடைக்கானல் போலீஸ் நிலையத்தில் பெற்றோர் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் சிறுமியை தேடி வந்தனர்.

விசாரணையில், செம்பிரான்குளத்தை சேர்ந்த விவசாயியான தோப்படியான் (45 வயது) என்பவர் மாயமான 17 வயது சிறுமியை ஆசை வார்த்தை கூறி கடத்திச் சென்றார். பின்னர் சிறுமியை திருமணம் செய்து குடும்பம் நடத்தி வந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் சிறுமியை மீட்டனர். மேலும் போக்சோ சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து, தோப்படியானை கைது செய்தனர்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### காலத்தை வளைக்கும் 'நேர படிகங்கள்'

கோட்பாட்டு இயற்பியலில் மட்டுமே சாத்தியம் என்று கருதப்பட்ட ஒன்றை, கொலராடோ பல்கலை இயற்பியலாளர்கள் நிஜமாக்கியுள்ளனர். அதுதான் 'கண்ணுக்குத் தெரியும் நேரப் படிகம்'.

வைரம், உப்பு போன்ற வழக்கமான படிகங்கள், இடைவெளியில் (Space) அணுக்களின் சீரான கட்டமைப்பை கொண்டிருக்கும். ஆனால், இந்த 'நேரப் படிகங்கள்' தங்கள் கட்டமைப்பை 'காலத்தில்' (Time) திரும்பத் திரும்ப வெளிப்படுத்துகின்றன. 'லிக்விட் கிரிஸ்டல்' எனப்படும் திரவப் படிகப் பொருளால் ஆன இதன் மீது ஒளி படும்போது, அது தனக்கான ஒரு தாளகதியை உருவாக்கிக் கொண்டு, சோர்வடையாத ஒரு இதயத்துடிப்பை போல தொடர்ந்து துடிக்கிறது.

இதற்கு முன்பே நேரப் படிகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை மிகவும் குளிரூட்டப்பட்ட சூழலில், குவான்டம் கருவிகளைக் கொண்டு மட்டுமே சாத்தியமாகின. அவை கண்ணுக்குத் தெரியாது. இந்தப் படிகம் சாதாரண ஒளியின் தூண்டலில் செயல்படுவதோடு, மனித கண்களுக்குத் தெரியும் வகையில் அமைந்துள்ளது.

இதன் உடனடிப் பயன் வியக்கத்தக்கது. ரூபாய் நோட்டுகள் மற்றும் பாஸ்போர்ட்டுகளில் போலிகளைத் தவிர்க்க உதவும் 'கால நீர்முத்திரையாக' (Time watermark) இது பயன்படலாம்.

தகவல்களை அணுக்களிலோ காந்தங்களிலோ சேமிப்பதற்குப் பதிலாக, இந்தப் படிகங்களின் தாள லயத்தில் (Rhythmic patterns) சேமிக்க முடியும். இது மிகக் குறைந்த ஆற்றலில் இயங்கும் உணரிகள் மற்றும் பாதுகாப்பான தகவல் தொடர்புக்கு வழிவகுக்கும்.

### பேஸ்புக், இன்ஸ்டாகிராமுக்கு ஒருங்கிணைந்த உதவி மையம் அறிமுகம்!

ஏஐ வசதியுடன் கூடிய இந்த புதிய உதவி மையத்தில், பயனர்களின் கேள்விகளுக்கு தானியங்கி (Automatic) பதில்கள் வழங்கப்படும். இதில் பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் கணக்கின் அமைப்புகள் தொடர்பான வழிகாட்டுதல்கள் விரைவாக பெற முடியும். பயனர்களின் கணக்கு ஹேக் செய்யப்பட்டால் அல்லது வேறு ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால், உதவி மையம் வழியாக விரைவாக தீர்வு காணலாம். இதில் உள்ள ஏஐ மாடல், login விவரங்களை மதிப்பீடு செய்ய, சந்தேகத்திற்கிடமான செயல்பாட்டைக் கண்டறிய மற்றும் பிஷிங் முயற்சிகளை நிகழ்நேரத்தில் தடுக்க, பயனரின் கணக்கு தற்செயலாக முடக்கப்படுவதைத் தவிர்க்க, ஏஐ உதவியுடன் கணக்குகள் தொடர்பான மேல்முறையீட்டு செயல்முறை விரைவாக மேற்கொள்ள உதவும் என்று மெட்டா தெரிவித்துள்ளது.

# மக்களிடையே பிரிவினை ஏற்படுத்தும் சநாதனம்: சேகர்பாபு

**சென்னை, டிச.8:**

சநாதானம் மக்களிடையே பிரிவினை ஏற்படுத்துவதாக அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களுடன் பேசிய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, "வட மாநிலங்களில் வேண்டுமென்றால், அவர்கள் நினைக்கும் காரியங்கள் ஈடேறலாம். தமிழகத்தைப் பொருத்தவரை, ஜாதி, மத, இன, மொழிகளுக்கு அப்பாற்பட்டு நடைபெறுகிற ஆட்சி.

நயினார் நாகேந்திரனின் கனவு பகல் கனவாகத்தான் இருக்கும். இது திராவிட மண். இங்கு மத ஒற்றுமை, மத நல்லிணக்கம் பேணிக் காக்கப்படும். அனைத்துத் தரப்பட்ட மக்களும் சகோதரத்துவத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிற மண் இது.

எந்தவொரு பொருளையும் மையப்படுத்தி, மக்களைப் பிளவுபடுத்தக் கூடாது என்றுதான் கூறுகிறோம்.

சமாதானம் என்பது அனைத்து நிலையிலும் மக்களைச் சமன்படுத்துவது.

சநாதனம், மக்களிடையே பிரிவினை ஏற்படுத்துகிறபோது, அதனை எதிர்க்கிற அரசு இந்த அரசு" என்று தெரிவித்தார்.

# ஈரோடு: டிச. 16-ல் விஜய் சுற்றுப்பயணம்!

**சென்னை, டிச.8:**

ஈரோட்டில் டிச. 16-ல் தவெக தலைவர் விஜய் சுற்றுப்பயணம் மேற்கொள்வதாக கட்சியின் மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் அறிவித்து ள்ளார்.

தவெக மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன்,செய்தியாளர்களுடன் பேசுகையில், "ஈரோட்டில் தவெக தலைவர் விஜய், வருகிற 16 ஆம் தேதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். வாரி மகாலுக்கு அருகில் உள்ள ஒரு தனியார் இடத்தில் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளரிடம் அனுமதிகோரி, கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன், அதற்கான பணிகள் விரைவில் நடைபெறும். சாலைவல நிகழ்ச்சி, தற்போது தவிர்க்கப்பட்டுள்ளது.

தமிழகமே ஒரு திருப்புமுனையில் உருவாகிக் கொண்டிருக்கிறது. பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்கிற உங்கள் குழந்தைகள் உங்களிடம் என்ன சொல்கின்றனர் என்பது உங்களுக்கேத் தெரியும். மாற்றங்கள் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்வீர்கள்" என்று தெரிவித்தார்.

# பெண்ணிடம் நகை பறித்த சிறுவன் உள்பட மூவர் கைது

**நாகப்பட்டினம், டிச.8:**

திருக்குவளை ஊராட்சி குண்டையூரைச் சேர்ந்தவர் சிங்காரவேல் மனைவி ராதா (40). இவர், மின்வாரிய அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார். இவர், மேலப்பிடாகை மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் ஹேமலதா என்பவரது இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து திருக்குவளைக்கு வந்து கொண்டிருந்தார்.

மீனம்பநல்லூர் சந்திரநதி மதகடி அருகே வந்தபோது, பின்னால் மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று பேர், ராதா அணிந்திருந்த 5 பவுன் தாலி சங்கிலியை பறித்துச் சென்றனர்.

இதுகுறித்து, திருக்குவளை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், கீழையூர் காவல் ஆய்வாளர் செங்குட்டுவன் தலைமையில் திருக்குவளை உதவி காவல் ஆய்வாளர் ஜெயச்சந்திரன் மற்றும் போலீஸார், கச்சநகரத்தில் வெள்ளிக்கிழமை வாகனச் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, ஒரு இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று பேரை நிறுத்தி விசாரணை மேற்கொண்டதில், இவர்கள், திருத்துறைப்பூண்டி தாலுகா மேலகொருக்கை இந்திராநகர் பகுதியை சேர்ந்த லெனின் மகன் ஏங்கல்ஸ் (18), மீனாட்சி வாய்க்கால் கரை புதுத்தெரு பகுதியைச் சேர்ந்த ரவி மகன் பிரகாஷ் (22), அதே பகுதியை சேர்ந்த ஒரு சிறுவன் என்பதும், மின்வாரிய ஊழியர் ராதாவிடம் நகையை பறித்ததும் தெரியவந்தது.

மூவரும் கைது செய்யப்பட்டு, 5 பவுன் நகை மீட்கப்பட்டது. அவர்கள் வந்த இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

# ராமேசுவரம் விமான நிலையம் அமைக்க 3 இடங்களில் ஆய்வு!

**ராமேசுவரம், டிச.8:**

ராமேசுவரம் விமான நிலையம் அமைப்பதற்காக ராமநாதபுரம் மாவட்டத்தில் 2 இடங்களில் இந்திய விமான நிலைய ஆணையம் ஆய்வு மேற்கொண்டுள்ளது.


இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்து ராமேசுவரத்துக்கு ஆண்டுக்கு சுமார் 4 கோடி வரையிலும் ஆன்மிக பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

அவர்களில் விமானம் மூலம் வருபவர்கள் முதலில் மதுரை, தூத்துக்குடி, திருச்சி விமான நிலையங்கள் வந்து, அங்கிருந்து சாலை அல்லது ரயில் மூலம் ராமேசுவரம் வரவேண்டியுள்ளது.

இதனால் ராமநாதபுரம் மாவட்டத்தில் விமான நிலையம் அமைக்க வேண்டும் என்பது சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய அரசின் உதான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ராமநாதபுரம், தஞ்சை, வேலூர், நெய்வேலி ஆகிய 4 இடங்களில் விமான நிலையம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் ராமநாதபுரம் விமான



நிலையத்துக்கு ரூ.36.72 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 2025-26-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ராமேசுவரம் பகுதியில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்" என அறிவித்திருந்தார்.

இதற்காக தமிழக அரசு ஓடுபாதையுடன் விரிவான விமான நிலையத்தை அமைப்பதற்கு 700 ஏக்கர் தேவை என்பதால் உச்சிப்புளி மற்றும் கீழக்கரை அருகே 2 இடங்களை தேர்வு செய்துள்ளது. இந்த இடங்களை இந்திய விமான நிலைய ஆணையம் சமீபத்தில் ஆய்வு செய்துள்ளது.

தமிழக அரசு சுட்டிக்காட்டிய உச்சிப்புளி, அருகிலுள்ள கிராமங்களான பெருங்குளம், கும்பரம் மற்றும் வாலாந்தரவை ஆகிய இடங்களும், கீழக்கரைக்கு அருகில் அமைந்துள்ள 2-வது தளத்தில், அண்டை கிராமங்களில் மணிக்கனேரி மற்றும் மாயாகுளம் ஆகிய இடங்களும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக உச்சிப்புளிக்கு அருகிலுள்ள முதல் தளம் இந்திய கடற்படை விமான நிலையமான ஐஎன்எஸ் பருந்து அருகே அமைந்துள்ளது. மாநில அரசு இந்த இடத்தைத் தேர்வு செய்தால், இந்திய கடற்படையின் ஒப்புதல் தேவைப்படும். மேலும் இந்த இடம் ராமேசுவரத்திலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளன.

கீழக்கரைக்கு அருகிலுள்ள 2-வது தளத்திலிருந்து ராமேசுவரத்தில் ராமநாத சுவாமி கோயில் சுமார் 80 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்திய விமான நிலைய ஆணையம் ஆய்வறிக்கையில் பரிந்துரைகளை வழங்கிய பிறகு, அரசாங்கம் அந்த இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும்.

இந்த விமான நிலையத்துக்கு குறைந்தது 600 ஏக்கர் நிலம் தேவைப்படும். இடம் தேர்வு செய்யப்பட்டதும் விமான நிலையம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இண்டிகோ விமான சேவை ரத்து காரணமாக 37 ரயில்களில் 116 பெட்டிகளை கூடுதலாக இணைத்தது ரயில்வே



புதுடெல்லி, டிச.8:

இண்டிகோ விமான சேவை ரத்து காரணமாக, முக்கிய வழித்தடங்களில் செல்லும் ரயில்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால் 37 ரயில்களில் 116 கூடுதல் பெட்டிகளை இந்திய ரயில்வே இணைத்தது.

விமானிகளின் பணிநேர வரம்பு விதிமுறைகள் அறிவிக்கப்பட்டதால், கடந்த சில நாட்களாக இண்டிகோ விமான சேவை வெகுவாக ரத்து செய்யப்பட்டது. இதனால் முக்கிய வழித்தடங்களில் செல்லும் ரயில்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால் நாடு முழுவதும் இயக்கப்படும் 37 ப்ரீமியம் ரயில்களில் 116 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “அதிக தேவை உள்ள வழித்தடங்களில் செல்லும் 18 ரயில்களில் கூடுதலாக சேர் கார் மற்றும் படுக்கை வசதி கொண்ட ரயில் பெட்டிகள் நேற்று முதல் தெற்கு ரயில்வே இணைத்துள்ளது. இதேபோல் வடக்கு ரயில்வேயும் 8 ரயில்களில் 3-ம் வகுப்பு ஏசி பெட்டிகள், சேர் கார் பெட்டிகளை இணைத்துள்ளன. மேற்கு ரயில்வே, 4 ரயில்களில் கூடுதலாக ஏசி பெட்டிகளை இணைத்துள்ளது. கிழக்கு மத்திய ரயில்வே, பிஹார் - டெல்லி வழித்தடத்தில் செல்லும் ரயில்களில் வரும் 10-ம் தேதி வரை கூடுதலாக ஏ.சி பெட்டிகளை இணைத்துள்ளன. கிழக்கு கடற்கரை ரயில்வே, புவனேஸ்வர் - டெல்லி வழித்தடத்தில் 3 ரயில்களில் கூடுதலாக ஏசி பெட்டிகளை இணைத்துள்ளது. கிழக்கு ரயில்வே 3 ரயில்களில் படுக்கை வசதி கொண்ட ரயில் பெட்டிகளை இணைத்துள்ளது. வடக்கு ரயில்வே 2 முக்கிய ரயில்களில் வரும் 13-ம் தேதி வரை ஏசி பெட்டிகளை கூடுதலாக இணைத்துள்ளது. இதுதவிர பல வழித்தடங்களில் சிறப்பு ரயில்களும் இயக்கப்படுகின்றன. இவ்வாறு ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் செயல்படும் இண்டிகோ விமான நிறுவனத்தில் பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் விதிமுறைகள் தொடர்பான சிக்கல்களால் கடந்த சில நாட்களாக ஏராளமான விமானங்கள் ரத்து செய்யப்பட்டு வருகின்றன.

இதனால், பயணிகளும் விமான நிலையங்களில் பெரும் சிரமத்தைச் சந்தித்து வருகின்றனர். நேற்று ஒரே நாளில் மட்டும் சுமார் 1000+ இண்டிகோ விமான சேவை ரத்து, தாமதம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது

## 95% சேவை மீட்டெடுப்பு: இண்டிகோ அறிவிப்பு!

புதுடெல்லி, டிச.8:

இண்டிகோ சேவை படிப்படியாக மீட்டெடுக்கப்பட்டு வருவதாக அறிவித்துள்ளது.

இண்டிகோவின், நாடுதழுவிய சேவை பாதிப்பால் 6 நாள்களாக விமானங்கள் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டு வருகின்றன. கடந்த வியாழக்கிழமை 550 விமானங்கள், வெள்ளிக்கிழமை 1,000-க்கும் சனிக்கிழமை 800-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

இந்த நிலையில், இண்டிகோ சேவை மீட்டெடுக்கப்பட்டு வருவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. சனிக்கிழமையில் 113 இடங்களுக்கு 700 விமானங்களை இயக்கிய நிலையில், ஞாயிற்றுக்கிழமை மாலைக்குள் 1,500-க்கும் அதிகமான சேவை உயர்ந்துள்ளதாக அறிவித்துள்ளது.

138 இடங்களில் 135 இடங்களுக்கு விமானங்கள் இயக்கப்பட்ட நிலையில், 95 சதவிகித சேவை இணைப்பு மீட்கப்பட்டதாக அறிவித்துள்ளது.

## கொல்லத்தில் தீ விபத்தில் 10 மீன்பிடி படகுகள் எரிந்து நாசம்

திருவனந்தபுரம், டிச.8:

கொல்லத்தில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 10 மீன்பிடி படகுகள் எரிந்து நாசமாகின.

கேரள மாநிலம், கொல்லத்தில் உள்ள அஷ்டமுடி ஏரியில் நங்கூரமிட்டிருந்த மீன்பிடி படகுகளில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டது. தீ மேலும் பரவாமல் இருக்க உள்ளூர் மக்களும் தீயணைப்புப் படையினரும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். முதற்கட்ட தகவலின்படி, சுமார் 10 படகுகள் முற்றிலுமாக எரிந்து நாசமாகின. தீ விபத்துக்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. ஆனால் எரிவாயு சிலிண்டர் வெடித்ததாக சந்தேகிக்கப்படுகிறது என்று போலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார். இருப்பினும் இந்த சம்பவத்தில் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. அஞ்சலுமூட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட குரேபுழா பகுதியில் இந்த சம்பவம் நடந்தது. தீ விபத்து குறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் அங்கிருந்த மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

## கோவா தீவிபத்தில் 23 பேர் பலி: நிவாரணம் அறிவிப்பு!

புதுடெல்லி, டிச.8:

கோவா, அர்போரா பகுதியில் உள்ள இரவு விடுதியில் சனிக்கிழமை நள்ளிரவு ஏற்பட்ட தீவிபத்தில் 23 பேர் பலியாகினர். இந்தச் சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர் மோடி, பாதிக்கப்பட்டவர்களுக்கு மாநில அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகக் கூறினார்.

மேலும், தீவிபத்தில் பலியானோரின் குடும்பத்தினருக்கு ரூ. 2 லட்சமும், காயமடைந்தோருக்கு ரூ. 50,000 நிவாரணமும் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவித்தார். தீவிபத்தில் 3 பேர் தீக்காயங்களால் உயிரிழந்ததாகவும், மற்றவர்கள் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்ததாகவும் கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் கூறினார். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் விடுதி சமையலறை ஊழியர்கள் என்றும், சுற்றுலாப் பயணிகள் 4 பேர் என்றும் கூறப்படுகிறது.

## அமலாக்கத் துறை அழைப்பாணை விவகாரம்: ஜார்க்கண்ட் முதல்வர் நீதிமன்றத்தில் ஆஜர்

புதுடெல்லி, டிச.8:

நில மோசடியுடன் தொடர்புடைய பண முறைகேடு வழக்கில் அமலாக்கத் துறை அழைப்பாணையை ஏற்று விசாரணைக்கு ஆஜராகாத விவகாரத்தில் ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், ராஞ்சியில் உள்ள எம்.பி., எம்எல்ஏ-க்களுக்கு எதிரான ஊழல் புகார்களை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் சனிக்கிழமை நேரில் ஆஜரானார்.

ஜார்க்கண்ட் உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரான முதல்வர் சோரன், இந்த வழக்கு தொடர்பாக தலா ரூ. 7,000 மதிப்பில் இரண்டு பிணை (ஜாமீன்) பத்திரங்களைத் தாக்கல் செய்தார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ரூ. 600 கோடி மதிப்பிலான அரசு நிலத்தை கட்டுமான நிறுவனங்களுக்கு விற்பனை செய்ததாக மாநில முதல்வராக இருந்த ஹேமந்த் சோரன் மீது புகார் எழுந்தது. இந்தப் புகார் தொடர்பாக பண மோசடி வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட அமலாக்கத் துறை, ஹேமந்த் சோரனை கடந்த ஆண்டு ஜனவரியில் கைது செய்தது. சிறையில் அடைக்கப்பட்ட அவர், ஜாமீன் கோரி ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம் ஜாமீன் வழங்கியதைத் தொடர்ந்து, 5 மாதங்களுக்குப் பிறகு சிறையிலிருந்து வெளியே வந்த சோரன், பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று கடந்த ஆண்டு நவம்பரில் மாநில முதல்வராக மீண்டும் பதவியேற்றார்.

அதன் பிறகு, பண மோசடி வழக்கு தொடர்பான விசாரணைக்கு ஆஜராகுமாறு அவருக்கு அமலாக்கத் துறை சார்பில் தொடர் அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால், ஹேமந்த் சோரன் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இதுதொடர்பாக அமலாக்கத் துறை தாக்கல் செய்த மனுவை விசாரித்த ராஞ்சியில் உள்ள சிறப்பு நீதிமன்றம், அதுகுறித்து விளக்கமளிக்க நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகுமாறு ஹேமந்த் சோரனுக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ஹேமந்த் சோரன் தரப்பில் ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை கடந்த புதன்கிழமை விசாரித்த உயர்நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதிலிருந்து ஹேமந்த் சேரனுக்கு விலக்கு அளித்தது. அதே நேரம், சிறப்பு நீதிமன்றத்தில் டிசம்பர் 6-ஆம் தேதி ஆஜராவதாக ஹேமந்த் சேரன் தரப்பில் அளிக்கப்பட்ட உறுதிமொழியையும் பதிவு செய்வதாக உத்தரவிட்டது.

அதனடிப்படையில், நீதிமன்றத்தில் ஹேமந்த் சோரன் சனிக்கிழமை நேரில் ஆஜரானார்.

இதுகுறித்து அவரின் வழக்குரைஞர் பிரதீப் சந்திரா கூறுகையில், ‘முதல்வர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, தலா ரூ. 7,000-க்கான இரு பிணைப் பத்திரங்களைத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கில் இனி அவர் நேரில் ஆஜராக வேண்டியதில்லை. வழக்கின் அடுத்த விசாரணை வரும் 12-ஆம் தேதி வருகிறது. அப்போது முதல்வர் தரப்பில் அவரின் வழக்குரைஞர் ஆஜராவார்’ என்றார்.

## இண்டிகோ சிஇஓ-க்கு டிஜிசிஏ நோட்டீஸ்!

புதுடெல்லி, டிச.8:

இண்டிகோ விமானங்களின் குளறுபடி தொடர்பாக அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியிடம் விளக்கம் கேட்டு விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

விமானிகளின் பணிச் சுமையைக் குறைக்க, கடந்த நவம்பர் 1-ஆம் தேதிமுதல் விமானிகளுக்கான திருத்தப்பட்ட பணி நேரக் கட்டுப்பாட்டு விதிகள் (எஃப்டிடிஎல்) அமலுக்கு வந்தன. இந்த விதிகளின்படி, வாராந்திர ஓய்வையும் வருடாந்திர விடுமுறைகளையும் தனித்தனியாகக் கருத வேண்டும். அதாவது, வாராந்திர 48 மணி நேர ஓய்வுக்குப் பதிலாக விடுமுறையை ஈடு செய்யக் கூடாது.

இந்த விதிமுறை மாற்றங்களுக்கு இண்டிகோ போதிய திட்டமிடாததால், அந்த நிறுவனத்தில் விமானிகள் பற்றாக்குறை ஏற்பட்டு, கடந்த சில நாள்களாக அன்றாட விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.


கடந்த வியாழக்கிழமை 550 விமானங்கள், வெள்ளிக்கிழமை 1,000-க்கும் மேற்பட்ட இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்ட நிலையில், ஐந்தாவது நாளாக சனிக்கிழமை நாட்டின் முக்கிய நகரங்களில் இருந்து இயக்கப்படும் 800-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால் விமான நிலையங்களில் ஆயிரக்கணக்கான பயணிகள் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தலைமையில் வெள்ளிக்கிழமை உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது. அதில் விமான சேவைகளை சீர்செய்ய அவசர நடவடிக்கையாக விமானிகளின் பணி நேர விதிகளை விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) தளர்த்தியது.

இந்த விவகாரம் தொடர்பாக இண்டிகோ தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) பீட்டர் எல்பர்ஸுக்கு விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அந்த நோட்டீஸில், நம்பகமான விமான சேவைக்கு உரிய நேரத்தில் ஏற்பாடுகளை செய்வதிலும், பயணிகளுக்குத் தேவையான வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதிலும் பீட்டர் கடமை தவறிவிட்டதாக தெரிவித்துள்ளது. விமான சேவையில் ஏற்பட்ட குளறுபடிகள் குறித்து அவர் 24 மணி நேரத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் டிஜிசிஏ கோரியுள்ளது.

## சுழற்சிப் பொருளாதாரத்தால் பால் பண்ணை விவசாயிகள் வருமானம் 20% அதிகரிக்கும்: அமித் ஷா

சநாதர், டிச.8:



நாடு முழுவதும் சுழற்சிப் பொருளாதார முறையை அமல்படுத்தினால், அடுத்த 5 ஆண்டுகளில் பால் பண்ணை விவசாயிகளின் வருமானம் 20 சதவீதம் அதிகரிக்கும் என்று மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் வாவ்-தராட் மாவட்டத்தில் உள்ள சநாதர் கிராமத்தில், அமுல் நிறுவனத்தின் அங்கமான பனாஸ்காந்தா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க நிறுவனத்துடன் தொடர்புள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் நிகழ்ச்சியில், அமைச்சர் அமித் ஷா சனிக்கிழமை கலந்துகொண்டார்.

அப்போது அவர் பேசுகையில், ‘பாலை கொள்முதல் செய்து பால் பொருள்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை விவசாயிகளுக்குத் திருப்பி அளிப்பதில், கூட்டுறவு பால் பண்ணைகள் பெரும் வெற்றி அடைந்துள்ளன.

தற்போது சுழற்சி பொருளாதாரம் மீது கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துள்ளது. இதன்மூலம், விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட கால்நடை சாணத்தில் இருந்து தயாரிக்கப்படும் பயோகேஸ், உரம் ஆகியவற்றை விற்பனை செய்து பால் பண்ணை திரட்டும் வருமானத்தில் விவசாயிகளுக்கு உரிய பங்கு கிடைக்கும்.

நாடு முழுவதும் சுழற்சிப் பொருளாதார முறையை அமல்படுத்தினால், அடுத்த 5 ஆண்டுகளில் பால் பண்ணை விவசாயிகளின் வருமானம் 20 சதவீதம் அதிகரிக்கும்.

பன்னீர், தயிர் போன்ற வழக்கமான பால் பொருள்கள் உற்பத்தியைத் தாண்டி, வேறு பல பால் பொருள்களுக்கு உலகம் முழுவதும் தேவை உள்ளது. ஆனால் அந்தப் பொருள்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படவில்லை. அந்தப் பொருள்களின் உற்பத்தி மீது கவனம் செலுத்தினால், பால் பண்ணை விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும்’ என்று தெரிவித்தார்.

# விளையாட்டு செய்திகள்

## முதல்முறையாக எம்எல்எஸ் கோப்பை வென்றது இன்டர் மியாமி..!




புளோரிடா, டிச.8:

மெஸ்ஸி தலைமையிலான இன்டர் மியாமி அணி தனது ஏழு ஆண்டுகளில் முதல்முறையாக எம்எல்எஸ் கோப்பையை வென்று வரலாறு படைத்துள்ளது.

தாமஸ் முல்லர் தான் மீண்டும் மெஸ்ஸியை வீழ்த்துவதாகக் கூறியிருந்த நிலையில், அவரது அணி படுதோல்வி அடைந்தது. புளோரிடாவின் தென்கிழக்கு கடற்கரையில் உள்ள ஃபோர்ட் லாடர்டேல் சேஸ் ஸ்டேடியத்தில் எம்எல்எஸ் கோப்பை இறுதிப் போட்டியில் இன்டர் மியாமி அணியும் வான்காவெர் அணியும் மோதின. இந்தப் போட்டியில் இன்டர் மியாமி அணி 3-1 என வென்றது. இந்தப் போட்டியில் லியோனல் மெஸ்ஸி 2 அசிஸ்ட்டுகளைச் செய்து அசத்தினார்.

ஜெர்மனி அணிக்கு தலைமை தாங்கிய தாமஸ் முல்லர் 2014 உலகக் கோப்பை இறுதிப் போட்டி, 2010 உலகக் கோப்பை காலிறுதியில் மெஸ்ஸியின் ஆர்ஜென்டீனாவை தோற்கடித்தார். அதேபோல இந்தமுறையும் நடக்குமென அவர் பேட்டி அளித்திருந்த நிலையில், மெஸ்ஸி அதை தவிடுபொடியாக்கியுள்ளார்.

## கேரம் போட்டியில் இந்தியா சாம்பியன்

மாலே, டிச.8:

உலகக் கோப்பை கேரம் போட்டியில் இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.

மாலத்தீவு தலைநகர் மாலேயில் 7-ஆவது உலகக் கோப்பை கேரம் போட்டிகள் நடைபெற்றன. இதில் இந்தியா, ஆடவர், மகளிர் பிரிவுகளில் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. மகளிர் அணிகள் பிரிவில் தமிழக வீராங்கனைகள் கீர்த்தனா, மித்ரா, காஸிமா, மராட்டிய வீராங்கனை காஜல் குமாரி ஆகியோர் அடங்கிய இந்திய அணி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

ஒற்றையர் பிரிவில் எல் கீர்த்தனா உலக சாம்பியன் பட்டம் வென்றார், இரட்டையர் பிரிவில் கீர்த்தனா-காஜல் குமாரி பட்டம் வென்றனர். ஆடவர் சுவிஸ் லீக் பிரிவில் தமிழக வீரர் அப்துல் ஆசிப் பட்டம் வென்றார். ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் கே. சீனிவாஸ்-அபிஜித் தங்கமும், பிரசாந்த்-சந்தீப் இணை வெள்ளியும் வென்றனர். ஆடவர் அணிகள் பிரிவில் இந்தியா, இலங்கை, வங்கதேசம் முதல் மூன்றிடங்களையும், மகளிர் பிரிவில் இந்தியா, மாலத்தீவு, இலங்கை முதல் மூன்றிடங்களைப் பெற்றன.

## குவாஹாட்டி மாஸ்டர்ஸ்: இறுதி ஆட்டத்தில் மிதுன் - சன்ஸ்கர் மோதல்; தன்வி சர்மாவும் தகுதி!

குவாஹாட்டி மாஸ்டர்ஸ் சூப்பர் 100 பாட்மின்டன் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத்-சன்ஸ்கர் மோதுகின்றனர். மகளிர் சாம்பியன் பட்டத்தை வெல்ல காத்திருக்கிறார் தன்வி சர்மா.

அஸ்ஸாம் தலைநகர் குவாஹாட்டியில் நடைபெறும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள்கிழமை நடைபெற்றன. முதல் அரையிறுதியில் இந்தியாவின் சன்ஸ்கர் 21-19, 21-19 என்ற கேம் கணக்கில் இந்தோனேஷியாவின் டென்டியை 39 நிமிஷங்கள் நீடித்த ஆட்டத்தில் வீழ்த்தினார். மற்றொரு அரையிறுதியில் மிதுன் மஞ்சுநாத் சக வீரர் துஷார் சுவிரை 22-20, 21-8 என்ற கேம் கணக்கில் 42 நிமிஷ ஆட்டத்தில் வீழ்த்தி இறுதிக்கு தகுதி பெற்றார்.

தன்வி சர்மா அபாரம்: மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் இந்தியாவின் நட்சத்திரம் தன்வி சர்மா 21-18, 21-16 என்ற கேம் கணக்கில் மூன்றாம் நிலை வீராங்கனை ஜப்பானின் ஹினா அகேச்சியை 42 நிமிஷ ஆட்டத்தில் வீழ்த்தி இறுதிக்கு தகுதி பெற்றார். மற்றொரு அரையிறுதியில் சீன தைபே வீராங்கனை டுங் சியோ டங் 12-21, 21-17, 21-14 என்ற கேம் கணக்கில் இந்தியாவின் அஸ்மிதா சாலிஹாவை போராடி வென்று இறுதிக்குள் நுழைந்தார்.

## 48-ஆவது கோப்பை வென்ற லியோ மெஸ்ஸி..! உலகின் முதல் வீரர்!

புளோரிடா, டிச.8:

லியோனல் மெஸ்ஸி தனது 48-ஆவது பட்டத்தை வென்று அசத்தியுள்ளார். இன்டர் மியாமி அணி முதல்முறையாக எம்எல்எஸ் கோப்பையை வெல்ல மெஸ்ஸி முக்கிய காரணமாக இருந்துள்ளார்.

ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த லியோனல் மெஸ்ஸி (38 வயது) பார்சிலோனா எஃப்சி அணிக்காக அதிக போட்டிகளில் விளையாடியுள்ளார். பின்னர் பிஎஸ்ஜி அணியில் இருந்து இன்டர் மியாமி அணிக்கு கடந்த 2023 முதல் விளையாடி வருகிறார். எம்எல்எஸ் கோப்பை இறுதிப் போட்டியில் வான்கெவர் அணியை 3-1 என வீழ்த்தியது. இதில் மெஸ்ஸி 2 அசிஸ்ட்டுகளைச் செய்து அசத்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 48-ஆவது கரியர் பட்டத்தை வென்ற முதல் வீரராக முதலிடத்தில் நீடிக்கிறார். இந்த சீசனில் எம்எல்எஸ் தொடரின் மதிப்பு மிக்க வீரர் விருதையும் வென்றார். மேலும், தங்கக் காலணி (கோல்டன் பூட்) விருதையும் வென்று அசத்தினார்.

## அமெரிக்கா-உக்ரைன் பேச்சுவார்த்தை : ரஷ்யாவின் ஒப்புதல் அவசியம்

**நியூயார்க், டிச.8:**

உக்ரைன்-ரஷ்ய போர் நிறுத்தம் தொடர்பாக புடினுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு அமெரிக்க அதிகாரிகள் உக்ரைன் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். அமெரிக்காவின் மியாமி நகரில் மூன்றாவது நாளாக பேச்சுவார்த்தை நடந்துள்ளது. இந்நிலையில் உக்ரைன்-ரஷ்யப் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றால் அது ரஷ்யாவின் விருப்பத்தைப் பொறுத்தே இருக்கும் என்று இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டதாக அமெரிக்க தரப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் மீண்டும் மோதல்

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் ராணுவத்தினருக்கு இடையே எல்லையில் மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. சனிக்கிழமை அதிகாலையில் இரு நாட்டு அதிகாரிகளும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும் மோதலுக்கு காரணமாக இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். சுமார் இரண்டு மணி நேரம் மோதல் நீடித்ததாகக் கூறப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையே போர்ப் பதற்றம் உருவாகியுள்ளது.

## தேசத் துரோகிகளுக்கு மரணதண்டனை : புர்கினா பாசோவில் சட்டம்

புர்கினா பாசோவின் ராணுவ அரசு தேசத்துரோகம், பயங்கரவாதம், நாட்டை உளவுபார்க்கும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை கொடுக்கும் சட்டத்தை மீண்டும் கொண்டுவர உள்ளது. அந்நாட்டின் ஆட்சியை கவிழ்க்க பிரான்ஸ் உளவுத்துறை ரகசிய திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில் புர்கினா பாசோ இறையாண்மை, மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையிலான ஆட்சியை பாதுகாக்க இச்சட்டம் கொண்டு வரப்படுவதாக அந்நாட்டின் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

## இலங்கை டிட்வா புயல் : பலி எண்ணிக்கை 607

இலங்கையில் டிட்வா புயல் காரணமாக ஏற்பட்ட புயல் மழை, வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 607 ஆக உயர்ந்துள்ளது. நிலச்சரிவுகளால் பல இடங்களில் மக்கள் பெரும் பாதிப்பை சந்தித்துள்ள நிலையில் மத்திய மலைத்தொடர் பகுதியில் தொடர்ந்து மழை பெய்வதால் மீண்டும் நிலச்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 214 ஆக உள்ளது. அவர்களை தேடும் பணியும் நடைபெற்று வருகிறது. 2004 சுனாமிக்கு பிறகு அந்நாடு மிக மோசமான பேரழிவை சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்தை வாங்கியது நெட்பிளிக்ஸ்



பிரபல ஹாலிவுட் தயாரிப்பு நிறுவனமான வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்தை நெட்பிளிக்ஸ் நிறுவனம் வாங்கியுள்ளது. 100 ஆண்டுகளுக்கு மேலாக உலக அளவில் திரைப்பட தயாரிப்பு, விநியோகத்தில் முன்னணி நிறுவனமாக வார்னர் பிரதர்ஸ் உள்ளது. தற்போது அந்த நிறுவனத்தை அதன் உரிமையாளர்களிடம் இருந்து ரூ.7.44 லட்சம் கோடிக்கு நெட்பிளிக்ஸ் நிறுவனம் வாங்கியுள்ளது. தற்போது வார்னர் பிரதர்ஸின் ஸ்டுடியோக்கள், திரைப்படங்கள், ஹெச்.பி.ஓ. ஓடிடி தளம், இணைய தொடர்கள் அனைத்தும் நெட்பிளக்ஸ் கைவசமாகியுள்ளது.

# நியூயார்க் நகரில் 7 மாடி உயர பிரம்மாண்ட கிறிஸ்துமஸ் மரம் - களைகட்டும் விழாக்கால கொண்டாட்டம்

**வாஷிங்டன், டிச.8:**

ராக்பெல்லர் சென்டரில் வைக்கப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் மரம் சுமார் 50 ஆயிரம் மின்விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாட மக்கள் உற்சாகமாக தயாராகி வருகின்றனர்.

தங்கள் வீடுகளில் கிறிஸ்துமஸ் மரம், வண்ண விளக்குகள், இயேசு கிறிஸ்து பிறந்த வரலாற்றை எடுத்துரைக்கும் வகையிலான குடில்கள், உருவ பொம்மைகளை வைத்து கிறிஸ்தவ மக்கள் தங்கள் வீடுகளை அலங்காரம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில், அமெரிக்காவின் நியூயார்க் நகரம் தற்போது விழாக்கால கொண்டாட்டங்களால் களைகட்டியுள்ளது. குறிப்பாக நியூயார்க்கின் ராக்பெல்லர் சென்டர் பகுதியில் சுமார் 7 மாடி உயரம் கொண்ட பிரம்மாண்ட கிறிஸ்துமஸ் மரம் வைக்கப்பட்டுள்ளது. அந்த மரத்தின் மீது சுமார் 50 ஆயிரம் வண்ண மின்விளக்குகள் ஜொலிக்கின்றன.

அதன் உச்சியில் பிரகாசமாக ஒளிரக்கூடிய ஒற்றை நட்சத்திரம் வைக்கப்பட்டுள்ளது.



ராக்பெல்லர் சென்டரில் கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் வழக்கம் பல ஆண்டுகால பாரம்பரியமாக திகழ்ந்து வருகிறது. முதன்முதலில் கடந்த 1931-ம் ஆண்டு ராக்பெல்லர் சென்டர் கட்டிட பணியின்போது இத்தாலி, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்து வந்த கட்டிட தொழிலாளர்கள் சிலர் சேர்ந்து கிறிஸ்துமஸ் மரத்தை வைத்து பண்டிகையை கொண்டாடி யுள்ளனர்.

அதன் பிறகு 1933-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்துமஸ் பண்டிகையை வரவேற்கும் விதமாக ராக்பெல்லர் சென்டரில் கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் வழக்கம் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# வாடிகனில் 'ஏழைகளுடன் இசை நிகழ்ச்சி' - போப் லியோ பங்கேற்பு

**ரோம், டிச.8:**

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு வாடிகன் நகரில் 'ஏழைகளுடன் இசை நிகழ்ச்சி' என்ற பெயரில் இசைத் திருவிழா கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் போப் லியோ பங்கேற்று, இசை நிகழ்ச்சியை கண்டுகளித்தார். முன்னதாக போப் பிரான்சிஸ் முயற்சியால் முதன்முதலில் தொடங்கப்பட்ட ஏழைகளுக்கான இசை நிகழ்ச்சி, தற்போது 6-வது ஆண்டாக உற்சாகமாக கொண்டாடப்பட்டுள்ளது.



கனடாவை சேர்ந்த மைக்கேல் பப்லே உள்ளிட்ட புகழ்பெற்ற இசைக்கலைஞர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இசைக்கச்சேரிகளை அரங்கேற்றினர். வீடற்ற மக்கள், புலம்பெயர்ந்தோர், சிறப்பு அனுமதி பெற்ற சிறைக் கைதிகள் உள்ளிட்டோருக்கு இசை அனுபவத்தை வழங்குவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சி குறித்து போப் லியோ பேசுகையில், "இது ஒரு சாதாரண இசை நிகழ்வு அல்ல. அதை விட மிகச்சிறந்த செயல். ஆன்மீக இசை ஆன்மாவை உயர்த்தக் கூடியது. மனித கண்ணியம் என்பது பொருளாதாரத்தை சார்ந்தது அல்ல. நாம் அனைவரும் கடவுளால் நேசிக்க ப்படும் குழந்தைகள்" என்று தெரிவித்தார்.

# மிக முக்கிய காலகட்டத்தில் காஸா போர் நிறுத்தம்: கத்தார் பிரதமர்

**தோஹா, டிச.8:**

காஸா போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கட்டத்தில் உள்ளதாக கத்தார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல் ரகுமான் சனிக்கிழமை கூறினார்.

இது குறித்து தோஹாவில் நடைபெற்ற சாவதேச மாநாட்டில் அவர் பேசியதாவது:




காஸாவில் போர் நிறுத்தம் இன்னும் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. அங்கிருந்து இஸ்ரேல் படைகள் முழுமையாக வெளியேறி, காஸாவில் ஸ்திரத்தன்மை ஏற்படும் வரை அது முழுமையடையாது.

அந்த போர் நிறுத்தத்தின் முதல்கட்டம் நிறைவடைந்து, அடுத்தக்கட்டத்துக்கு செல்லும் நிலையில் உள்ளது. இதுதான் இந்த போர் நிறுத்தம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவதைத் தீர்மானிக்கும் முக்கிய தருணம் என்றார் அவர்.

அக்டோபர் 10-ஆம் தேதி தொடங்கிய போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல்கட்டத்தில் 20 பிணைக் கைதிகளையும் 27 பிணைக் கைதிகளின் உடல்களையும் ஹமாஸ் அமைப்பு ஒப்படைத்துள்ளது. அதற்கு பதிலாக, சுமார் 2,000 பாலஸ்தீன கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஒரு பிணைக்கைதியின் உடலை மட்டும் ஹமாஸ் இன்னும் ஒப்படைக்க வேண்டியுள்ளது. அந்த உடல் ஒப்படைக்கப்பட்டால் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல்கட்டம் முடிவுக்கு வந்துவிடும்.

## தென் ஆப்பிரிக்கா: கேளிக்கை விடுதியில் துப்பாக்கி சூடு - 11 பேர் பலி

**கேப்டவுன், டிச.8:**

தென் ஆப்பிரிக்க நாட்டின் கடெங் மாகாணம் புரொட்டோரியோ நகரின் சவுல்ஸ்வில்லெ பகுதியில் கேளிக்கை விடுதி உள்ளது. இந்த கேளிக்கை விடுதியில் நேற்று இரவு நடந்த நிகழ்ச்சியில் பலர் பங்கேற்றனர்.

இந்நிலையில், நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது கேளிக்கை விடுதிக்குள் துப்பாக்கியுடன் நுழைந்த கும்பல் அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர். இந்த துப்பாக்கி சூட்டில் சிறுவர்கள் உள்பட 11 பேர் உயிரிழந்தனர். மேலும், 14 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பியோடிய நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

## சூடானில் டிரோன் தாக்குதல்; பள்ளிக்குழந்தைகள் உள்பட 116 பேர் பலி

**கார்டுமின், டிச.8:**

ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு சூடான். அந்நாட்டில் கடந்த 2021-ம் ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயல்பட்டு வருகிறார். அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராக துணை ராணுவப்படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை ராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை ராணுவத்துடன் இணைக்க ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு துணை ராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது. இதனால், ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. துணை ராணுவம் கட்டுப்பாட்டில் இருந்த தலைநகர் கார்டூமினை கடந்த மார்ச் மாதம் ராணுவம் கைப்பற்றியது. அதேவேளை, ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் அப்பாவி பொதுமக்களும் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில், அந்நாட்டின் தெற்கு பெட்ரோபன் மாகாணம் கலோகி பகுதியில் துணை ராணுவப்படையினர் நேற்று டிரோன் மூலம் பள்ளிக்கூடம், அருகில் உள்ள கட்டிடங்கள் மீது தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 46 பள்ளிக்குழந்தைகள் உள்பட 116 பேர் உயிரிழந்தனர்.

## ராணுவ தளபதி குறித்து விமர்சனம்: இம்ரான்கானுக்கு பாகிஸ்தான் ராணுவம் கண்டனம்

**இஸ்லமாபாத், டிச.8:**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் தெக்ரீக்-இ-இன்சாஃப் கட்சி தலைவருமான இம்ரான்கானுக்கு ஊழல் வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு, ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சிறையில் இருந்தபடியே வெளியிட்ட அறிக்கையில் ராணுவ தளபதி அசிம் முனீரை இம்ரான்கான் கடுமையாக விமர்சித்திருந்தார். அசிம் முனீர் வரலாற்றில் மிகவும் கொடுங்கோல் சர்வாதிகாரி, மனநிலை சரியில்லாதவர் என்று அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், ராணுவ தளபதி அசிம் முனீரை விமர்சித்த இம்ரான்கானுக்கு பாகிஸ்தான் ராணுவம் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக பாகிஸ்தான் ராணுவ செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் அகமது ஷெரிப் சௌத்ரி கூறியதாவது: "இம்ரான்கானின் அரசியல் ஆசைகள் மிகவும் தீவிரமானதாகிவிட்டன. தான் அதிகாரத்தில் இல்லையானால் வேறெதுவும் இருக்கக்கூடாது என்று அவர் நம்புகிறார். அவருக்கு தற்போது மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர் துரோகிகளின் மொழியில் பேசுகிறார். சிறையில் இருந்து பொதுமக்களை ராணுவத்திற்கு எதிராக இம்ரான்கான் தூண்ட முயற்சிக்கிறார்; இதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. சிறையில் இம்ரான்கானை சந்திக்கும் நபர்கள் ராணுவத்திற்கு எதிராக கருத்தைப் பரப்ப பயன்படுத்தப்படுகிறார்கள் என அவர் கூறினார்.

# சிலி ஜனாதிபதி தேர்தல்: டிசம்பர் 14 இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு

**சாண்டியாகோ,டிச.8:**

சிலி நாட்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு டிசம்பர் 14 அன்று நடைபெற உள்ளது. 'யுனைடெட் ஃபார் சிலி' என்ற மத்திய-இடதுசாரி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சிலி கம்யூனிஸ்ட் கட்சியின் ஜீனட் ஜாரா போட்டியிடுகிறார்.




முதல் கட்ட தேர்தலில் 26.86 சதவீத வாக்குகளைப் பெற்று முதல் இடத்தை தக்க வைத்தார். தீவிர வலதுசாரியான ஹோசே அன்டோனியோ காஸ்ட் 23.93 சதவிகித வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடம் பெற்றார். ஜீனட் ஜாரா தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை மாதம் 7,50,000 பெசோஸ் (சுமார் 71,957 ரூபாய்) என அதிகரிக்க உள்ளதாக அறி வித்துள்ளார். மேலும் மின்சாரக் கட்ட ணத்தைக் குறைக்கும் திட்டம்.

தொழிற் சங்கங்களின் கூட்டு பேரம் பேசும் உரிமையை வலுப்படுத்துவது உள்ளிட்ட மக்கள் நலன் அடிப்படையிலான திட்டங்களை அறிவித்துள்ளார். குறிப்பாக உள்நாட்டு பிரச்சனையாக உள்ள பணமோசடியைக் கட்டுப்படுத்த பல வங்கிக் கணக்குகளின் ரகசியத் தன்மையை நீக்குவது. போதைப்பொருள்கடத்தல்குழுக்களின்ஆதிக்கத்தை மட்டுப்படுத்தும் வகையில் துப்பாக்கி கட்டுப்பாடுகளைக் கடுமையாக்குவதாகக் கூறியுள்ளார்.

தீவிர வலதுசாரிகள் சிலியில் குடியே றிய வெளிநாட்டு மக்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்யும் நிலையில் மக்களை பாதுகாக்கும் விதமாக தற்காலிகமாகப் பதிவு திட்டம் கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதே நேரத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ள காஸ்ட் வலதுசாரி தேசியவா தம், வெளிநாட்டினருக்கு எதிராக இன வெறியைத் தூண்டுவது, நலத்திட்ட உதவிக ளை குறைப்பது, கார்ப்பரேட் நிறுவனங்க ளுக்கான வரியை 27 சதவிகிதத்தில் இருந்து 23 சதவிகிதமாக குறைப்பது, தற்காலிக ஊழியர்களை நியமிக்கும் நிறுவனங்களுக்கான சலுகைகளை அதி கரிப்பது என வலதுசாரிக் கொள்கை களை முன் வைத்துள்ளார்.

குறிப்பாக சிலியின் முன்னாள் ஜனா திபதியாக இருந்த சோசலிஸ்ட் தலைவர் அலெண்டேவை அமெரிக்காவின் ஆதரவுடன் படுகொலை செய்து ஆட்சி அமைத்த பினோசெட் என்ற சர்வாதி காரியின் ஆதரவாளராகத் தன்னைக் காஸ்ட் அடையாளப்படுத்தி வருகிறார். முதல் கட்டத் தேர்தலை விட இரண்டாம் கட்டத் தேர்தலில் மிக கடுமையான போட்டி நிலவுகிறது.

முதல் கட்டத் தேர்தலில் முதல் இரு இடங்களை பிடித்த இடது மற்றும் வலது சாரி வேட்பாளர்களை விட மூன்று, நான்கு, ஐந்தாவது இடத்தில் மையவாத மற்றும் வலதுசாரி வேட்பாளர்கள் உள்ள னர். அவர்கள் முறையே 19.71, 13.94, 12.47 சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்த னர். தற்போது இந்த வாக்குகள் தீவிர வலதுசாரியாக உள்ள காஸ்டுக்கு ஆதர வாக திரும்பலாம் என கூறப்படுகிறது. எனினும் மையவாத கட்சி ஆதர வாளர்கள் உள்ளிட்ட இதர பகுதியினரின் வாக்குகளை பெறுவதற்கான தீவிரமான பிரச்சாரத்தில் ஜீனட் ஜாராவின் சிலி கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரி சோசலிஸ்ட் கட்சி கூட்டணி ஈடுபட்டுள்ளது வெற்றி வாய்ப்பை உருவாக்கித் தரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.